சில்பாலோக்க வேலைத்திட்டம்

# இஸ்லாம்

**மாணவர் கையேடு – I**

கல்வி பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சைப்
பெறுபேற்றை அதிகரிக்கும் வேலைத்திட்டம்
2021

மத்திய மாகாண கல்வித் திணைக்களம்
கண்டி

சில்பாலோக்க வேலைத்திட்டம்

**கல்விப் பொதுத்தராதரப்பத்திர (உயர்தர)ப் பரீட்சை**

**பெறுபேற்றை அதிகரிக்கும் வேலைத்திட்டம் - 2020**

# இஸ்லாம்

**மாணவர் கையேடு**

மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம் - கண்டி

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டின் வெற்றியானது தொடர்ச்சியானதாக காணப்படவேண்டுமாயின், அவர்கள் சுயகற்றலில் ஈடுபடுவதன் மூலமே சாத்தியமாக அமையும். மாணவர்களின் அடைவு மட்டத்தை மேலும் அதிகரிக்க வேண்டுமாயின் சுயகற்றலில் ஈடுபடுவது அத்தியாவசியமாகும். தம் கற்றல் செயற்பாட்டை முகாமை செய்யும் திறனை வளர்த்துக் கொள்வதற்கு, தனிப்பட்ட உந்துதல் அவசியமாவதுடன் இந்த நவீன உலகின் முன்னுரிமை வழங்க வேண்டிய விடயமும் அதுவே ஆகும்.

கொரோனா வைரசின் தாக்கம் காரணமாக 2019 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து உலக மக்களது செயற்பாடுகள் பல்வேறு சவால்களுக்கு உள்ளாகியுள்ளன. எனவே அனைத்து மானிட செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளோம். அந்தவகையில் மாணவர்களது கற்றல் செயற்பாட்டையும் நவீனமயப்படுத்தி மாற்றியமைக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

அந்த வகையில் மத்திய மாகாணத்தின் க.பொ.த (உ/த) மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை நவீனமயப்படுத்தி, ஓர் உயர்ந்த அடைவு மட்டத்திற்கு மாணவர்களை இட்டு செல்வதற்காக இந்த கையேட்டுத் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உங்கள் கல்வி செயற்பாட்டை வடிவமைத்துக் கொள்வதுடன், இச்செயற்பாட்டிற்கு பிள்ளைகளுக்கு துணைப்புரிவதற்கு மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், வலயக்கல்விக் காரியாலயம், கோட்டக்கல்விக் காரியாலயம் மற்றும் பாடசாலை சமூகம் போன்றோர் எந்த நேரத்திலும் தயார் நிலையிலுள்ளார்கள் என்பதை உங்களுக்கு மிக மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் உங்களது சுயகற்றல் செயற்பாட்டிற்காக ஆசிரியர் குழாம், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள் ஆகியோர் இது ஒரு முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டிய பொறுப்பு என்பதை அறிந்துள்ளதுடன் அதற்காக எந்த நேரத்திலும் உதவுவதற்கு தயாராக உள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும் 2021 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) மாணவர்களுக்காக இக்கற்றல் தொகுதியானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து வரும் உங்களது சகோதர சகோதரிகளும் பயன்படுத்தி பயன்பெற முடியும்.

இந்த கற்றல் தொகுதியானது, வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய பயன்படுத்தும் போது உங்களது உயர்கல்விக்கு உறுதுணையாக அமையும் என கருதுகின்றேன். மத்திய மாகாணத்தின் அடைவு மட்டத்தை உயர்த்தும் முன்னுரிமை வேலைத்திட்டமான “ சில்பாலோக்க” வேலைத்திட்டத்தின் கீழ் இச் செயற்றிட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக நிதியுதவி வழங்கியதுடன் ஆலோசனை வழிகாட்டல்களையும் வழங்கிய மத்திய மாகாணத்தின் பிரதான செயலாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த கற்றல் தொகுதியை வடிவமைப்பதற்கு பல்வேறு வகைகளிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இறுதியாக மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்களது எதிர்காலத்தின் கனவு நனவாக எனது நல்லாசிகள்.

E.P.T.K. ஏக்கநாயக்க,
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் செய்தி

இலங்கையில் Covid 19 இன் பரவல் ஆரம்பித்த உடன் பிள்ளைகளை இப்பாதிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக 2020 March 12ம் திகதியளவில் மூடப்பட்ட பாடசாலைகள் இன்று வரை தமது வழமையான செயற்பாடுகளுக்கு திரும்ப முடியாத நிலையிலேயே உள்ளன.

இந்நிலையை ஓரளவேனும் ஈடு செய்யும் முகமாக மத்திய மாகாணக் கல்வி திணைக்களமானது இணையம், தொலைக்காட்சி, வானொலி, தொலைபேசி போன்ற டிஜிட்டல் தளங்களுடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சி செய்து வருகிறது. எனினும் இந்த டிஜிட்டல் வளங்களை அணுகும் சந்தர்ப்பங்கள் அனைத்து மாணவர்களுக்கும் சீராக அல்லது ஒரே மாதிரியாக அமையாமலிருப்பது எமக்கு மிகப் பெரிய சவாலாக உள்ளது.

எனவே 2021ல் உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நன்மை கருதி இக்கற்றல் துணையேடு சகல பாடங்களுக்குமாக தயாரிக்கப்பட்டு மென் பிரதிகளாக பாடசாலைகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படுகிறது. ஆர்வம், விடாமுயற்சி, இலக்கு நோக்கிய பயணம் என்பன நமது சமூக எழுச்சிக்கான அடிப்படையான கல்வி சார் நடவடிக்கைகளாக கருதி இன்று நாம் எதிர் கொள்ளும் சவால்களை வெற்றிகரமாக முகம் கொடுக்க தயாராக வேண்டும்.

எனவே எமது இந்த முயற்சியானது பரீட்சைக்கு உங்களை தயார் செய்து கொள்வதிலும் வெற்றிபெற செய்வதிலும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. தவறவிடப்பட்ட கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை சுயகற்றலின் வாயிலாக அடையும் வகையில் இக் கையேடு வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாணவச் செல்வங்கள் இக் கையேட்டினை முறையாக பயன்படுத்தி பரீட்சையில் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

இவற்றை தயாரித்து வடிவமைத்து தந்து உதவிய ஆசிரியர்கள், வளவாளர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏ. ஆர். சத்தியேந்திரா,
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்,
கண்டி.

**முஸ்லிம் பாடசாலைகளுக்கான பிரதிக் கல்விப்பணிப்பாளரின் செய்தி**

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் க.பொ.த. (உயர்தரம்) 2021 மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை நவீனமயப்படுத்தி பரீட்சை பெறுபேற்றை மேம்படுத்தும் நோக்கில் இஸ்லாம் பாடத்திற்கான இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தின் **'ஸில்பாலோக்க'** வேலைத்திட்டத்தின் முக்கிய செயற்பாடாக இது காணப்படுகிறது. இதனூடாக மாணவர்களின் அடைமட்டம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறேன். 2021 ஆம் ஆண்டுடன் நிறைவடையாது தொடர்ந்துவரும் காலங்களில் மாணவரவ்கள் பயனடையும் வகையில் இக்கையேடு தயாரிக்கப்ட்டுள்ளது.

இச்செயற்றிட்டம் சிறப்பாக நடைபெற திட்டமிடலை மேற்கொண்டு வழிகாட்டல்களை வழங்கிய மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. E.P.T.K. ஏக்கநாயக்க அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இக்கையேடு உரிய முறையில் மாணவர்களுக்கு சகல வழிகளிலும் வழிப்படுத்திய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்களான திரு. A.L.M. ஸாருடீன் (அபிவிருத்தி), திருமதி. C.T.G. மாயாதுன்னே (நிர்வாகம்), திரு P.P.E.S. பத்திரகே (நிதி) அவர்களுக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. N.அலகக்கோன் (அபிவிருத்தி) அவர்களுக்கம் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

மேலும், இக்கையேட்டினை மாணவர்களுக்கு தேவையானவாறு இலகுவில் கற்றுக்கொள்ளும் வகையில் மிக நுணுக்கமாகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் தயாரித்த ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

A.L.M. ஹியான்

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களம்

கண்டி.

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

***E.P.T.K ஏக்கநாயக்க***
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***A.R சத்தியேந்திரா***
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

**A.L.M.சாருடீன்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

### *வழிகாட்டல்*

**A.L.M. ஹியான்**
பிரதிக்கல்விப் பணிப்பாளர் (முஸ்லிம் பிரிவு)
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***V.அமுதவல்லி***
உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பப்பிரிவு)
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

***P. விக்னேஸ்வரன்***
உதவிக் கல்விப் பணிப்பாளர்
மத்திய மாகாணக் கல்வித்திணைக்களம்

### *நூலாக்கக் குழு*

| | |
|---|---|
| எம். ஏ. நஹீம் | ஆசிரிய ஆலோசகர், கட்டுகஸ்தோட்டை கல்வி வலயம் |
| ஏ.எல்.எம். ரிஸ்வி | ஆசிரிய ஆலோசகர், கம்பளை கல்வி வலயம் |
| எம்.எஸ் ரியாஸ் முஹம்மத் | ஆசிரியர், ஸாஹிரா தேசிய பாடசாலை, கம்பளை |
| ஏ.ஆர். மூஸா கலீம் | ஆசிரியர், தெல்/உடிஸ்பத்துவ மு.ம.வி., உடிஸ்பத்துவ |
| ருவைஸா மன்ஸுர் | ஆசிரியர், மா/குரிவல ஹமீதியா கல்லூரி, உகுவெல. |
| எம்.ஐ.எப். நஸ்ரினா | ஆசிரியர், மா/குரிவல ஹமீதியா கல்லூரி, உகுவெல. |
| பீ.எப். ஹலீமா | ஆசிரியர், ஸாஹிரா தேசிய பாடசாலை, கம்பளை |

**சரவை பார்த்தல்**

எம்.எஸ் ரியாஸ் முஹம்மத்
ஆசிரியர், ஸாஹிரா தேசிய பாடசாலை, கம்பளை

ஏ.ஆர். மூஸா கலீம்
ஆசிரியர், தெல்/உடிஸ்பத்துவ மு.ம.வி., உடிஸ்பத்துவ

**அட்டைப்படம், கணிணி வடிவமைப்பு**

எம்.ஆர். பஸ்ருல் அலி
ஆசிரியர், ஸாஹிரா தேசிய பாடசாலை, கம்பளை

எம்.எப். பர்ஸானா
ஆசிரியர், ஸாஹிரா தேசிய பாடசாலை, கம்பளை

**பதிப்பு** 2020, மத்தியமாகாணக் கல்வித் திணைக்களம், கண்டி

**இக்கையேடு தொடர்பான வழிகாட்டல்கள்**

- இக்கையேடு க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கு பெறுபேற்றை அதிகரிக்கும் மேலதிக துணைச் சாதனமாகும்.
- தரம் 12 பாடத்திட்டத்தின் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டது.
- தரம் 12 பாடப்பரப்பில் காணப்படும் 5 தேர்ச்சிகளுள் பிரதான தேர்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- ஒவ்வொரு பாடத்திலும் எதிர்பார்க்கை வினாக்கள் விடைகளுடன் தொகுக்கப்பட்டுள்ளது.

**பாட உள்ளடக்கம்** **பக்கம்**


1. **இஸ்லாம் பூரண வாழ்க்கை முறை** **01**
    - இஸ்லாம் அறிமுகம்
    - இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள்
        - ரப்பானிய்யா
        - ஷுமூலிய்யா
        - வாகிஇய்யா
        - வஸதிய்யா / தவாஸுன்
        - ஸபாத் வல் முரூனா
        - ஆலமிய்யா

2. **பிரபஞ்ஞும் மனித வாழ்வு பற்றிய இஸ்லாமிய நோக்கு** **06**
    - இஸ்லாமிய நோக்கில் பிரபஞ்சம்
    - மனிதன்
    - மனித வாழ்வு பற்றிய நோக்கு

3. **இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கைகள்** **13**
    - அல்லாஹ்
    - மலக்குகள்
    - நுபூவ்வத், ரிஸாலத், ஹிதாயத்
        - கத்முந்நுபூவத்
        - மஹப்பதுர் ரஸுல் (ஸல்)
    - மறுமை நாள்
    - கழா கத்ர்

4. **ஈமானுக்கும் அஹ்லாக்குக்கும் இடையிலான தொடர்பு** **35**
    - ஈமானுக்கும் அமலுக்கும் இடையிலான தொடர்பு
    - ஈமானுக்கும் அக்லாக்கிற்கும் இடையிலான தொடர்பு
    - அமலுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
    - ஈமானுக்கும் அமலுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு

5. **அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதா** **39**

- தௌஹீதுக்கு முரணானவை
    - ஷிர்க்
    - குப்ர்

    - நிபாக்
    - ரித்தத்
    - இல்ஹாத்
- ஈமானில் முரண்பட்ட கொள்கை
    - ஷீஆ
    - கவாரிஜ்
    - மு.'.தஸிலா
    - வஹ்ததுல் வஜூத்

**6. இஸ்லாத்தின் அடிப்படை கடமைகள் பற்றிய விளக்கம் 58**
- இபாதத் எண்ணக்கரு விளக்கம்
    - வகைகள்
- அடிப்படை கடமைகள்
    - தொழுகை
        - முக்கியத்துவம்
        - நோக்கங்கள்
        - பயன்கள்
- அடிப்படை கடமைகள்
    - அஸ்ஸலாத்
        - முக்கியத்துவம்
        - நோக்கங்கள்
        - பயன்கள்
    - ஸகாத்
        - முக்கியத்துவம்
        - நோக்கங்கள்
        - செயற்படுத்தல்
        - பயன்கள்
    - அஸ்ஸவ்ம்
        - முக்கியத்துவம்
        - நோக்கங்கள்
        - பயன்கள்
    - அல்ஹஜ்
        - முக்கியத்துவம்
        - நோக்கங்கள்
        - பயன்கள்
    - ஹுகூகுல் இபாத்
        - தனக்குரிய கடமைகள்
        - பிறருக்குரிய கடமைகள்
        - ஏனையவற்றிற்குரிய கடமைகள்

**01. இஸ்லாம் பூரண வாழ்க்கை முறை**

- இஸ்லாம் அறிமுகம்
- இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள்
  - ரப்பானிய்யா
  - ஷுமூலிய்யா
  - வாகிஇய்யா
  - வஸதிய்யா ∴ தவாஸுன்
  - ஸபாத் வல் முரூனா
  - ஆலமிய்யா

# வினா – 01

**இஸ்லாம் எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்தி அது எல்லாக் காலத்துக்குமுரியது என்பதனை விளக்குக.**

- **மொழிக் கருத்து:**

  'இஸ்லாம்' - 'ஸில்ம்' என்ற அறபுச் சொல்லிலிருந்து தோன்றியுள்ளது.

  இச்சொல் சாந்தி, சமாதானம், அமைதி, பரிசுத்தம், பணிவு, பாதுகாப்பு, சரணடைதல், கட்டுப்படுதல் போன்ற கருத்துக்களைக் கொண்டுள்ளது.

- **பரிபாஷைக் கருத்து:**

  இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டுவந்த அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய வாழ்க்கை முறையைக் குறிக்கின்றது.

  'இஸ்லாம்' என்ற சொல், அல்லாஹ்வினால் வழங்கப்பட்டதாகும்; அவனிடத்தில் அங்கிகரிக்கப்பட்ட மார்க்கம் இஸ்லாமாகும்.

  ''நிச்சயமாக (தீனுல்) இஸ்லாம் தான் அல்லாஹ்விடத்தில் (ஒப்புக்கொள்ளப்பட்ட) மார்க்கமாகும்'' (03:19)

- நபி (ஸல்) அவர்களுக்கு 40 ஆவது வயதில் அருளப்பட்ட 'வஹியே' இஸ்லாமாகும்.
- இஸ்லாம் வழக்கில் ஒரு மதமாகக் கொள்ளப்பட்டாலும் முழுமையான வாழ்க்கை முறை.
- எல்லா நபிமார்களும் இஸ்லாத்தையே போதித்தமை.
  - ''(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: ''நிச்சயமாக என்னைத் தவிர வேறு கடவுள் இல்லை. எனவே, என்னையே வணங்குங்கள்'' என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை''. (அல்அன்பியா : 25)
  - நூஹ் நபி தன் சமூகத்தை நோக்கி ''நான் அவனுக்கு (முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களில் (ஒருவனாக) இருக்குமாறே ஏவப்பட்டுள்ளேன்'' (என்று கூறினார்)''. (யூனுஸ் : 72)
  - இப்றாஹிம், ய∴கூப் (அலை) கூறியதாக அல்குர்ஆன் கூறுகிறது, ''என் குமாரர்களே! அல்லாஹ் உங்களுக்குச் சன்மார்க்கத்தை (இஸ்லாமை) தேர்ந்தெடுத்துள்ளான். நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள்.'' (அல்பகரா : 132)
  - மூஸா (அலை) : ''என் சமூகத்தாரே! நீங்கள் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டு, மெய்யாகவே அவனை வழிபடுபவர்களாக (முஸ்லிம்களாக) இருந்தால் அவனையே பூரணமாக நம்பி (உங்கள் காரியங்களை ஒப்படைத்து) விடுங்கள்'' என்று கூறினார்''. (யூனுஸ் : 84)

- ஈஸா (அலை) யிடம் ஹவாரிய்யூன்கள் : ''நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டுள்ளோம். திடமாக நாங்கள் (அவனுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாக இருக்கின்றோம், என்று நீங்கள் சாட்சி சொல்லுங்கள்'' எனக் கூறினர்''. (ஆல இம்ரான் : 52)

# வினா – 02

**இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள் ஐந்தைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டை விளக்குக.**

உலகில் தோன்றிய எல்லாச் சமயங்கள், கொள்கைகளை விட இஸ்லாம் கொண்டிருக்கின்ற சிறப்புக்களின் காரணமாகவே ஏனையவற்றிலிருந்து வேறுபடுகின்றது.

**இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள்:**

1. தெய்வீகத் தன்மை கொண்டிருத்தல் (ரப்பானியா)
2. சமனிலைத் தன்மை கொண்டிருத்தல் (தவாஸுன்)
3. நடுநிலை பேணும் மார்க்கமாக இருத்தல் (வஸதிய்யா)
4. மானுடப்பண்பு கொண்டிருத்தல் (இன்ஸானிய்யா)
5. பூரணத்துவம் கொண்டிருத்தல் (ஷுமூலிய்யா)
6. நடைமுறை சாத்தியமான மார்க்கமாக இருத்தல். (வாகிஇய்யா)
7. சர்வதேசமயமான மார்க்கம் (ஆலமிய்யா)
8. தெளிவான மார்க்கமாக இருத்தல் (வுழூஹ்)
9. எல்லாக் காலத்துக்கும் இடங்களுக்கும் பொருத்தமானதாக இருத்தல்
10. எல்லா மக்களுக்கும் பொதுவானதாக இருத்தல்.
11. நெகிழும், நெகிழாத் தன்மை கொண்டது.
12. ஆன்மீகத்துக்கும் லௌஹீகத்துக்குமான வழிகாட்டல்களைக் கொண்டிருத்தல்.
13. தனித்துவமான ஆதாரங்களைக் கொண்டிருத்தல்.
14. சமூக மார்க்கமாக இருத்தல்.

# வினா – 03

**''இஸ்லாம் தெய்வீகத் தன்மையானது'' - (ரப்பானிய்யா) எனன்பதை விளக்குக.**

- 'ரப்புன்' (رَبٌّ) - 'ருபூபிய்யா' - 'ரப்பானீ' - 'ரப்பானிய்யா'.

  'ரப்பானிய்யா' என்பது, இறைவனோடு தொடர்பானது அல்லது படைத்து, காத்து, பரிபாலிக்கும் இரட்சபனை சார்ந்தது எனும் கருத்தைத் தருகின்றது.
- ரப்பானிய்யா எனும் பண்பு இஸ்லாத்தின் சிறப்பம்சங்களில் முதன்மையானது.
- உலக சமயங்களிற் சில, தனி நபர்களால் உருவாக்கப்பட்டவை. பௌத்தம் - சமணம் - சீக்கியம் - சொராஸ்டரியம்…

- இறைவழிகாட்டல் மூலமும் நபியொருவரின் வஹி மூலமாக பெறப்பட்ட அறிவையும், வழிகாட்டலையும் கொண்டு உருவாகியவை :- யூதம், கிறிஸ்தவம், போன்றன.
- அல்குர்ஆனுக்கு முன்னால் அருளப்பட்ட வேதங்கள் காலப் போக்கில் திரிபடைந்தன. அதுபோன்ற அழிவுகள், திரிபுகள், இடைச் செருகல்கள், சிதைவுகள் அல்குர்ஆனுக்கு ஏற்படவில்லை.
- எனவே, நூறு விகிதம் பாதுகாக்கப்பட்ட இறைவனை சார்ந்த ஒரே மார்க்கம் இஸ்லாமாகும்.
- இஸ்லாம் ஓரிறைக் கொள்கைக்கு வழிகாட்டும் மார்க்கம்
- இஸ்லாம் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையிலான தொடர்பினை வளர்க்கின்றது.

- இஸ்லாம் வழிகாட்டலிலும், அடிப்படைகளிலும், நோக்கத்திலும் மற்றும் இலட்சியத்திலும் ரப்பாகிய அல்லாஹ்வைச் சார்ந்திருக்கும் பண்பினை பெற்றுள்ளது.
- ஓர் அடியான், தனது சிந்தனையிலும், செயலிலும் 'ரப்பானீயாக' வாழ்தல் அவசியம்.
- அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காகவே வாழுதல் என்பது ஒரு ரப்பானியின் பண்புகளில் ஒன்றாகும்.
- அல்லாஹ்வை ஏகனாகவும், வணக்கத்திற்கு உரியவனாகவும், சட்டமியற்றும் அதிகாரமுடையவனாகவும், வழிகாட்டு பவனாகவும் ஏற்கின்ற இஸ்லாம் அல்லாஹ்வுடனான தொடர்பை எப்போதும் வளர்க்கின்றது.

  ''அன்றியும், (அவனின்) பிடரி நரம்பை விட நாம் அவனுக்கு சமீபமாகவே இருக்கின்றோம்'' (50:16)

  ''நீங்கள் வேதத்தைக் கற்றுக் கொடுத்துக்கொண்டும், அ(வ்வேதத்)தை நீங்கள் ஓதிக் கொண்டும் இருப்பதனால் 'ரப்பானீ' (இறைவனை வணங்கி அவனையே சார்ந்திருப்போர்)களாகி விடுங்கள்'' (03:79)

  - ஓர் அடியான் தனது முழு வாழ்வையும் வணக்கமாக மாற்றுவதன் ஊடாக 'ரப்பானீயாக' வாழுதல். அதற்குறிய வழிமுறைகளாக,
    1) இறைவனிடம் உதவி தேடுதல் (துஆ).
    2) வணக்க வழிபாடுகள் - கிரியைகள்.
    3) இறை சட்டங்களுக்கு அடிபணிதல்.

## வினா – 03

**'இஸ்லாம் பரிபூரணத் தன்மையானது' என்ற கூற்றை விளக்குக.**

- இஸ்லாம் எவ்வித குறைபாடுகளும் அற்ற பரிபூரணத் தன்மை கொண்டது.
- இஸ்லாத்தின் முழுமைத் தன்மையை அல்-குர்ஆனும், அல்-ஹதீஸும் உறுதி செய்கின்றது.

  ''இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன்...'' (05:03).

  ''இவ்வேதத்தை ஒவ்வொரு பொருளையும் தெளிவாக்குகிறதாக உம்மீது நாம் இறக்கி வைத்திருக்கிறோம்''. (அந்நஹ்ல் : 89)

  ''எனக்கும் ஏனைய நபிமார்களுக்கும் இடையில் உள்ள தொடர்புக்கு உதாரணம்,...'' (புஹாரி, முஸ்லிம்).
- எல்லாக் காலத்துக்குமான தூது – ஆதம் (அலை) தொடக்கம் இறுதித்தூதர் வரையானது.
- உலகம் முடியும் வரை பொருந்தக் கூடிய பரிபூரண வாழ்க்கைத் திட்டம்
- மனித வாழ்க்கைக்கான பூரணமான வழிகாட்டலைக் கொண்டுள்ளது.
- அவனது வாழ்வின் அனைத்துக் கட்டங்களுக்குமான வழிகாட்டல் (கருவில் இருந்து – கப்ரு வரை)
- வாழ்வின் அனைத்துத் துறைகளுக்கும் பூரண வழிகாட்டலை முன்வைக்கும் மார்க்கமாகும்.
- ஆன்மீகத்தையும், லௌகீகத்தையும் உள்ளடக்கிய பூரணத்துவமான மார்க்கமாகும்.
- இஸ்லாம் முழு சமூகத்திற்குமான பூரணமான மார்க்கமாகும். ''மனிதர்களே! மெய்யாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கிறேன்''. (அல்அ.்.ராப் - 158)
- இஸ்லாம் முழுமையான கடவுள் கொள்கையை (தௌஹீதை) முன்வைத்துள்ளது.
- இஸ்லாம் பூரணத்துவம் வாய்ந்த ஒழுக்கக் கோட்பாடுகளை முன்வைக்கின்றது.

- இஸ்லாம் அறிவில் பூரணத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

## வினா – 04

**''இஸ்லாம் சர்வதேசமயமானது'' - (அல்-ஆலமிய்யா) எனன்பதை விளக்குக**

- இறைவனை 'ரப்புல் ஆலமீன்' (உலகத்தாரின் இறைவன்) என அறிமுகம் செய்கின்றமை, ''புகழ் அனைத்தும் உலகத்தாரின் இரச்சகம் அல்லாஹ்வுக்கே''. (அல்பாதிஹா :1)
- அதன் தூதரை 'காப்பதன் லின்னாஸ்' (மனித குலம் முழுவதற்குமுரியவர்) என அல்குர்ஆன் அறிமுகம் செய்கின்றமை, ''(நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்குமாகவேயன்றி அனுப்பவில்லை''. (ஸப.ஃ. : 28)
- அல்குர்ஆனின் வழிகாட்டல்களை 'ஹுதல் லின்னாஸ்' (முழு மனிதகுலத்துக்குமான நேர்வழிகாட்டி) என அறிமுகப்படுத்துகின்றமை, ''மனிதர்களுக்கு முழுமையான வழிகாட்டியாகவும் அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது''. (அல்பகரா : 185)
- அனைத்து நாட்டவருக்கும், சமூகத்தவருக்கும், இனத்தவர்களுக்கும் பொருந்தக் கூடியது.
- மனிதர்களை இனம், தேசியம், நிறம், மொழி, தாய் நாடு என்றெல்லாம் வேறுபாடுத்திப் பார்க்கவில்லை, ''உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். (அலஹுஜராத் : 13)
- அனைவரும் ஒரு தாய், தந்தைக்குப் பிறந்தவர்களே என்ற சர்வதேச சமத்துவத்தை முன்வைக்கின்றது.

  ''மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஒரே ஆணிலிருந்தும் ஒரே பெண்ணிலிருந்தும் படைத்தோம்'' (49:13)
- இஸ்லாம் வழங்கியுள்ள கடமைகளும், உரிமைகளும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானவை.

## வினா – 05

**அஸ்-ஸபாத் வல்-முருனா -இஸ்லாம் நெகிழும் நெகிழாத் தன்மைகளைக் கொண்டுள்ளது என்பதை விளக்குக.**

- அஸ்-ஸபாத்' என்பது, நிலையானது அல்லது மாறாத் தன்மையைக் குறிக்கின்றது.
- 'முரூனா' என்பது, காலங்கள் - இடங்கள் - சூழல்கள் - சந்தர்ப்பங்கள் போன்றவற்றைப் பொறுத்து மாற்றமடையும் பண்பைக்குறிக்கின்றது. கூறியுள்ளது.
- நெகிழாத் தன்மை இந்நாகரிகத்தின் தனித்துவத்தைக் காக்கின்றது; நெகிழும் தன்மை கால மாற்றத்தால் அடித்துச் செல்லாமல் நிலைத்திருக்கத் துணை செய்கின்றது.
- அல்குர்ஆனில் :
  - ''மு.ஃ.மின்கள், மு.ஃ.மின்களையன்றி கா.ஃ.பிர்களைத் தம் உற்ற துணைவர்களாக எடுத்துக்கொள்ள வேண்டாம்'' என்று நெகிழாத விதியைக் கூறி, ''அவர்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அன்றி'' (அலஇம்ரான் : 28) என்று நெகிழும் அமைப்பை கூறியுள்ளது.

- ○ ''வார்த்தைகளில் தீயவற்றை பகிரங்கமாகக் கூறுவதை அல்லாஹ் விரும்பவில்லை'' என்று கூறிய அல்லாஹ், ''அநியாயம் செய்யப்பட்டவர்களைத் தவிர'' (அந்நிஸா : 148) என நெகிழும் விதியை கூறியுள்ளான்.
- ○ தடுக்கப்பட்ட உணவு வகைகளைக் கூறிய அல்குர்ஆன், ''வரம்பு மீறாமல் (இவற்றை உண்ண) நிர்ப்பந்திக்கப்பட்டால் அவர் மீது குற்றமில்லை''. (அல்பகரா : 173) என்று நெகிழும் விதியை கூறியுள்ளது.
- ○ ''எனது மகள் பாதிமா களவெடுத்தாலும் கையை வெட்டுவேன்'' (புஹாரி, முஸ்லிம்) எனக் கூறிய நபியவர்கள், ''போர்க் காலங்களில் கையை வெட்ட வேண்டாம்'' (அஹ்மத்) எனத் தடுத்திருந்தார்கள்

- அல்குர்ஆன், ஸுன்னா திட்டவட்டமாக கூறும் சட்டங்களில் நெகிழ்ச்சிக்கு இடமில்லை. ஆனால், இஜ்திஹாதுக்கு உட்பட்ட விடயங்களில் நெகிழ்ச்சிக்கு இடமளித்துள்ளது.
- உதாரணமாக, அவ்ரத்தை மறைத்தல் என்பது நெகிழாமல் நிற்க, மறைக்கும் பொருள், முறை என்பன காலத்துக்கும் சூழ்நிலைக்கும் பொருத்தமான முறையில் நெகிழ்ந்து கொடுக்கின்றது.

## வினா – 06

**இஸ்லாம் 'வஸதிய்யா' எனும் நடுநிலைத் தன்மைகளைக் கொண்டுள்ளது என்பதை விளக்குக.**

- அல்குர்ஆன் இஸ்லாமிய சமூகத்தை நடுநிலை சமூகம் என விளக்கின்றமை, ''நாம் உங்களை ஒரு நடு நிலையுள்ள உம்மத்தாக (சமுதாயமாக) ஆக்கியுள்ளோம்''. (அல்பகரா : 143)
- 'வஸதிய்யா' என்பதற்கு 'இஸ்திகாமா' என்ற சொல்லும் பயன்படுத்தப்படும். தினமும் ஐவேளை தொழுகையில், ''இறைவா எம்மை நேரான வழியில் (இஸ்திகாமத்) செலுத்துவாயாக''
- மனிதன் பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக அமர்த்தப்பட்டுள்ளமை. பகுத்தறிவு, வஹியின் அறிவு என்பவற்றிற்கிடையில் சமநிலை காணும் மார்க்கம்.
- இபாதத், இமாரத், கிலாபத் என்ற பணிகளில் நடுநிலை பேணுகின்றமை.
- ஹுகூகுல் இபாத், ஹுகூகுல்லாஹ் எனும் பகுதிகளில் நடுநிலை பேணுகின்றமை.
- தனி மனிதன் - சமூகம் இரண்டுக்கும் இடையில் சமநிலை பேணல்.
- இஸ்லாத்தின் சிறப்பம்சங்களில் எதிர்மறைகளுக்கிடையேயுள்ள முரண்பாடுகளை உடன்பாடாக அமைத்திருப்பது மிக முக்கியமான அம்சமாகும்.
  - ○ ஆண்- பெண், தனிமனிதன் - சமூகம், வஹி - பகுத்தறிவு, நெகிழ்வு - நெகிழாமை, வாழ்வை துய்த்தல் - துறத்தல், முஸ்லிம் - காபிர், இம்மை- மறுமை, ஆன்மீகம் - உலகியல், இலட்சியவாதம்- யதார்த்த வாதம், தெய்வீகத் தன்மை- மானுடத் தன்மை என்பவற்றுக்கிடையில் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து விடாமல் நடுநிலையான போக்கை விதந்துரைத்துள்ளது.
- எங்கும், எப்போதும், எதனையும் சமநிலைத் தன்மையோடு நோக்கவும், செய்யவும், தூண்டுகின்றது. அதில் ரப்பானியத் என்ற தெய்வீகத் தன்மையும், இன்ஸானிய்யத் என்ற மானுடத் தன்மையும் முரண்படாமல் இயங்கி வருகின்றது. தீவிரவாதம் மிதவாதம் என்பவற்றுக்கிடையில் வஸதிய்யா என்ற நடுநிலைப் போக்கைக் கையாளுகின்றது.
- எனவே, இஸ்லாம் எல்லாக் காலத்துக்கும், எல்லா இடத்திற்கும் ஏற்றது.

## வினா – 07

**இஸ்லாம் - வாக்கிஇய்யா - நடைமுறைச் சாத்தியமான நிரந்தர தூது என்பதை விளக்குக.**

- முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற நாடுகளுக்கும், சிறுபான்மையாக வாழுகின்ற இலங்கை போன்ற நாடுகளுக்கும், துருவப் பகுதிகளில் வசிக்கும் மனிதர்களும் பின்பற்றுவதற்கு ஏற்ற ஒரு மார்க்கமாகவே விளங்குகின்றது.
- இஸ்லாம் முன்வைக்கும் அகீதா, இபாதத், அக்லாக், குற்றவியல் சட்டங்கள், ஹலால் - ஹராம் தொடர்பான சட்டங்கள், குடும்பவியல் சட்டங்கள் அனைத்தும் நடைமுறை சாத்தியமானதாகவும் எக்காலத்துக்கும் எவ்விடத்துக்கும் பொருந்தும் அமைப்பிலும் காணப்படுகின்றமை.

**நிரந்தரத் தூது - காலிதா**

- இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரம் அல்குர்ஆனும், ஸுன்னாவுமாகும்.
- அல்குர்ஆனுக்கு முன்னால், அருளப்பட்ட வேதங்கள் காலப் போக்கில் திரிபடைந்தன.
- இஸ்லாம் என்னும் இம்மார்க்கம் உலகம் அழியும் வரை நிரந்தரமாக உயிர்வாழும் தன்மை கொண்டது.

**பிரபஞ்சும் மனித வாழ்வு பற்றிய இஸ்லாமிய நோக்கு**
- இஸ்லாமிய நோக்கில் பிரபஞ்சம்
- மனிதன்
- மனித வாழ்வு பற்றிய நோக்கு

## வினா – 01

**பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தினை ஆராய்க.**

**பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டம்**

- மனித பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டு மிகப்பரந்தும் விரிந்தும் வியாபித்து நிற்கும் அண்டப்பெருவெளியையும் அதனுள் அடங்கும் சகல கூறுகளையும் குறிக்கும் வார்த்தை பிரபஞ்சமாகும். அதாவது, அல்லாஹ்வையும் அவனது அர்ஷையும் தவிர்ந்த அனைத்தையும் குறிக்க பயன்படுத்தப்படுகிறது.

**பிரபஞ்சம் தொர்பான கருத்துக்கள் :**

2. **பரிணாம வளர்ச்சிக் கோட்பாடு** :

- பிரபஞ்சம் தானாக தோன்றி படிப்படியாக வளர்ச்சி கண்டது.
- கி.மு. 5 ஆம் நூற்றாண்டு முதல் கிரேக்கரிடையே செல்வாக்கு பெற்றிருந்தது.
- கிரேக்க சிந்தனையாளர்கள் இதன் முன்னோடிகள்.
- கி.பி. 15 ஆம் நூற்றாண்டு ஐரோப்பாவின் அறிவியல் புரட்சி இக்கொள்கையில் புதிய எண்ணக்கருக்கள் தோன்ற காரணமாயின.

- டார்வின் போன்றோரது சிந்தனைகள் இதன் செல்வாக்குக்கு காரணமாகியமை.

**2. படைத்தல் கோட்பாடு :**

1. மதச்சார்பான சிந்தனைகள் இக்கேட்பாட்டினை முன்வைத்தன.
2. இச்சிந்தனையின்படி பிரபஞ்சத்தின் ஒவ்வொரு கூறும் தனித்தனியாக படைக்கப்பட்டமை. பரிணாமத்துக்கு எவ்வித சான்றும் இல்லை என்பது இத்துறை சார்ந்தோரின் கருத்து.

**இஸ்லாத்தின் நிலைப்பாடு :**

- வஹியின் அடிப்படையில் உருவானது.
- ஒன்றுமில்லாத நிலையில் அல்லாஹ்தான் இதனைப் படைத்தான். எனவே, இதற்கு ஓர் ஆரம்பம் உண்டு. 'வானங்கள் பூமியைப்படைத்து அதில் இருளையும் ஒளியையும் உண்டாக்கிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்'' (அல்குர்ஆன்)
  'அவனே வானங்களையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான். இரவையும் பகலையும், சூரியனையும் சந்திரனையும் படைத்தான்''. (அல்குர்ஆன்)
- படைத்தது மாத்திரமன்றி ஒவ்வொன்றுக்கும் ஒரு விதியையும் நிர்ணயத்தையும் விதித்தான். 'அனைத்தையும் படைத்த அவன் ஒவ்வொன்றுக்கும் ஒரு விதியையும் பிரமாணத்தையும் ஏற்படுத்தினான்'' (அல்குர்ஆன்)
- பிரபஞ்சத்தை வீணாகப் படைக்கவில்லை. 'வானங்களையும் பூமியையும் நாம் சத்தியத்தின் அடிப்படையில் படைத்துள்ளோம்'' (அல்குர்ஆன்)
- பிரபஞ்சத்தின் இயக்கம் குருட்டுத்தனமானதல்ல. ''சூரியன் அதற்குரிய விதியில் சுழன்றுகொண்டிருக்கிறது. இதுவே அதற்கு இறைவன் விதித்த விதியாகும்'
- கிறிஸ்தவம் போன்ற சில மதங்களும், நவீன விஞ்ஞானமும் பிரபஞ்சத்தை இயக்குவிக்கும் சக்தி இருப்பதை ஏற்கின்றன. அந்தவகையில் அந்த சக்தியே அல்லாஹ் என இஸ்லாம் அறிமுகப்படுத்தி, பிரபஞ்சத்தில் அவனது நிலை குறித்து தெளிவுபடுத்துகிறது.
- பிரபஞ்சமும் அதில் உள்ளவைகளும் அல்லாஹ்வின் நாட்டப்படி ஒரு நாள் அழியும்.
- பிரபஞ்சம் அல்லாஹ்வின் ஆற்றலின் வெளிப்பாடு என்பதைக் கூறும் அல்குர்ஆன் அல்லாஹ்வை எவ்வாறு அறியலாம் என்பதை தெளிவுபடுத்துகிறது.
- இறைவனின் யதார்த்தத்தினை விளங்க முடியாவிட்டாலும் அவனது படைப்புக்களில் அவனது ஆற்றல், விவேகம், மாட்சிமை முதலான அம்சங்கள் பிரதிபலிக்கின்றன.
- எனவேதான் அல்குர்ஆன் படைப்பினங்கள் குறித்து சிந்திக்கத் தூண்டுகிறது.

# வினா – 02

**மனிதன் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தினை ஆராய்க.**

**மனிதன் பற்றிய பிற மதங்கள், கொள்கைகள்**

- முற்பிறவியில் செய்த கரும வினைகளை அனுபவிக்க மனிதன் பிறக்கின்றான். – பௌத்த மதம்
- ஆதம் ஏவாலின் பாவத்தை சுமந்தவனாக மனிதன் பிறக்கின்றான் - கிறிஸ்தவ சமயம்

- மனிதன் பேசும் குரங்கு – டாவினிஸம்
- மனிதன் ஒரு பொருளாதாரப் பிராணி – கால்மார்க்ஸ்
- மனிதன் ஒரு சமூகப் பிராணி – சமூகவியல்

**மனிதன் பற்றிய இஸ்லாமிய நோக்கு**

- **மனித தோற்றம்**
- ''நிச்சியமாக (ஆரம்பத்தில் முதல்) மனிதரைக் களிமண்ணின் சத்திலிருந்து சிருஷ்டித்தோம்'' (23:12)
- **இரத்தக்கட்டடியிலிருந்து படைத்துள்ளான், ஒரு ஆண், ஒரு பெண்ணிலிருந்து படைத்துள்ளான்**
- **மனிதன் அல்லாஹ்வால் அறிவூட்டப்பட்ட நிலையிலேயே உலகுக்கு அனுப்பப்பட்டுள்ளான்** ''பின்பு (ஆதமைப் படைத்து) ஆதமுக்கு(ப் பூமியிலுள்ள) எல்லாப் (பொருட்களின்) பெயர்களையும் (அவற்றியன் தன்மைகளையும்) கற்றுக் கொடுத்தான்'' (2:31)
- **மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி (கலீபா)**
    - ''நான் பூமியில் எனது பிரதிநிதியைப் படைக்கப்போகின்றேன்'' (அல்குர்ஆன்)
- **மனிதன் இறை கண்ணியத்தை சுமந்தவன்**
    - ''நாம் ஆதமின் சந்ததியை கண்ணியப்படுத்தியுள்ளோம்'' (அல்குர்ஆன்)
- **இறை ஆன்மா ஊதப்பட்ட உயர்ந்த சிருஷ்டி மனிதன்** : ''நிச்சியமாக நாம் மனிதனை மிக அழகிய அமைப்பில் படைத்துள்ளோம்'' (அல்குர்ஆன்)
- மனித உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றையும் கொண்டுள்ளான்.
- **மனிதனுக்கு நேர்வழி காட்டும் பொறுப்பை அல்லாஹ் ஏற்றுள்ளான்**
    - ''நிச்சியமாக என்னுடைய நேர்வழி உங்களிடம் வரும். ஏவர் என்னுடைய நேர்வழியைப் பின்பற்றுகின்றாரோ அவர் வழி தவறமாட்டார். நுட்டமடையவும் மாட்டார்'' (2:38)
- **மனிதன் பொறுப்புக்களுக்கு வகைக் கூற கடமைப்பட்டவன்**
- ''நீங்கள் ஒவ்வொருவரும் மெய்ப்பாளர்கள். வேரவர் பொறுப்பு பற்றி விசாரிக்கப்படுவீர்கள்'' (முஸ்லிம்)
- **சுதந்திரத் தெரிவு கொடுக்கப்பட்டுள்ளது**

**மனிதனின் கடமைகள், பொறுப்புக்கள்**

**1. இபாதத் - (வணங்கிவழிபடல்)**
''நான் மனித வர்க்கத்தையும் ஜின் வர்க்கத்தையும் என்னை வணங்குவதற்காகவேயன்றி படைக்கவில்லை'' (அல்குர்ஆன்)

**2. இமாரத் (பூமியை வளப்படுத்தல்)**
''அவன் தான் உங்களை பூமியிலிருந்து படைத்து அதனை வளப்படுத்துமாறு கேட்டுக் கொண்டான்'' (அல்குர்ஆன்)

**3. கிலாபத் (ஆட்சி நிர்வகிப்பு)**
''அவன் உங்களை பூமியிலிருந்து படைத்தான். ஆந்தப்பூமியை நிர்வகிக்கும் படி உங்களைப் பணித்தான்'' (அல்குர்ஆன்)

## வினா – 03

**மனித வாழ்வு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தினை ஆராய்க.**

- வாழ்வு என்பது, மனிதன் மனிதனது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெறும் செயற்பாடுகளாகும்.
- பிரபஞ்சம் மனிதனுக்காக படைக்கப்பட்டுள்ளதால் அதனை உணர்ந்து பயன்படுத்த வேண்டும்.
- உலக வாழ்வை சமநிலையாக அமைத்துக் கொள்ள வேண்டும்.
- இவ்வாழ்வு சோதனை.
- இதில் பூரண கூலி பெற முடியாது.
- இந்த வாழ்வை பயன்படுத்தி மறுமையை தேட வேண்டும்.
- இவ்வுலகம் மறுமையின் விளைநிலம் (அல்ஹதீஸ்)

### பகுதி i

**மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

**01** அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் நிறைவேற்ற வேண்டிய இபாதத், கிலாபத், இமாரத், பணிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் கிலாபத் பணிகளை உள்ளடக்கிய தொகுதி,

A காடுகளை அழியாது பாதுகாத்தல்
B இறை சட்டங்களை உலகில் நடைமுறைப்படுத்தல்
C கடமைகளை நிறைவேற்றல்
D மனித உரிமைகைள நிறைவேற்றல்
E சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல்
F பெற்றொருக்குரிய கடமைகளை நிறைவேற்றல்

I AB  II BD  III BF  IV CD  V DE

**02** ஒரு முஸ்லிம் நிறைவேற்ற வேண்டிய பணிகளுள் ''கிலாபத்'' என்பது,

I பூமியை வளப்படுத்துவது
II அல்லாஹ்வை வணங்குவது
III அல்லாஹ்வின் பிரதிநிதியாக தொழிற்படுவது
IV உலகை ஆட்சி செய்வது
V ஐம்பெரும் கடமைகளை நிறைவேற்றுவது

**03** யாவும் இயற்கை எல்லாம் தற்செயல் என்பதை குறிப்பிடுபவர்கள்,

I ஆன்மீகவாதிகள்
II கிறிஸ்தவர்கள்
III பௌத்தர்கள்
IV நாஸ்திகவாதிகள்
V இந்துக்கள்

**04** பிரபஞ்ச வளங்களை உரிய முறையில் பயன்படுத்தி மனித நலனுக்காக உழைப்பதைக் வலியுறுத்துவது,

I இபாதத்  II கிலாபத்  III விலாயத்  IV ஹிமாயத்  V இமாரத்

**05** இஸ்லாத்தின் தனிப்பண்புகளுள் பிரதானமானது,

I இன்ஸானிய்யா
II அஷ்-ஷுமூல்
III அல்வஸதிய்யா
IV அர்ரப்பானிய்யா
V அல்லாகிஇய்யா

**06** ஹஸாஇஸுல் இஸ்லாம் என்பது,

I இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள்
II இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள்
III இஸ்லாத்தின் மூலாதாரங்கள்
IV இஸ்லாத்தின் சட்டங்கள்
V இஸ்லாத்தின் போதனைகள்

**07** இஸ்லாம் தொடர்பான சில கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன

A இஸ்லாம் நெகிழும் தன்மை கொண்டது
B இஸ்லாம் முழு மனித சமுதாயத்திற்கும் உரியது
C உலக வாழ்வை அனுபவிக்க மனிதனுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது
D இஸ்லாம் வாழ்வின் சில துறைகளுக்கு மட்டும் வழிகாட்டுகின்றது
E இஸ்லாம் மனித சிந்தனையிலன்றி அனைத்தையும் பொதிந்த இறைவனின் நாட்டத்தில் உருவானது
F அல்லாஹ்வின் அருள் முஸ்லிம்களுக்கு மட்டும் உரியது

I ABC II ADF III BCE IV CEF V DEF

**08** இஸ்லாத்தின் சிறப்பம்சங்களைக் குறிக்கும் தொகுதி,

A அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப்பெற்றது
B அறபிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது.
C வாழ்க்கைக்கான போதனைகள் அனைத்தையும் வழங்குகின்றது
D முஸ்லிம்களையும் ஏனையோர்களையும் அல்லாஹ்வின் படைப்பு என்கின்றது
E வாளாலும் போராட்டத்தாலும் வளர்ந்த மார்க்கம்
F உலக வாழ்க்கையையும் அனுபவிக்கலாம் எனக் கூறுகிறது

I CDEF II ACDE III ABCD IV ABCE V ACDF

**09** இஸ்லாத்தின் தனிப்பண்புகளுள் அஷ்ஷுமூல், அல்வஸதிய்யா, அல்வாகிஇய்யா, அல்இன்ஸானிய்யா என்பவறிறின் கருத்துக்களை விளக்கும் தொகுதிகளில் முறையே சரியானது,

I பூரணத்துவம், யதார்த்த நிலை, மானுடப் பண்பு, தெய்வீகப் பண்பு
II பூரணத்துவம், நடுநிலைமை, யதார்த்த நிலை, மானுடப் பண்பு
III பூரணத்துவம், நடுநிலைமை, யதார்த்த நிலை, தெய்வீகப் பண்பு
IV மானுடப் பண்பு, யதார்த்த நிலை, நடுநிலைமை,பூரணத்துவம்,
V யதார்த்த நிலை, நடுநிலைமை,பூரணத்துவம், மானுடப் பண்பு

**10** ‘‘உலகம் அழியப் போனிறது என்ற சிலை தோன்றினாலும் கையிலிருக்கும் பயிரை நட்டு விடல் வேண்டும்’’ என்ற தொடர் ரிக்னருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது?

I கிலாபத் II இபாதத் III இமாரத் IV நஸீஹத் V அமானத்

**11** அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் மனிதன் நிறைவேற்ற வேண்டிய இபாத், இமாரத், கிலாபத் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

A மரங்கள் அழியாது பாதுகாத்தல்
B உலகில் இறை சட்டங்களை நிலை நாட்டல்

C தொழுகை முதலான கடமைகளை சரியாக நிறைவேற்றல்

D மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

E சுற்றாடல் மாசுபடாமல் பாதுகாத்தல்

இவற்றுள் இமாரத் பணிகளை மாத்திரம் உள்ளடக்கும் தொகுதி,

I AB II AE III BC IV BD V CD

12 சுற்றாடல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் இஸ்லாமியக் கோட்பாடு,

I இபாதத் II கிலாபத் III இஹ்ஸான் IV முஸாரஆ V இமாரத்

13 இந்த உலகம் இயற்கையாகவே தோன்றியதாகும். அது எவராலும் சிருஷ்டிக்கப்படவில்லை'' எனும் பிரபஞ்சம் பற்றிய சிந்தனை கொண்டோர்,

I புராதன பாரசீகர் IV பௌத்த மதத்தினர்

II புராதன சீனர் V கிறிஸ்தவ மதத்தினர்

III நாஸ்திகர்கள்

14 இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை உள்ளடக்கிய தொகுதி,

I தௌஹீத், ரிஸாலத், மஆத் IV அகீதா, ஷரீஆ, முஆமலாத்

II அல்குர்ஆன், ஹதீஸ் V இஜ்மா, கியாஸ்

III கலிமா, தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ்

15 எந்தவொரு காரியத்தையும் பூரணத்துவமாகவும் நிபுணத்துவத்துடனும் செய்தல் வேண்டும் என்ற கருத்தை வலியுருத்தும் இஸ்லாமிய கோட்பாடு

I கிலாபத் IV இபாதத்

II இமாரத் V அஸ்ஸம்உ வத்தாஆ

III இஹ்ஸான்

16 மனிதன் நிறைவேற்ற வேண்டிய கிலாபத், இபாதத், இமாரத் பணிகள் சிலவருமாறு,

A பிரதான கடமைகளை நிறைவேற்றல்

B நாட்டுக்கு விசுவாசமாக நடத்தல்

C ஏனைய சமூகங்களுடன் இணக்கமாக நடத்தல்

D சுற்றாடலை பாதுகாத்தல்

E இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்

இவற்றுள் இயற்கை வளங்களுடன் தொடர்பான அம்சங்களைத் தெரிவு செய்க.

I BC I
I CE III AB IV DE V BE

17 மனிதன் பற்றிய இஸ்லாமிய நோக்குகளுள் மிகவும் பொருத்தமானது,

I ஆறு நாட்களில் படைக்கப்படல்

II மானக்கேடான செயல்களில் இருந்து பாதுகாக்கப்பட்ட படைப்பினம்

III மறுமையில் சுவர்க்கம் செல்லக்கூடிய பாக்கியம் பெற்றவன்

IV இபாதத். இமாரத், கிலாபத் போன்ற பொறுப்புக்களைச் சுமந்திருப்பவன்

V இப்லீஸுக்கு இலகுவில் வசப்படக்கூடிய உள அமைப்பைப் பெற்றவன்

18 ''ரப்பானிய்யா'', ''ஷுமூலிய்யா'', ''வஸதிய்யா'' ஆகிய பதங்கள் தரும் பொருத்தமான தொகுதி,

I பூரணத்துவம் மிக்கது, மத்திமமானது, சர்வதேச மயமானது

II சர்வதேச மயமானது, பூரணத்துவம் மிக்கது, மத்திமமானது,

III தெய்வீகத் தன்மை வாய்ந்தது, மத்திமமானது, பூரணத்துவம் மிக்கது

IV பூரணத்துவம் மிக்கது, தெய்வீகத் தன்மை வாய்ந்தது, மத்திமமானது

V தெய்வீகத் தன்மை வாய்ந்தது, பூரணத்துவம் மிக்கது, மத்திமமானது,

**19** புவியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதும், புவி மாசடையாமல் காப்பதும் அவசியம் என்பதை உணர்த்தும் கோட்பாடு,

I இபாதத் II இமாரத் III கிலாபத் IV ஹிமாயத் V ஸிராஅத்

**20** கீழுள்ள A,B,C கூற்றுக்களை வாசித்து விடை தருக.

A பர்ளு கிபாயா என்றால் எல்லோர் மீதும் கடமையான பொது விடயங்களாகும்

B ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாதத் சார்ந்த கடமைகள் அனைத்தும் பர்ளு ஐன் ஆகும்

C அடியான் அல்லாஹ்வுக்கு செலுத்த வேண்டியவை ஹுகூகுல்லாஹ் எனப்படுகிறது

I A,B,C, மூன்றும் சரியானவை

II A,B சரியாக இருப்பதுடன் C தவறானது

III A,B,C, மூன்றும் தவறானவை

IV B சரியாக இருப்பதுடன் A,C தவறானவை

V Bயும் Cயும் சரியா இருப்பதுடன் A தவறானது

**பகுதி** ii

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

**(1)** I இஸ்லாம் எனும் பதத்தை வரைலிலக்கணப்படுத்துக? **(2 புள்ளிகள்)**

II இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள் நான்கைக் குறிப்பிடுக? **(4 புள்ளிகள்)**

III பிரபஞ்சம் தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டத்தை விளக்குக? **(6 புள்ளிகள்)**

IV மனிதன் தொடர்பான இஸ்லாமியக் கண்ணோட்டத்தை ஏனைய சமய, சிந்தனைகளின் கண்ணோட்டத்துடன் ஒப்புநோக்குக? (1**0 புள்ளிகள்)**

**(2)** பிரபஞ்சம் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தை ஏனைய கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்க? (20 புள்ளிகள்)

**(3)** இஸ்லாம் என்றால் என்ன? இஸ்லாத்தின் சிறப்பம்சங்களை விரிவாக ஆராய்க? (20 புள்ளிகள்)

இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கைகள்

- அல்லாஹ்
- மலக்குகள்
- நுபூவ்வத், ரிஸாலத், ஹிதாயத்
    - கத்முந்நுபூவத்
    - மஹப்பதுர் ரஸூல் (ஸல்)
- மறுமை நாள்
- கழா கத்ர்

# வினா – 01

**இறைவன் ஒருவன் என்பதை வஹி, பகுத்தறிவு, படைப்புக்கள் என்பன சார்ந்த ஆதாரங்கள் ஊடாக விளக்குக.**

**வேதங்கள் / வஹி காட்டும் ஆதாரம்**

- உலக வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களிலும் தாம் நபியென கூறிய சகலாரும் அல்லாஹ் ஒருவன் என்ற கோஷம் முன்வைத்தமை
- வஹி மூலமான அல்குர்ஆன் அல்லாஹ் ஒருவன் என்பதற்குறிய பகுத்தறிவு ரீதியான ஆதாரங்களை முன்வைக்கிறது.

○ "வனங்களிலும், பூமியிலும் அல்லாஹ்வைத்தவிர வேறு கடவுள்கள் இருந்திருப்பின் அவை சீர்குழைந்து போயிருக்கும்''. (அல்அன்பியா : 21-22)

○ "அல்லாஹ் பிள்ளைகளை எடுத்துக்கொள்ளவுமில்லை அவனோடு வேறு கடவுளுமில்லை. அவ்வாறு இருந்திருப்பின்... (அல்மு.ஃ.மினூான் - 91)

○ "அவன் அல்லாது வேறு கடவுளர்களை அவர்கள் எடுத்துக் கொண்டார்களா? உங்களது ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள் என நபியே நீர் கேட்பீராக.''(அல்அன்பியா-24)

○ "நானும் எனக்கு முன் வந்த நபிமார்களும் கூறிய உயர்ந்த வார்த்தை, "லாஇலாஹ இல்லல்லாஹ்'' என்பதாகும்.

**பகுத்தறிவு காட்டும் ஆதாரங்கள்**

- இப்பாரிய பிரபஞ்சத்தில் காணப்படும் சிறிய பெரி படைப்புக்கள் அனைத்தும் தானாக உருவானது என கூறுவது...
- வேகமாக வீசும் காற்றின் மூலம் தட்டச்சு...
- மரம் தானாக விழுந்து பலகைகளாக கிழிந்து...
- புகை கிழம்பினால் அதற்குப்பின் நெருப்பு இருப்பதை...
- பிரபஞ்சத்தின் இயக்கத்தை பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்தால்...
- சூரியனும், சந்திரனும் ஓர் ஒழுங்கின் அடிப்படையில் ஓடுகின்றன.''
- சூரியன் சந்திரனை அடைந்து கொள்ள மாட்டாது. அனைத்தும் அதற்குரிய பாதையில் நீந்தி வருகின்றன

**படைப்பினங்கள் காட்டும் ஆதாரம்**

- இப்பிரபஞ்சத்தில் காணப்படும் சிக்கலான சிறிய பெரிய படைப்பினங்களுக்கி பின்னணியில் ஒரு படைப்பாளன் இருப்பதை சிந்திக்கும் போது புறியலாம். (3:190), (6:185), (10:101)
- படைப்புக்கள் யாவும் சோடிகளாக படைக்கப்பட்டுள்ளமை...
- மரங்களில் உருவாகும் காய், கணிகள் படைப்பாளன் இருப்பதற்கு சான்று
- படைப்புகளில் காணப்படும் சூழலுக்கேற்ற உருவாக்கம்...

- ஒன்ரோடொன்று முரண்படாத படைப்புகள்...
- இவை படைப்பாளன் இருப்பதற்கு சான்று.

## வினா – 02

**தோளஹீதின் வகைகளில் பின்வருவன குறித்து விளக்குக.**

**(i)** ருபூபிய்யா **(ii)** உலூஹிய்யா **(iii)** அல் அஸ்மா வஸ்ஸிபாத் **(iv) அல்லாஹ்வின் தாத்தும் ஸிபத்தும்**

**(i) தௌஹீத் ருபூபிய்யா :**

- **ரப்பு என்ற சொல்லின் விளக்கம் :** பராமரிப்பவன், வளர்ப்பவன், தேவைகளை நிறைவேற்றுபவன், பொறுப்பாளன், கண்கானிப்பவன், சீர்திருத்தம் செய்பவன், கீழ்ப்படிய வைப்பவன், தலைவன், அதிகாரம் கொண்டவன், கட்டளையிடுபவன், ஆதிக்கத்தை தன்வசம் வைத்துக் கொண்டவன், முதன்மையானவன், அதிபதி, எஜமான்.
- நம்பிக்கை அறிவு சார்ந்த தௌஹீத்
- வரலாற்றில் மனிதர்கள் பலவற்றை ரப்பாக ஏற்றுள்ளனர். அல்லாஹ் அவர்களை நிர்மூலமாக்கினான். உ.ம் : பிர்அவ்ன், அப்ரஹா , நபிமார்களது சமுகங்கள்.
- நாஸ்திகர்களைத் தவிர அதிகமானவர்கள் இப்பிரிவை ஏற்கின்றனர்.
- நுபூவத்தின் ஆரம்பத்தில் தௌஹீதின் இப்பிரிவை ஏற்றிருந்தமை.
    - "நபியே கூறுவீராக! பூமியும் அதில் இருப்பவைகளும் யாருக்கு சொந்தம் என நீர் கேட்டால் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு சொந்தமானது என அவர்கள் கூறுவார்கள்''
    - 7 வானங்களுக்கும் சொந்தக்காரன் யார் என்று கேட்டால் அல்லாஹ்தான் என்று கூறுவார்கள்... (மு.:.மினூன்-84-88)

**(ii) தௌஹீத் உலூஹிய்யா :**

- **இலாஹ் என்ற சொல்லின் விளக்கம்** : தேவைகளை நிறைவேற்றுபவன், அபயமளிப்பவன், அமைதியளிப்பவன், அதிகாரமுள்ளவன், வணங்கி வழிபடத் தகுதியானவன், தேவைகளை நிறைவேற்றுபவன், சட்டம் இயற்றும் அதிகாரம் உள்ளவன், பொறுப்பு சாட்டத் தகுதியானவன்...
- நடத்தை சார்ந்த தௌஹீத்.
- அல்லாஹ் பற்றி கொண்டுள்ள நம்பிக்கைக்கு செயல்வடிவம் கொடுப்பது.
- தௌஹீதின் முக்கிய பகுதி இது. இப்பகுதியை நிலை நாட்டவே இறைத் தூதர்கள் வருகை. "மக்களே! லாஇலாஹ இல்லல்லாஹ் என பிரகடனப்படுத்துங்கள் வெற்றியடைவீர்கள்" (ஹதீஸ்)
- எல்லாக் காலங்களிலும் தௌஹீதின் இப்பிரிவை மக்கள் புறக்கனித்து வந்தனர்.
- ஷிர்க், குப்ர், நிபாக், இல்ஹாத் ஏற்படுத்துவன உலூஹிய்யாவை பாதிக்கும் அம்சங்கள்

**(iii) அஸ்மா வஸிபாத்**

- அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்களும் தனித்துவமான பண்புகளும் உள்ளன. அவையே அஸ்மா (பெயர்கள்), ஸிபாத் (பண்புகள்) என்று அழைக்கப்படுகின்றன.
- படைப்பினங்களின் பண்புகளுக்கு முற்றிலும் முரணானவை.
- அல்லாஹ்வுக்கு 99 திருநாமங்கள் இருப்பதாக ஹதீஸ்களில் வந்துள்ளன. அவற்றுள் சில அல்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளன. அவ்வாறே அல்லாஹ்வின் பண்புகள் பற்றியும் அவை கூறியுள்ளன.

- **“அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருக்கின்றன் அவற்றைக் கொண்டே நீங்கள் அவனைப் பிரார்த்தியுங்கள்”** (அ.்.ராப்- 180)
- அறிஞர்கள் அல்லாஹ்வின் பண்புகளை 3 ஆக வகைப்படுத்துகின்றனர்.
  1. வாஜிபானவை (கட்டாயமான பண்புகள்)
  2. முஸ்தஹீலானவை (சாத்தியமற்ற பண்புகள்)
  3. ஜாயிஸானது (அல்லாஹ்வுக்கு இருக்கவும் முடியுமான அல்லது இல்லாதிருக்கவும் முடியுமான பண்பு)

     அல்லாஹ் தான் நாடியதைச் செய்வான் அல்லது நாடாததை செய்யாமல் விட்டு விடுவான் எனும் பண்பு.

**(iv). அல்லாஹ்வின் தாத்தும் ஸிபத்தும்**

- ‘‘தாத்’’ என்பது ஒன்றின் வெளியுருவமாகும். வெளியுருவத்தையுடைய ஒவ்வொரு பொருளுக்கும் ‘‘ஸிபாத்’’ எனப்படும் பண்புகள் உள்ளன. பண்புகளையுடைய ஒவ்வொரு பொருளுக்கும் ‘‘தாத்’’ எனும் வெளியுருவம் உண்டு.
- அல்லாஹ்வுக்கு ஸிபத்துகள் உள்ளன. எனவே அவனுக்கு தாத்தும் உண்டு. எனினும் பௌதிக நியதிகளுக்கு அப்பாற்பட்ட அவனது தாத்தை பௌதிக நியதிகளுக்கு உட்பட்ட மனிதனால் உணரவோ கற்பனை பண்ணவோ முடியாது. .
- பௌதிக விதியால் வரம்பிடப்பட்டுள்ள மனித அறிவால் பௌதிக விதிக்கப்பாற்பட்ட அல்லாஹ்வின் தாத்தை அறிய முடியாது. மனிதன் அவனது வரம்பை மீறிச் செயற்படுவானாயின் அழிவையே தேடிக் கொள்வான்.
- எனவே தான் இஸ்லாம் அல்லாஹ்வின் தாத்தைப் பற்றி சிந்திப்பதைத் தடுத்து அவனது படைப்புக்கள் பற்றி சிந்திக்கத் தூண்டுகிறது. நபி(ஸல்) அவர்கள் ‘‘நீங்கள் அல்லாஹ்வின் படைப்புக்கள் பற்றி சிந்தியுங்கள் அவனது தாத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டாம் என்றார்கள் ’’.
- அல்லாஹ்வின் தாத்தைப் பற்றிச் சிந்தித்ததனாலேயே சில மனிதர்கள் அல்லாஹ்வுக்கு உருவம் கற்பித்தனர். உதாரணமாக : முஷப்பிஹா, முஜஸ்ஸிமா.
- இன்னும் சிலர் அவனது இருப்பையே மறுத்தனர். உதாரணமாக : முஅத்திலா

# வினா – 03

**தௌஹீத் மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் / விளைவுகளைத் தருக.**

- அடிமைத் துவத்திலிருந்து விடுவித்து சுதந்திரவானாக மாற்றுகின்றது.
- ‘எப்பொழுதும் அல்லாஹ்வின் அவதானம் தன்மீது இருக்கின்றது’ என்ற இறை சிந்தனையுடன் வாழ வழிவகுக்கின்றது.
- அனைத்து விடயங்களுக்கும் அல்லாஹ்வை சார்ந்திருக்கும் பண்பு வளரல்.
- தன்நம்பிக்கை, துணிவு, வீர உணர்வு போன்ற பண்புகள் வளரல்.
- குறுகிய மனப்பான்மை மறைந்து தியாக மனப்பான்மை வளர்தல்.
- கோழைத்தனம், அச்ச உணர்வு, மூட நம்பிக்கை போன்றவற்றிலிருந்து பாதுகாப்புக் கிடைக்கும்.
- இலட்சியமும், குறிக்கோளும் உள்ள வாழ்வு உருவாதல்.
- மறுமைக்காக வாழும் தன்மை ஏற்படல்.
- சமத்துவம், இன ஐக்கியம் உருவாதல்.
- விரக்தி, தோல்வி மனப்பான்மை மறைதல்.

# வினா – 04

## இஸ்லாமிய அகீதாவில் மலக்குகள் பற்றிய நம்பிக்கை குறித்து விளக்குக.

- அல்லாஹ்வால் படைக்கப்பட்ட ஆன்மீக உலகைச் சார்ந்தோராவர்.
- இவர்களை ஈமான் கொள்வது இஸ்லாமிய அகீதாவின் இரண்டாவது அம்சமாகும். "யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்புகிறார்கள்" (2:285)
- **அவர்களது படைப்பு**
  - ''மலக்குகள் ஒளியால் படைக்கப்பட்டனர். ஜின்கள் தீச்சுவாலையில் இருந்து படைக்கப்பட்டனர். ஆதம் உங்களுக்கு விளக்கப்பட்டது போன்று களிமண்ணால் படைக்கப்பட்டார்''.
- **பணிகள்...**
  - அல்லாஹ்வை வணங்கிக் கொண்டிருத்தல்,
  - அவனது அர்ஷைசுமத்தல்,
  - சுவனவாசிகளுக்கு சோபனம் கூறுதல்,
  - நரக வாசிகளைத் தண்டித்தல்,
  - வஹியைக் கொண்டு வருதல்,
  - இயற்கை நிகழ்வுகளுக்குப் பொறுப்பாய் இருத்தல்,
  - மு.்.மின்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தித்தல்,
  - அவர்களது தூய ஆன்மிக செயற்பாடுகளில் கலந்து கொள்ளல்,
  - மனிதர்களின் செயல்களைப் பதிவு செய்தல்,
  - மு.்.மின்களுக்கு உதவி செய்து அவர்களை உறுதிப்படுத்தல்,
  - உயிரைக் கைப்பற்றல் போன்ற பணிகள் மலக்குகளுக்குப் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளன.
- **பண்புகள்**
  - "அதில் கடுமையான பலசாலிகளான மலக்குகள் (காவல்) இருக்கின்றனர் அல்லாஹ் அவர்களை ஏவிய எதிலும் அவர்கள் மாறு செய்ய மாட்டார்கள் தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள்.
  - "இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்னான்கும் இறக்கை உள்ளவர்களாக மலக்குகளைத் தன் தூதை எடுத்துச் செல்வோராக ஆக்கினான் (பாதிர்:1)
  - நபி (ஸல்) அவர்கள், ஜிப்ரீல் (அலை) அவர்களை 600 இறக்கைகளுடன் கண்டதாக நபியவர்கள் கூறியமை.
- எண்ணிக்கை…
- ஆற்றல்கள்...
- அவர்களுக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள்...

**மலக்குகளில் இருப்புக்கான ஆதாரம்**

- அல்குர்ஆன் ஹதீஸ் ஆதாரத்தின் அடிப்படையில் மலக்குகளின் இருப்பு நிச்சயமானது என்ற நம்பிக்கையை விஞ்ஞானரீதியாக சிந்திக்கின்ற போது மேலும் உறுதியாகின்றது.
- இஸ்லாமிய நம்பிக்கையின் படி மலக்குகள் ஒளியால் படைக்கப்பட்டவர்களாவர். நவீன அறிவியல் ஒரு செக்கனுக்கு 186000 மைல் பயணம் செய்யும் ஒளியின் வேகத்தை வைத்து அமைத்துள்ள சார்புக் கொள்கை அடிப்படையில் பார்க்கும் போது அல்குர்ஆன் வசனங்கள் குறிப்பிடும் உண்மைகள் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

- "ஒரு நாள் மலக்குகளும், (ஜிப்ரீலாகிய) அவ்வான்மாவும், அவனிடம் ஏறிச் செல்வார்கள் அ(த்தினத்)தின் அளவு ஐம்பதினாயிரம் ஆண்டுகள் (சமமாக) இருக்கும்.(70:4)
- 'வானத்திலிருந்து பூமி வரையிலுமுள்ள காரியத்தை அவனே ஒழுங்குபடுத்துகிறான் ஒரு நாள் (ஒவ்வொரு காரியமும்) அவனிடமே மேலேறிச் செல்லும், அந்த (நாளின்) அளவு நீங்கள் கணக்கிடக்கூடிய ஆயிரம் ஆண்டுகளாகும். (32:5)

**மலக்குகள் பற்றிய நம்பிக்கை முக்கியம் பெற்றமைக்கான காரணங்கள்**

1. பிரபஞ்ச இயக்கத்துடனும் மனித வாழ்வுடனும் தொடர்புடையவர்கள்.
2. மலக்குகள் பற்றிய பிழையான நம்பிக்கைகள் காணப்பட்டமை.
3. மனிதனுக்கும் அல்லாஹ்வுக்குமிடையிலான தொடர்பை ஏற்படுத்துவதில் மலக்குகளின் பங்கு முக்கியமானது.

# வினா – 05

**ரிஸாலத் என்றால் என்றால் என்ன என்பதைக் குறிப்பிட்டு மனித வாழ்வை வழிநடாத்த ரிஸாலத் அவசியம் என்பதற்கான காரணங்களை குறிப்பிடுக.**

- தூதுத்துவம் எனப்படும் பாரிய பொறுப்பைக் குறிக்கிறது.
- மொழிக்கருத்து : கடிதம், தூது போன்றனவாகும்.
- ரிஸாலத்தைப் பெற்றவர் தூதர் எனும் பொருள் தரும் ரஸூல் என்ற சொல் மூலம் அழைக்கப்படுகிறார்.
- அல்குர்ஆன் ரஸூல் என்ற சொல்லை மூவகையினரைக் குறிப்பிட உபயோகித்துள்ளது.
  - அல்லாஹ்வின் தூதை உரியவர்களுக்கு எத்திவைப்பதற்காக மலக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களைக் குறிப்பிட ''அல்லாஹ் மலக்குகளில் இருந்தும் மனிதர்களில் இருந்தும் தூதர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்கிறான்''(22:75)
  - மனிதர்களுக்கு தலைமை தாங்கி ஷரீஅத்தின் அடிப்படையில் அவர்களை வழிநடாத்துவதற்காக நபிமார்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் : "அவர்கள் (துாதர்கள்) தம் இரட்சகனின் தூதுகளை மெய்யாகவே எத்தி வைத்தார்கள்'' (72:26-∴28)
  - மனிதர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நபிமார்களைக் குறிப்பிடுவதற்காக (2:285)
- ரிஸாலத், அகீதா, இபாதாத், ஷரீஅத், அஹ்லாக் ஆகிய நான்கு விடயங்களைப் பிரதானமாக உள்ளடக்கியிருக்கும்.
- நபி அல்லது ரஸூல் என்ற அந்தஸ்து அல்லாஹ்வால் வழங்கப்பட்டாலே அன்றி எவருக்கும் அதற்காக உரிமை கோர முடியாது.

**ரிஸாலத்தின் அவசியம்**

- அல்லாஹ்வின் திருப்தியையும், சுவனத்தையும் இலக்காகக் கொண்டு வாழும் ஓர் இலட்சிய வாழ்வுக்கு வழிகாட்டுகின்றது.
- நன்மை, தீமை, சத்தியம், அசத்தியம் ஆகுமானவை, ஆகாதவை போன்றவற்றை பிரித்தறியவும், அவை பற்றிய ஆழ்ந்த விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளவும் ரிஸாலத் அவசியப்படுகின்றது.
- மனிதனின் உள்ளத்தில் எழும் அடிப்படையான வினாக்களுக்கு விடைபகர ரிஸாலத் அவசியப்படுகின்றது.
- மனிதனின் ஆன்மீகத் தேவையை பூர்த்தி செய்ய ரிஸாலத் அவசியப்படுகின்றது.
- இறைநம்பிக்கை, மறுமை வாழ்வு, இறைநிர்ணயம் போன்ற அடிப்படை உண்மைகள் பற்றிய தெளிவான விளக்கங்களைப் பெற ரிஸாலத் அவசியப்படுகின்றது.
- இறை நியதியை தெளிவுபடுத்த ரிஸாலத் அவசியப்படுகின்றது.
- மனிதப் பலவீனங்களிலிருந்து விடுபட்டு நேரான வழிகாட்டலில் நிலைத்திருக்க ரிஸாலத் அவசியப்படுகின்றது.
- உள்ளம் விரும்பும் பலவிடயங்களை உதறித் தள்ளிவிடவும், உள்ளம் வெறுக்கும் பல விடயங்களை புரிந்து செயற்படவும் ரிஸாலத் வழிகாட்டுகின்றது.

## வினா – 06

**'ஹிதாயத்' என்ற சொல்லை வரைவிளக்கனப்படுத்தி 'ஹிதாயத் பெற ரிஸாலத் அவசியம்' என்ற கூற்றை ஆராய்க.**

- ஹிதாயத் - நேரான பாதை
- பரிபாசையில் - மனிதன் படைக்கப்பட்ட நோக்கத்தைப் புரிந்து இம்மை மறுமை ஆகிய ஈருலகிலும் அவன் வெற்றி அடையக்கூடிய பாதையில் அவனை வழிநடாத்தும் வழிகாட்டல்
- ஹிதாயத் என்பதன் நேர் பொருளில் ஹுதா என்ற சொல்லும் உபயோகிக்கப்படுகிறது.
- ஹிதாயத்தை மனிதனது சுய அறிவால் மாத்திரம் அடைந்து கொள்ள முடியாது.
- மனித வாழ்வு சீர்பெற நான்கு விடயங்கள் இன்றியமையாதவை
  1. சீரான நம்பிக்கைகள்
  2. உள்ளத்தை நெறிப்படுத்தும் ஆன்மீகப் பயிற்சிகள்
- 3. கட்டுப்படுத்தும் சட்டங்கள் 4. ஒழுக்க விழுமியங்கள்
- இந்நான்கு பற்றியும் தெளிவான வழிகாட்டலைத் ரிஸாலத் தருவதனால் ஹிதாயத்தைப் பெற்றுக் கொள்ள அதுமாத்திரமே சிறந்த ஊடகமாகும்.
- மறைவான விடயம் பற்றி ரிஸாலத் குறிப்பிடும் விடயங்கள் மாத்திரமே சான்றுகள் மூலம் நிரூபிக்கக்கூடியனவாக உள்ளன.

## வினா – 07

**'கத்முந் நுபுவ்வா' கோட்பாட்டை நிறுவும் வகையில் ஆதாரங்களை முன்வைக்குக.**

- 'கத்முன் நுபுவ்வத்' என்றால் இறுதி நபித்துவம் என்பது பொருள்படும்.
- எனவே இறுதி நபித்துவக் கோட்பாட்டை ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்துவது முக்கியமான விடயமாகும். முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பின் நபித்துவத் தொடர் முற்றுப் பெற்று விட்டது என்பதற்கு மூவகை ஆதாரங்கள் காணப்படுகின்றன.

- **அல்-குர்ஆன் ஆதாரங்கள்:**
  ''உங்களில் எந்த ஓர் ஆணுக்கும் முஹம்மத் (ஸல்) அவர்கள் தந்தையாக இல்லை. மாறாக, அல்லாஹ்வின் தூதராகவும் நபிமார்களில் இறுதியானவராகவும் உள்ளார்.'' (33 - அல்-அஹ்ஸாப் : 40)

- **ஹதீஸ் ஆதாரங்கள்:**
  - ''எனக்குப் பின் எந்த நபித்துவமும் கிடையாது, நற்செய்திகளின் அறிவிப்புக்கள் மட்டுமே உண்டு''(முஸ்னத் அஹமத்)
  - "பனூஇஸ்ரவேலர்களை நபிமார்கள் வழிநடத்தி வந்தார்கள் எவரேனும் ஒரு நபி மரணித்து விட்டால் மற்றோரு நபி அப்பொறுப்பில் அமர்த்தப்படுவார். ஆனால், நான் இறுதி நபியாவேன். எனக்குப் பின் நபிமார்கள் வரமாட்டார்கள். கலீபாக்கள் மட்டுமே வருவர்'' (ஹதீஸ்)
  - ''எனக்கும் ஏனைய நபிமார்களுக்கும் இடையில் உள்ள தொடர்புக்கு உதாரணம் ஒரு மனிதர் ஒரு வீட்டைக் கட்டிமுடிக்கின்றார். அவ்வீட்டிற்குச் சென்றவர்கள்…'' (புஹாரி, முஸ்லிம்)

- **தர்க்க ரீதியான சான்றுகள்**

  அல்லாஹ் உலகிற்கு நபிமார்களை அனுப்பிய பின்னணியை நோக்குகையில்ஓர் இறைத் தூதரின் பின் மற்றோர் இறைத் தூதரின் வருகைக்கு சில காரணங்கள் இருக்கலாம். அவை வருமாறு:
  - எந்த ஒரு நபியும் அனுப்பப்படாத சமுதாயமாக இருக்க வேண்டும். அல்லதுஇன்னொரு சமூகத்திற்கு அனுப்பப்பட்ட நபியின் தூதுச் செய்தி எட்டாதிருக்கவேண்டும்.
  - முன்னைய நபியின் போதனை அழிந்து போயிருக்கவேண்டும்,அல்லது திரிபுபடுத்தப்பட்டிருக்க வேண்டும்.
  - முன்னைய நபியின் போதனை பூர்த்தியடையாதிருக்க வேண்டும்.
  - ஒரு நபிக்கு இன்னொரு நபியின் துணை தேவைப்பட்டிருக்க வேண்டும்.

# வினா – 08

## மஹப்பதுர் ருஸூல் (ஸல்)– நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ளல் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டை விளக்குக.

- எம்மை விட, எமது உயிரை விட உலகிலுள்ள எந்த ஒருவரையும் விட மேலாக ஒருவரை மதித்து, நேசித்து அவருக்காக உயிரையும் அர்ப்பணிக்க தயாராகும் நிலையை குறிக்கிறது.
- மஹப்பதுர் ரஸூல் ஈமானோடு தொடர்பு பட்டது. "ஒருவர் தனது பிள்ளையை விட, பெற்றோரை விட, உலக மக்கள் அனைவரை விடவும் நான் அவருக்கு விருப்பமானவராக ஆகும்வரை ஈமான் கொணடவராக ஆக முடியாது''. (புஹாரி)

- ஒரு முறை உமர் (ரழி) அவர்கள் நபியவர்களிடம் வந்து ''அல்லாஹ்வின் தூதரே, நிச்சயமாக நான் எனது உயிருக்கு அடுத்து ஏனைய அனைத்தையும் விட நீங்கள் தான் எனக்கு நேசத்துக்குரியவர்'' எனக்கூற, ''எனது உயிர் எவன் கைவசம் உள்ளதோ அந்த அல்லாஹ்வின் மீது சத்தியமாக உமது உயிரைவிட நான் உமக்கு அன்புக்குரியவனாக மாறவேண்டும்.'' என்றார்கள். அதன் பின்னர், ''அல்லாஹ்வின் மீது ஆணையாக நிச்சயமாக எனது உயிரைவிட நீங்கள் நேசத்திற்குரியவர்'' என்று உமர் (ரழி) சொன்னார்கள். அப்பொழுது ''உமரே! இப்பொழுதுதான் உமது ஈமான் பூரணமாகிறது'' (புகாரி)
- ஸைத் பின் தஸினா (ரழி) அவர்களை கொலை செய்ய முற்பட்டு நபியவர்கள் அந்த இடத்தில் இருப்பதை விரும்புவதாக கூறினால் மன்னித்துவிடுவதாக கூறியபோது, ''அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் எனது குடும்பத்துவருடன் பாதுகாப்பாக இருக்க, முஹம்மது (ஸல்) அவர்களுக்கு, அவர்கள் இருக்கும் இடத்தில் அவர்களது பாதத்தில் ஒரு முள் தைப்பதைக்கூட நான் விரும்ப மாட்டேன்''.
- முஹம்மத் (ஸல்) அவர்களை அவர்களது தோழர்கள் நேசிப்பதைப் போன்று உலகில் வேறு மனிதர்கள் எவரும் எவரையும் நேசிப்பதை நான் அறியமாட்டேன் - அபூ சுப்யான்-

**மஹப்பாவின் அடையாளங்கள் :**

- *அன்புவைப்பதை அல்லாஹ் அனைத்து முஸ்லிம்களுக்கும் பின்வரும் வழிமுறைகளில் கடமையாக்கியுள்ளமை*
  - *தொழுகையில் அத்தஹிய்யாத்தின் போது "நபியே உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக"*
  - ஏனைய சந்தர்ப்பங்களிலும் அதிகமாக ஸலவாத்துச் சொல்லல். ''நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் நபியவர்கள் மீது ஸலவாத்துச்

சொல்கிறார்கள். விசுவாசிகளே! நீங்களும் அவர்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள்''

- ''நபி (ஸல்) அவர்கள் மீது வைக்கின்ற அன்பு அவரது உம்மத்தினரிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்.'' (48:29) •
- அவர்களுக்கு எதிராக புனைந்துரைப்போரைத் தடுக்க வேண்டும்.
- அவர்களது வார்த்தைகளையும், வழிகாட்டல்களையும் பின்பற்றவும் பாதுகாக்கவும் வேண்டும்.
- அவர்கள் வாழ்ந்து காட்டிய வழிகாட்டல்களையும் முன்மாதிரிகளையும் பின்பற்றி நடக்க வேண்டும்

# வினா – 09

**மறுமை வாழ்வு பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தினை ஆராய்க**

அறிமுகம் : 'யவ்முல் ஆகிரா' என்ற சொல் இறுதி நாள் என்ற கருத்தைக் குறிக்கும்.

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் அழிக்கப்பட்டு மீண்டும் உருவாக்கப்படுகின்ற நிலையான நாளைக் குறிக்கும்.

- மரணத்திற்குப் பின்னுள்ள வாழ்வினை மறுமை என்பர். இதற்கு 'மஆத்' எனும் அறபுப் பதம் கையாளப்படுகின்றது. 'மஆத்' என்பது மொழி ரீதியில்: 'மீளுதல்', 'மீண்டு வருதல்', 'திரும்பி வருதல்'.
- இஸ்லாமியக் கண்ணோட்டத்தில்:

  "நாம் வாழும் இவ்வுலகம் (ஆலமுல் பனாஉ) நிரந்தரமானதல்ல, இது ஒரு சோதனைக் களமாகும். இதனை அல்லாஹ் அதன் குறிப்பிட்ட தவணையின் பின்னர் ஒரு நாள் அழித்துவிடுவான், அதில் வாழும் மனிதனும் அழிந்தே விடுவான். பின் ஆரம்பம் முதல் இறுதி வரை உலகில் வாழ்ந்த உயிரினங்கள் அனைத்தும் ஒரு நாள் இன்னொரு வாழ்க்கைக்காக எழுப்பப்பட்டு, அவர்கள் அனைவரும் மஹ்ஷர் வெளியில் ஒன்று சேர்க்கப்பட்டு, இவ்வுலகில் புரிந்த செயற்பாடுகளுக்கு ஏற்ப விசாரனை செய்யப்படுவர். பின்னர் நல்லடியார்கள் சுவனத்திற்கும், பாவிகள் நரகத்திற்கும், மூன்றாம் சாரார் தமது குற்றத்துக்குரிய தண்டனையை நரகில் பெற்றுக்கொண்ட பின் சுவனத்திற்கும் அனுப்பப்படுவர்." இதுவே மறுமை பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்தின் சுருக்கமாகும்.

# வினா – 10

**இஸ்லாமிய கண்ணோட்டத்தில் மறுமை நாளின் அவசியம் குறித்து விளக்குக.**

- மனிதனின் மனோநிலை இன்னொரு வாழ்க்கை அவசியத்தை உணர்த்துகின்றது.
- மனிதனின் எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமாயின் இன்னொரு வாழ்க்கை அவசியப்படுகின்றது:
- இவ்வுலகில் மனித வாழ் நாட்கள் போதுமானதாக இல்லாதிருப்பதனால் இன்னுமொரு வாழ்வின் அவசியம் உணரப்படுகின்றது.
- மனிதனின் செயற்பாடுகளுக்கான தண்டனை அல்லது பரிசுகள் வழங்கப்படுவதற்கு பொருத்தமான களம் அவசியமாகும். எனவே மறுமை வாழ்வு அவசியமாகும்.
- மனிதன் மரணிக்க விரும்புவதில்லை. தொடர்ந்து வாழவே விரும்புகிறான். அதற்கு இவ்வுலக நியதி பொருத்தமாக இல்லை. எனவே வாழ்வதற்கான மற்றொரு களமாக மறுமை அமைகின்றது.
- மனிதனின் செயற்பாட்டுக்கான தண்டனை அல்லது பரிசு வழங்கப்படுவதற்குப் பொருத்தமான - நீண்ட கால களம் தேவை. அதற்கு மறுமை அவசியப்படுகிறது.
- உயர்ந்த படைப்பான மனிதன், தாழ்ந்த படைப்புகள் போல மரணத்தோடு விடப்படுவது அவனது அந்தஸ்துக்கு இழிவானது. அவனது உயர்நிலைக்கு அடையாளமாக மறுமை அமைகிறது.

- இறைவன் இருப்பதை உலகில் காணமுடியாது. மறுமையில் இறைவனைக் காணும் சந்தர்ப்பம் கிடைக்கப் பெறுகிறது
- மனிதனின் கண்ணியத்தை உணர்த்த மறுமை அவசியம்.
- அல்லாஹ்வின் கட்டளைகளை எடுத்து நடப்பதனால் தீயவற்றை விட்டு விலகி நடப்பதனாலும் அவனது வாழ்வின் அர்த்தத்தை விளங்குவதற்கும் மறுமை நாள் ஒன்று அவசியப்படுகின்றது.

## வினா – 11

**மறுமை நாள் சாத்தியமானது என்பதனை ஆதாரங்களுடன் நிறுவுக.**

- நபி (ஸல்) அவர்கள் மறுமை நம்பிக்கை பற்றிக் கூறியபோது அது சாத்தியமற்ற ஒன்று என்று எண்ணிய காபிர்கள் நபியவர்களைப் பரிகசித்தனர். குதர்க்க வினாக்களைத் தொடுத்தனர். அவற்றுக்கு அல்குர்ஆன் தர்க்கரீதியாக பதில் கூறியது.
- உக்கிப்போன எலும்புத்துண்டைக் கொண்டுவந்து நபியவர்களிடம் இதை எப்படிஉமது இறைவன் மீண்டும் எழுப்புவான் எனப் பரிகாசமாகக் கேட்டதற்கு அல்லாஹ்அல்குர்ஆன் (36:77-83) வசனங்களை இறக்கிப் பதில் கூறினான்.
- ‘மறுமை நாளென்பது நிச்சயமானது’ என்பதை நிறுவக் கூடிய ஆதாரங்கள் மிகத் தெளிவானவையாகக் காணப்படுகின்றது.
- பிறப்பும் இறப்பும் கொண்ட இவ்வுலக வாழ்க்கை என்பது காலத்தின் கோலம் என்று வாதிட்டவர்களுக்கு (45:24) அல்குர்ஆன் அவர்களது அறியாமையை சுட்டிக்காட்டியது. (45:26-27) (தஹ்ரீய்யூன்)
- மறுமை சாத்தியமான ஒன்றா எனச் சந்தேகம் கொண்டோரைப் பார்த்து அல்-குர்ஆன் பதில் கூறுகின்றது. (22:05)(56:62)
- எந்த முன்மாதிரியும் இல்லாமல் முதலில் உலகைப் படைத்த அல்லாஹ்வுக்கு இரண்டாம் முறை அதனை உருவாக்குவது மிகவும் இலகுவானது என்றது. (30:27-28)
- மறுமையில் நம்பிக்கையற்றோர் அது எப்போது வரும் என்று நபியவர்களிடம் பரிகாசமாகக் கேட்டதற்கு அல்குர்ஆன் பதில் கூறியது. (79:42-46) (7:187)
- வரலாற்றில் மரணிக்கச் செய்து உயிர்ப்பித்த நிகழ்வுகள் பல இடம்பெற்றுள்ளமை.
    - பறவைக்கு உயிர் கொடுக்க இப்ராஹிம் (அலை)க்கு ”என் இறைவா! இறந்தோரை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கிறாய் என்பதை எனக்குக் காட்டுவாயாக!““ என்று இப்ராஹீம் வேண்டியபோது, ”நீர் நம்பிக்கை கொள்ளவில்லையா? என்று (இறைவன்) கேட்டான். அதற்கவர் ”அவ்வாறல்ல! மாறாக எனது உள்ளம் அமைதியுறவே’’ என்றார். ”நான்கு பறவைகளைப் பிடிப்பீராக! அவற்றைத் துண்டு துண்டாக வெட்டி உம்மிடம் வைத்துக் கொள்வீராக! பின்னர் அவற்றில் ஒரு பகுதியை ஒவ்வொரு மலையின் மீதும் வைப்பீராக! பின்னர் அவற்றை அழைப்பீராக! அவை உம்மிடம் விரைந்து வரும். அல்லாஹ் மிகைத்தவன் ஞானமிக்கவன் என்பதை அறிந்து கொள்வீராக’’ என்று(இறைவன்) கூறினான்’’.(அர்பகரா-260)
    - பனூ இஸ்ரவேலர்களில் ஒரு கூட்டத்தினரை அல்லாஹ் மரணிக்கச் செய்து உயிர்ப்பித்தான், ‘‘மரண பயத்தால் தம் வீடுகளைவிட்டும், ஆயிரக்கணக்கில் வெளியேறியவர்களை நீர் கவனிக்கவில்லையா? அல்லாஹ் அவர்களிடம் ‘‘இறந்து விடுங்கள்’’ என்று கூறினான் மீண்டும் அவர்களை உயிர்ப்பித்தான் (2:243)
    - மாட்டை அருத்து அடித்ததன் மூலம் எழுந்த கொலையாளி பற்றி சூரா அல்பகரா எனும் அத்தியாயம் பேசுகின்றமை.

- உறக்கத்தின் பின் மீண்டும் எழுதல், ‘‘அல்லாஹ், உயிர்களை அவை மரணிக்கும் போதும், மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்துவிட்டானோ அதை(த் தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான் மீதியுள்ளவற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான் (ஜுமர்:42)
- ஒரு கிராமத்தை கடந்து செல்பவன் படைப்பு பற்றி சந்தேகித்த வேளை அல்லாஹ் அவனை மரணித்து உயிர்ப்பிக்கிறான் ‘‘இவ்வூர் (இவ்வாறு அழிந்து) மரித்தபின் இதனை அல்லாஹ் எப்படி உயிர்ப்பிப்பான்?’’ என்று (வியந்து) கூறினார் ஆகவே, அல்லாஹ் அவரை நூறாண்டுகள் வரை இறந்து போகும்படிச் செய்தான் பின்னர் அவரை உயிர்பெற்றெழும்படிச் செய்தான்…’’ (2:259)

- அறிவியல் வளர்ச்சியடைந்துள்ள இன்றைய காலத்தில் மறுமை நம்பிக்கை அறிவுக்கு அப்பாற்பட்டது என்போருடைய வாதமும் அன்றைய மறுப்பாளர்களின் வாதத்தை ஒத்ததே.
- மறுமை உண்டு என்பதற்கான பல்வேறு தர்க்கரீதியான சான்றுகளைப் பகுத்தறிவு முன்வைக்கின்றது.
  - ஒன்று இருப்பின் முடிவு ஒன்றும் இருக்கும் என்பது பொது விதியாகும்.
  - படைக்கும் சக்தி வாய்ந்த அல்லாஹ்வுக்கு அழிக்கும் சக்தியும் உண்டு.
  - அனைத்தும் அழியக்கூடியன என்பதை அறிவியல் ஏற்றுக்கொள்கிறது.

## வினா – 12

**மறுமை நாளின் அவசியம் குறித்து விளக்குக.**

1. படைப்பின் நோக்கம் நிறைவு செய்யப்பட வேண்டும்.
2. மனிதனது எல்லா ஆசைகளும் கனவுகளும், எதிர்பார்ப்புக்களும் இவ்வுலகில் நிறைவேறுவதில்லை. அவை நிறைவேற இன்னும் ஒரு உலகம் தேவை.
3. உலகம் செயற்பாட்டின் பூரண விலைவைத் தருவதில்லை. நன்மை செய்தோருக்கான பூரண கூலியோ, தீங்கு செய்தோருக்கான பூரண தண்டனையோ வழங்கப்படுவதில்லை.
4. உலக வாழ்வில் செயல்களுக்கான கூலி, தண்டனைகள் நியாயமற்றவை. எனவே, நீதி (இறைவனது நீதி அவசியம்).
5. இன்பம், நிம்மதி, சந்தோஷம் இவ்வுலகில் நிரந்தரமில்லை. நிரந்தர மகிழ்ச்சி அவசியம் என்பதை உள்ளம் ஏற்றுக்கொள்ளும்.
6. மனிதன் ஏனைய படைப்புக்களிலிருந்து வித்தியாசப்படுத்தி உயர்ந்த படைப்பாக படைத்து அவனுக்கு உலகப்பொருற்களை வசப்படுத்தி கொடுத்து ஏனைய படைப்பினங்கள் போல் இவையும் மரணித்து மண்ணோடு மண்ணாக செல்வது எவ்வகையிலும் நியாயமற்றது.
7. மனிதன் மரணிக்க விரும்புவதில்லை தொடர்ந்து உயிர்வாழவே விரும்புகிறான். ஆனால் உலக நியதி நிரந்தர வாழ்வு கிடைப்பதில்லை. நிரந்தர உலகு தேவை என்பதை மனம் ஏற்றுக்கொள்ளும்.
8. உலகில் இறைவனைக் கானும் பாக்கியம் கிடைப்பதில்லை. ஒவ்வொரு உள்ளமும் தன்னைப் படைத்தவனை காண வேண்டும் என்று ஆவல்கொள்ளும். அதற்கான உலகமாக மறுமை அவசியம்.
9. அல்-குர்ஆன் ஆதாரங்கள்:

   “அவன், நிச்சயமாக மறுமை நாளில் உங்களை ஒன்று சேர்ப்பான். அதில் சந்தேகமில்லை.” (4:87)

   “உங்களை நாம் படைத்ததெல்லாம் வீணுக்காகத் தான் என்றும் நிச்சயமாக நீங்கள் எம்மிடம் மீளக் கொண்டு வரப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?” (23: 115)

"படைப்புகளை முதலாவதாகப் படைத்ததில் நாம் இயலாமலாகி விட்டோமா? அவ்வாறன்று. (இறந்தபின்) மீண்டும் படைப்பது பற்றி இவர்கள் சந்தேகத்தில் இருக்கின்றனர்." (50:15)

"மனிதன், அவனது உக்கிப் போன எலும்புகளை நாம் ஒன்று சேர்க்கமாட்டோம் என்று எண்ணுகின்றானா? ஆம், நாம் அவனது விரல்களின் நுனிகளைக் கூட சீர்படுத்த சக்தியுடையோராய் இருக்கின்றோம்." (75: 3,4)

# வினா – 13

**மறுமை நாளின் நிகழ்வுகளை ஆதாரங்களுடன் விளக்குக.**

**மண்ணறை வாழ்க்கை**

- மனிதன் மரணித்து இறுதி நாளை சந்திக்க முன் சந்திக்கும் இடம்.
- "இன்னும் அவர்கள் மரணித்ததிலிருந்து எழுப்பப்படும் வரை அவர்களுக்குப் பின்னால் பர்ஸக் இருக்கின்றது." (23:100)
- இது வெற்றியாக அமைந்தால் அது நிரந்தர வெற்றி...
- "கப்று, சுவனத்துச் சோலைகளில் ஒரு சோலையாகும், அல்லது நரகத்தின் படுகுழிகளில் ஒரு படுகுழியாகும்." (திர்மிதி)
- மண்ணறைகள் மனிதனைப் பார்த்து,'நான் புச்சுப்புழுக்களும் விஷ ஜந்துக்களும் நிறைந்த எல்லாவற்றையும் மண்ணோடு மண்ணாக்கக்கூடிய நான் தனிமையிலிருக்கிறேன்' ஈமான் கொண்டு நல்லமல் செய்தவர் வந்தால் 'உன் வரவு நல்வரவாகட்டும். என் முகப்பில் உலாவிய நல்லோர்களுள் நீயும் ஒருவன். என்னிடம் வந்துவிட்ட நீ என் இயல்புகளைப் புரிந்துகொள்'' என வரவேற்கும். கண்களுக்கு எட்டாத தூரம் வரை விரிவடைந்து செல்லும். பாவிகள் வந்தால்' என் முகப்பில் உலாவிய தீயவர்களுள் நீயும் ஒருவன். என்னிடம் வந்த நீ என்னை அறிந்துகொள் எனக்கூறி அவனது விலா எழும்புகள் ஒன்றுடன் ஒன்று சேறும் வரை நெருக்கும். இரும்பு சம்மட்டியால் அவன் அடிக்கப்படுவான். விஷப்பாம்புகள் அவனைத் தீண்டும். (ஹதீஸ்)
- "உங்களில் ஒருவர் இறந்து விட்டால் அவர் தங்குமிடம் அவருக்குக் காலையிலும் மாலையிலும் எடுத்துக் காட்டப்படும். அவர் சுவனவாசியாக இருந்தால் சுவனத்தில் இருப்பதாகவும், நரகவாசியாக இருந்தால் நரகத்தில் இருப்பதாகவும் (எடுத்துக் காட்டப்படும்.) மேலும், 'அல்லாஹ் மறுமை நாளில் உம்மை எழுப்புகின்ற வரை இதுவே (கப்ரே) உன்னுடைய தங்குமிடம்' என்றும் கூறப்படும்" எனக்கூறுகின்றார். (புஹாரி)
- பகலிலும், இரவிலும் அவர்களுக்கு நரகம் எடுத்துக்காட்டப்படும் (அல்குர்ஆன்)
- அவர்களை நாம் இரு முறை வேதனை செய்வோம் (அல்குர்ஆன்)

**மீள எழுப்பப்படுதல் (அல்ப.்.ஸ்)**

- 'அங்கேயே நீங்கள் மரணமடைவீர்கள் (இறுதியாக) நீங்கள் அங்கிருந்தே எழுப்பப்படுவீர்கள்'' (8:24-25)
- 'மண்ணறைகளில் இருப்போரை, நிச்சயமாக அல்லாஹ் (உயிர் கொடுத்து) எழுப்புவான்.(ஹஜ்-7)
- ''மனிதனின் எல்லாப்பகுதிகளையும் மண் உட்கொள்ளும் விலாப்புறத்து எழும்பைத் தவிர'' (புஹாரி)
- (அல்ஹஜ்-7-5), (யாஸீன்-78-79), (அல்இஸ்ரா-49-51), (அர்ரூம்-21), (மர்யம்- 66-67)

**மஹ்ஷர்**

- யுக முடிவின் பின் ஒன்று திரட்டப்படும் இடம்.
- அவர்கள் அனைவரும் நம்மிடமே ஒன்று திரட்டப்பட்டு கொண்டுவரப்படுவார்கள்(23:79),
- நிச்சயமாக உமது இறைவன் இறுதி நாளில் அவர்களை ஒன்று திரட்டுவான் (15:25), (36:32), (64:9), (41:19), (67:24)
- மனித, ஜின் இனத்தில் அனைவரும் ஒன்று திரட்டப்பட்டு விசாரணைக்குற்படுத்தப்படுவர்.
- மலக்குகள் மதில்களைப்போன்று சுவர் அமைத்துக்கொள்வர்.
- மக்களின் மத்தியில் அச்சமும் கலக்கமும் நிறைந்திருக்கும்.
- சூரியன் அவர்களுக்கு அண்மையில் கொண்டுவரப்படும். மக்கள் தமது குற்றங்களுக்கு ஏற்ப வியர்வையால் மூழ்குவர்.
- ஒவ்வொருவரும் தம்மைப் பற்றியே நினைத்து கவலைகொள்வர்.
- அந்நாளில் சில மனிதர்களுக்கு எவ்வித கவலையும், பயமும் இருக்க மாட்டாது.
- அந்நாளில் அல்லாஹ்வின் அர்ஷின் கீழ் 7 கூட்டத்திற்கு நிழல் கிடைக்கும்.
- மேலும் நபி (ஸல்) அவர்களது உம்மத்தில் சிலர் நபியவர்களுக்கு சொந்தமான 'லிவாஉல் ஹம்து' எனும் கொடியின் கீழ் நிழல் பெறுவர்.

**ஹவ்ழுல் கவ்ஸர்**

- ''நிச்சயமாக நாம் உமக்கு கவ்ஸரைக் கொடுத்தோம்'' (108:1)
- மஹ்ஷர் வெளியின் கடும் சூட்டினால் மக்கள் அவதியுற்றிருக்கும் வேளையில் இவ்வுலகில்
- நன்மை புரிந்த நல்லடியார்களுக்கு நபியவர்களது உம்மத்தைச் சேர்ந்தோருக்காக தமக்கு பிரத்தியேகமாக வழங்கப்பட்ட ஹவ்ழுல் கவ்ஸரிலிருந்து நீர் புகட்டுவார்கள்.
- அந்நீர் பாலை விட வெண்மையானதாகவும், தேனை விட இனிமையானதாவும், கஸ்தூரியை விட வாசமுள்ளதாகவும் காணப்படும். அதனை அருந்தியோருக்கு அதன் பிறகு தாகமே ஏற்படாது.
- பச்சிலம் பாலகர்களை இழந்து பொறுமையுடன் இருந்த பெற்றோருக்கு பிள்ளைகள் மூலம் நீர் புகட்டப்படும்.

**ஹிஸாப் - விசாரனை**

- நபி(ஸல்) அவர்களது ஷபாஅத்தைத் தொடர்ந்து அல்லாஹ்வின் அர்ஷை மலக்குகள் சுமந்து வருவர். பின் விசாரனை ஆரம்பிக்கப்படும்.
- என்ற சொல்லே திடுக்கிடச் செய்யக்கூடியதாக இருக்கும்.
- 'அவர்களை மறுமைக்கு மீட்டுவதும் பின் விசாரிப்பதும் எம்மீது கடமையாகிறது.(88:25,26)
- நன்மையில் முதலில தொழுகை பற்றியும் தீமையில் முதலில் கொலை பற்றியும் விசாரனை செய்யப்படும்.
- வாய்களுக்கு பூட்டு போடப்படும், உடல் உறுப்புக்கள் பேசும். 'அந்நாளில் அவர்களுடைய நாவுகளும், அவர்களது கைகளும், அவர்களது கால்களும் அவர்களுக்கெதிராக அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிற்கு சாட்சி கூறும்.(24:24)
- ' அன்றைய தினம் நாம் அவர்களது வாய்களின் மீது முத்திரையிட்டு விடுவோம். அன்றியும் அவர்கள் சம்பாதித்துக்கொணடிருந்தது பற்றி அவர்களது கைகள் நம்முடன் பேசும். அவ்களது கால்கள் சாட்சி சொல்லும் (36:65)
- சிலர் கேள்விக்கணக்கின்றி சுவர்க்கம் நுழைவர். "எனது சமூகத்தில் அல்லாஹ்வுக்கு இணை வைக்காமலும் குறி சாஸ்திரம் பார்க்காமலும் உள்ள எழுபதினாயிரம் பேர் விசாரணையின்றி சுவனம் நுழைவர்''(புஹாரி)

**பட்டோலை**

- விசாரனையைத் தொடர்ந்து நன்மை தீமைகளை உள்ளடக்கிய பட்டோலை வழங்கப்படும்.
- மனிதனின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதாக அமையும்.
- வலக்கரத்தில் பெற்றோர் வெற்றியாளர்களாக திகழ்வர். இடக்கரத்தில் பெற்றோர்,' தான் பிறக்காமல் மண்ணாககவே இருந்திருக்கக் கூடாதா''! என அங்கலாய்ப்பர்.
- "வலக்கரத்தில் பட்டோலை வழங்கப்பட்டவர்கள் மகிழ்ச்சியில் மற்றவர்களைப் பார்த்து, "இங்கே வந்து எனது ஏட்டை வாசித்துப் பாருங்கள். நிச்சயமாக நான் இவ்வாறு ஒரு விசாரனையைச் சந்திப்பேன் என எண்ணியிருந்தேன்... இடது கரத்தில் பட்டோலை வழங்கப்பட்டவர்,'எனது பதிவேடு வழங்கப்படாமல் இருந்திருக்கக் கூடாதா! விசாரனை என்பது என்ன என்பதை நான் அறிந்திருக்க வில்லை. அது முடிந்துவிட்ட விடயமாக இருந்திருக்கக் கூடாதா?'' (69:19-29) என கதருவான்
- ஒவ்வொரு மனிதனதும் செயலைப்பற்றிய விரிவான குறிப்பை அவனது கழுத்தில் மாட்டியுள்ளோம். மறுமையில் அவனுக்கு அதனை ஒரு புத்தகமாக எடுத்துக் கொடுப்போம். அவன் அதனை வாசித்துப் பார்ப்பான். அப்போது அவனை நோக்கி, 'இன்றைய தினம் உன்னுடைய கணக்கைப் பார்க்க நீயே போதுமானவன்.
- இன்னும் (பட்டோலையாகிய) புத்தகம் (அவர்கள் முன்) வைக்கப்படும் அதிலுள்ளதைக் கண்டு குற்றவாளிகள் மிக்க அச்சத்துடன் இருப்பதைக் காண்பீர் மேலும் அவர்கள், ''எங்கள் கேடே! இந்த ஏட்டிற்கு என்ன (நேர்ந்தது)? சிறியவையோ பெரியவையோ எதையும் வரையறுக்காது இது விட்டுவைக்கவில்லையே!'' என்று கூறுவார்கள் இன்னும், அவர்கள் செய்த யாவும் அவர்கள் முன் வைக்கப்படுவதைக் காண்பார்கள் ஆனால் உம்முடைய இறைவன் ஒருவருக்கும் அநியாயம் செய்யமாட்டான் (18:49)

**மீஸான்**

- மறுமையில் அல்லாஹ் நீதி தவறாதவன் என்பதை உறுதிப்படுத்துவதற்காக நன்மை, தீமைகளை நன்மை தீமைகளை மிகத் துள்ளியமாக மதிப்பிடும் வகையில் ஒரு தராசு வைக்கப்பட்டிருக்கும்.
- அது நன்மை தீமைகளை மிகத்துள்ளியமாக எடுத்துக்காட்டிவிடும்.
- "உம்முடைய இறைவன் ஒருவருக்கும் அநியாயம் செய்யமாட்டான்'' (18:49)
- "மிகத்துள்ளியமான தராசுகளை நாம் வைப்போம். எந்தவொரு ஆத்மாவும் ஒரு சிறிதும் அநியாயமிழைக்கப்பட மாட்டாது. நன்மை தீமைகளின் கடுகளவு எடை இருப்பினும் அதை நாம் கணக்கில் கொண்டுவருவோம். கணக்கெடுக்க நாமே போதுமாணவர்கள்''.
- யார் அணுவளவு நன்மை செய்தாலும் அதனை அவர் அங்கு கண்டுகொள்வார். யார் அணுவளவு தீமை செய்கிறாரோ அவர் அதனைக் கண்டு கொள்வார். (99:7-8)
- அன்றைய தினம் (அவரவரின் நன்மை தீமைகளை) எடைபோடுவது உறுதி அப்போது யாருடைய (நன்மையின்) எடை கனத்ததோ அவர்கள் தாம் வெற்றியாளர்கள். யாருடைய (நன்மையின்) எடை (குறைந்து) இலேசாக இருக்கின்றதோ, அவர்கள் நம் வசனங்களுக்கு மாறுசெய்த காரணத்தால், அவர்கள் தமக்கு தாமே நஷ்டம் விளைவித்துக் கொண்டவர்கள் ஆவார்கள். (7:8-9)

**ஸிராத்** :

- நரகின் மேல் அமைக்கப்பட்டுள்ள ஒரு பாலமே ஸிராத் ஆகும்.
- சுவர்க்கத்தை அடையும் ஒவ்வொருவரும் அதனைத் தாண்டியே செல்ல வேண்டும்.
- ஒவ்வொருவரது செயல்களுக்கும் ஏற்ப ஒடுக்கமானதாகவும் விரிவானதாகவும் அது காணப்படும்.
- பல இலச்சக்கணக்கான மைல் துூரத்தைக் கொண்ட அதனை ஒவ்வொருவரும் தமது உலகின் செயல்கள், நன்மைகளுக்கு ஏற்றதான வேகத்தில் கடப்பர்.

- சிலர் கண்ணிமைப் பொழுதிலும், மின்னல் வேகத்தில், சிலர் வேகமாக ஓடியும், சிலர் ஓடியும், நடந்தும், தவழ்ந்தும் கடப்பர்.
- நரகவாசிகள் கடக்க முடியாது நரகில் வீழ்ந்து விடுவர்.
  சிலர் எவ்வித விசாரனையும் இன்றி கண் இமைக்கும் பொழுதுகளில் கடப்பர்.

**அஸ்ஹாபுல் அ.்.ராப் : சிகரவாசிகள்**

- ஸிராத் பாலத்தைத் தாண்டிய சிலரது நன்மை - தீமை சமப்பட்டதன் விளைவாக சுவாக்கத்திற்கோ, நரகத்திற்கோ செல்ல முடியாது அவற்றுக்கிடையில் காணப்படும் அ.்.ராப் எனும் சுவரில் காணப்படுவர்.
- "நரகவாசிகள், சுவர்க்கவாசிகள் ஆகிய இவர்களுக்கிடையே ஒரு திரையான மதில் உண்டு. அதன் சிகரங்களில் அநேக மனிதர்கள் இருப்பார்கள்... (7:46)
- "சிகரங்களில் இருப்பவர்கள் சில மனிதர்களை அவர்களது அடையாளங்களால் அறிந்து கொண்டு அவர்களை அழைத்து கூறுவார்கள்," நீங்கள் உலகத்தில் சேமித்து வைத்திருந்தவையும், நீங்கள் பெறுமையடித்துக் கொண்டிருந்தவையும் உங்களுக்குப் பயனளிக்கவில்லையே!" (7:48)
- சுவர்க்கத்தை ஆசித்தவர்களாக, ஏங்கித்தவிப்பர். அவர்களது உள்ளங்களில் கவலையும், பதற்றமும் நிகைொண்டிருக்கும். முகங்கள் வாடி கண்கள் ஒளி மங்கிக் காணப்படும்.
- நரகையும் அதன் வேதனைகளையும் கண்டு பயந்தவர்களாகவும், சுவர்க்கத்தையும் அதன் இன்பங்களையும் கண்டு ஏங்கியவர்களாக நீண்டகாலம் அங்கு காணப்படுவர். பின்னர் அவர்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டு சுவனத்தில் நுழைவிக்கப்படுவர்.

**சுவர்க்க வாழ்வு :**

- ஒரு முஸ்லிமின் உலக வாழ்வின் இறுதி இலக்கு
- உலக வாழ்வில் நன்மைகளை மாத்திரமே செய்து இறை திருப்தியைப் பெற்றமனிதர்களுக்காக... கு "இன்னும் விசுவசம் கொண்டு நல்லமல்களை செய்கின்றார்களே அத்தகையோர் சுவனபதியில் நுழைவர். அதில் அவர்கள் நிரந்தரமாக இருப்பர்".(அல்குர்ஆன்)
- "உங்கள் இறைவனிடமிருந்து கிடைக்கும் மன்னிப்புக்கும், வானங்கள் பூமியளவு விசாலமான சுவர்க்கத்திற்கும் விரையுங்கள். இறைவனை அஞ்சுவோருக்கு அது தயாரிக்கப்பட்டுள்ளது.(3:133)
- "எந்தக்கண்ணும் கண்டிராத, எந்தக்காதும் கேட்டிராத, உந்த உள்ளத்திலும் உதித்திராத இன்பங்களை என் நல்லடியார்களுக்காக நான் சுவர்க்கத்தில் தயார்படுத்தி வைத்திருக்கிறேன்" என்று அல்லாஹ் கூறியதாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி)
- **சுவர்க்கத்தின் பெயர்கள் :**
- 01. தாருஸ்ஸலாம் 02. தாருல் மகாம் 03. தாருல் ஜலால் 04. தாருல் கரார் 05. மகாமுன் அமீன் 06. மக்அது ஸித்க் 07. ஜன்னதுல் ம.்.வா 08. ஜன்னதுல் பிர்தவ்ஸ் 09. ஜன்னது அத்ன் 10. ஜன்னதுந் நஈம் 11. ஜன்னதுல் குல்த்
- **சுவர்க்கத்தின் வாயில்கள் :**
- "என் உயிர் எவன் கைவசமிருக்கிறதோ அவன் மீது சத்தியமாக சுவர்க்க வாசலின் இரு பக்கங்களுக்குமுள்ள தூரம் மக்காவுக்கும் யமனிலுள்ள ஹிம்யர் எனும் ஊருக்கும் இடையிலுள்ள அல்லது மக்கவுக்கும் ஷாமிலுள்ள புஷ்ரா எனும் ஊருக்குமிடையிலான தூரமாகும்". (புஹாரி)
- சுவர்க்கத்தில் 8 வாயில்கள் உள்ளன. அதில் "ரய்யான்" என்றழைக்கப்படும் வாயிலொன்று உள்ளது. அதில் நோன்பாளிகளைத் தவிர வேறெவரும் நுழைய மாட்டார்கள். (புஹாரி)

- “தொழுகையாளிகள் தொழுகையின் வாயிலினூடாகவும், அரப்போர் புரிந்தோர் ஜிஹாத் எனும் வாயிலினூடாகவும், நோன்பாளிகள் ரய்யான் எனும் வாயிலினூடாகவும், தர்மம் செய்தவர்கள் ஸதகா எனும் வாயிலினூடாகவும் அழைக்கப்படுவர்”. (புஹாரி)
- **சுவர்க்கத்தின் காவலாளிகள்**: “உங்கள் மீது சாந்தி உண்டாகட்டும். நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். நிரந்தரமாக இருக்கும் நிலையில் இதில் நுழையுங்கள்” என்று கூறுவர். (39:73)
- **சுவர்க்கத்தின் மண்** : என்னை சுவர்க்கத்துள் பிரவேசிக்கச் செய்யப்பட்டது. அங்கே முத்தாலான கழுத்தணிகளைக் கண்டேன். அதன் மண் (நருமணம் மிக்க) கஸ்தூரியாக இருந்தது”.(புஹாரி)
- **சுவர்க்கத்தின் அரண்மனைகள்** (39:20), (34:37), (25:75), (66:11)
- **சுவர்க்கத்தின் மரம்** : “சுவர்க்த்தில் ஒரு மரமிருக்கிறது. அதன் நிழலில் பயனிப்பவர் நூறு வருடங்கள் பயனித்தாலும் அதைக் கடந்து விட முடியாது” (புஹாரி)
- **சுவர்க்கத்தின் உணவுகள்** : ‘‘அவர்கள் விரும்பும் கனிகளுடன் அவர்கள் ஆசைப்படும் பறவைகளின் மாமிசத்துடன் (சுற்றி வருவார்கள்.) (56:20,21)
- “அதன் நிழல்கள் அனைவருக்கும் நெருக்கமாக இருக்கும். அதன் கனிகள் மிகத் தாழ்வாகத் தொங்கும்” (76:14)
- அங்கே அவர்களுக்கு கனிகள் உள்ளன. அவர்கள் கேட்டவை அவ்களுக்குக் கிடைக்கும். (36:57)
- அவர்களது இறைவன் தூய பானத்தை அவர்களுக்குப் பருகத்தருவான். (76:21)
- ஏதாவது கனி அவர்களுக்கு வழங்கப்பட்டால், “இதற்கு முன் இது தானே நமக்கு வழங்கப்பட்டது” என்று கூறுவார்கள். இதே தோற்றமுடையது தான் முன்னரும் கொடுக்கபட்டிருந்தது. (2:25)
- **ஆறுகள்** : பாலாறு, தேனாறு, மதுவாறு காணப்படுவதாக ஹதீஸகள் காணப்படுகின்றமை.
- **பாத்திரங்கள்** : தங்கம், வெள்ளிப் பளிங்குப் பாத்திரங்கள், தட்டுகள் மூலமே உணவு, பாணங்கள் பகிரப்படும். (43:71), (76:15-16)
- **ஆடைகள்** : சுன்துஸ், இஸ்தப்ரக் எனும் இரு வகையான பட்டாடை (45:51-53), (18:31)
- சுவர்க்கத்தில் நுழைபவர் இன்பத்திலேயே இருப்பார். துன்பத்தைக் காணமாட்டார். அவரது ஆடை இற்றுப்போகாது. இளமை அழிந்து போகாது. (முஸ்லிம்)
- **துணைவியர்** : ஹூருல் ஈன்கள் துணையாக கிடைப்பர். “இப்படித்தான் அவர்களுக்கு ஹூருல் ஈன்களை துணைகளாக்குவோம்”. (44:54), (55:56), (37:48-49)
- **குடும்பத்தினர்** : குடும்பத்தினர் அனைவரும் நல்லவர்களாக இருந்தால் அனைவரும் ஒன்றினையும் வாய்ப்பை அல்லாஹ் ஏற்பாடு செய்வான். (51:22)
- அங்கு எவ்வித குரோதமும் காணப்பட மாட்டாது. (7:43)
- என்றென்றும் இளமையுடனும், அழகுடனும் இருப்பர். அவர்களது அழகு ஒவ்வொரு பொழுதுகளிலும் அதிகரிக்கும். ஆதம் (அலை) அவர்களது உயரத்தில் இருப்பர்.
- சுவாக்கத்தின் இன்பங்கள் எல்லாவற்றையும் விட பெரிய இன்பம் யாதெனில் அல்லாஹ்வைக் காண்பதாகும். (75:22-23)
- புரண நிலவுள்ள நாளில் நபியவர்கள் முழு நிலவை கூர்ந்து பார்த்தபடி, “இந்த நிலவை நீங்கள் நெரிசல் இல்லாமல் பார்ப்பது போல உங்கள் இறைவனைப் பார்ப்பீர்கள்”. (புஹாரி)

**நரகம்**

- எவருடைய பாவத்தின் எடை கணத்ததோ அவர் தங்குமிடம்.
- சேரும் இடங்களில் மிகக் கெட்டது.

- சுவனத்தில் காணப்படும் வர்ணிக்க முடியாத இன்பங்களைப் போன்றே நரகு வர்ணிக்க முடியாதளவு வேதனைகள் கொண்டது.
- பாவங்களின் படித்தரத்திற்கேட்ப வித்தியாசமான 8 வகை நரகங்கள் காணப்படும்.

  1. ஜஹன்னம் 2. ஜஹீம் 3. ஹுதமா 4. ளலா 5. ஸகர் 6. ஸஈர் 7. ஹாவியா 8. வைல்

- இத்தகைய நரகில் காவலாளிகள் கடின உள்ளம் கொண்ட மலக்குகள் நியமிக்கப்படுவர்.
- “விசுவாசிகளே! மனிதர்களையும் கற்களையும் கொண்டு எறிக்கப்படும் நரக நெருப்பையிட்டும் அஞ்சிக் கொள்ளுங்கள். அதிலே கடின உள்ளம் கொண்ட மலக்குகள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு போதும் அல்லாஹ்வுக்கு மாறு செய்ய மாட்டார்கள். அவ்களுக்கு ஆவப்பட்டவற்றை அவ்வாறே செய்து விடுவார்கள்”. (66:6)
- அன்றைய நாளில் நரகம் 70000 சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு கொண்டு கொண்டு வரப்படும். ஒவ்வொரு சங்கிலியுடனும் 70000 வானவர்கள் இருந்து இழுத்து வருவர். (முஸ்லிம்)
- அதற்கு 7 வாசல்கள் உள்ளன. (43:44)
- அதன் மேல் கடுமையும் கொடூரமும் கொண்ட மலக்குகள் உள்ளனர் (66:6)
- உங்கள் உலக நெருப்பு நரக நெருப்பின் 70 பாகங்களிலிருந்து ஒரு பாகமேயாகும்.(புஹாரி)
- அபூ தாலிபுக்கான வேதனை... மிக இலகுவான வேதனை...
- கழுதையின் கத்தலை செவிமடுப்பர்...
- நரகின் எரி கற்களாக மனிதர்களும்... (2:24)
- குடிபானங்களாக கொதி நீரும், சீழும், “இதோ கொதி நீரும், சீழும் உள்ளது. இதை அவர்கள் சுவைக்கட்டும்”. (38:57)
- “அவ்கள் தண்ணீர் கேட்டால் முகத்தைப் பொசுக்கும் உருக்கிய செம்பு போன்ற கொதி நீர் வழங்கப்படும்”.(18:29)
- ஸக்கூம் எனும் மரம் குற்றவாளியின் உணவாகும் (44:43)
- **வேதனைகள்** : -
  - சங்கிலியால் விலங்கிடப்படல் (76:40
  - நெருப்பாலான ஆடை (22:19)
  - நெருப்பிலான தட்டுக்கள் (39:16)
  - தாரால் ஆன நீளங்கியும் சொறி சிரங்குச் சட்டையும் (ஒப்பாரி வைக்கும் பெண்கள்)
  - கொதிக்கும் நீர் தலையில் ஊற்றப்படுதல். (44:47-48)
  - கடும் உஷ்னம் (56:42-43)
  - நரக நெருப்பால் சூடு போடப்படுதல் (9:35)
  - தோல்கள் கருகி புதுப்பிக்கப்படுதல் (4:56)
  - சம்மட்டியடி (22:21)
  - கழுத்தில் சுற்றும் பாம்பு (ஸக்காத் வழங்காதோருக்கு அவர்களது செல்வம்...)
  - கழுத்தில் மாற்றப்படும் நிலம்...

## வினா – 14

**மறுமை பற்றிய நம்பிக்கை மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்கள் நான்கு தருக. / மறுமை பற்றிய நம்பிக்கையின் முக்கியத்துவம் / மறுமை நம்பிக்கையினால் ஏற்படும் விளைவுகள்**

- கஷ்டங்களின் போதும் கவலைகளின் போதும் அவற்றைச் சகித்துக் கொள்ளும் பொறுமையை ஏற்படுத்துகிறது.
- சுயநலப்போக்குகளில் இருந்து விடுபட்டு தன்னிடம் இருப்பதைக் கொண்டு திருப்தியடையும் மன நிலையும் தன்னிடம் இருப்பவற்றை மற்றவருக்கு வாரி வழங்கும் தாராளத்தன்மையும் ஏற்படுகிறது.
- எப்போதும் நேர்மையாளனாவும் மன உறுதியுடையவனாகவும் சுறுசுறுப்பானவராகவும் நற்பழக்கங்கள் உள்ளவராகவும் வாழ வழிகாட்டுகின்றது.
- மறுமையில் உயர்ந்த பதவிகளை அடைய வேண்டும் என்ற மனத்தூய்மையுடன் செயலாற்றத் தூண்டுகின்றது.
- மறுமையில் தனது நன்மை தீமைகள் ''மீஸானில்'' எடை போடப்படும் என்ற நம்பிக்கை ஒரு விசுவாசிக்கு நன்மைகளைச் செய்வதற்கும் தீமைகளைத் தவிர்ந்து கொள்வதற்கும் ஊக்கம் அளிக்கின்றது.
- பிறர் உரிமையை மீறாமல் நடந்துகொள்ளத் தூண்டுகின்றது.
- பிறரின் மூலமாக நமக்கு ஏற்பட்ட அநீதங்களுக்காக இவ்வுலக வாழ்க்கையில் நீதிகிடைக்காதபோது மறுமையில் ஏற்படவிருக்கும் தீர்ப்பை எண்ணி மனநிம்மதி அடைய முடிகின்றது.
- மறுமை பற்றிய நம்பிக்கை விசுவாசிகளின் உள்ளங்களில் “தக்வா” எனும் இறையச்ச நிலையை உண்டாக்கி விடுகின்றது.
- இவ்வாறே அது அவர்களுக்கு எந்நேரமும் நரக வேதனைகளை எச்சரித்துக் கொண்டும் சுவன இன்பங்களை ஆசையூட்டிக் கொண்டும் இருக்கின்றது. இதனால் விசுவாசிகளின் ஒழுக்க வாழ்வு சீர்படுகின்றது.

## வினா – 15

**இஸ்லாமிய கண்ணோட்டத்தில் உலக முடிவுக்கான அடையாளங்கள் நான்கினை முன்வைத்து அவற்றுள் இரண்டை சுருக்கமாக விளக்குக.**

- உலக முடிவுக்குரிய அடையாளங்களை பல வகையில் அடையாளப்படுத்தலாம்.
- சிறிய அடையாளங்கள், பெரிய அடையாளங்கள் எனவும், நடந்து முடிந்த அடையாளங்கள், நடந்துகொண்டிருக்கும் அடையாளங்கள், நடக்கவிருக்கும் அடையாளங்கள் எனவும் வகைப்படுத்தி நோக்கப்படலாம்.
- இதில் நடக்கவிருக்கும் அடையாளங்கள் அனைத்தும் பெரிய அடையாளங்களாக கொள்ளப்படுகின்றன. இவற்றில் ஒன்று நடைபெற்றால் அதனைத் தொடர்ந்து மற்றொன்று அடுத்தடுத்து ஏற்படும்.
- எனக்கும் மறுமைக்கும் இடையிலுள்ள நெருக்கம் இவ்வாறுதான் என்று நபியவர்கள்தன் சுட்டு விரலையும் நடு விரலையும் இணைத்துக் காட்டினார்கள். (புஹாரி)
- மறுமையின் அடையாளங்களைக் கூறுங்கள் எனக்கூறியதற்கு நபியவர்கள் “அடிமைப் பெண் தன் எஜமானியைப் பெற்றெடுப்பாள்; பாதணியோ ஆடையோ இல்லாத ஏழைகளும் இடையர்களும் உயர் கட்டிடங்களைக் கட்டுவதில் ஒருவருக்கொருவர் போட்டி போடுவார்கள்” (புஹாரி, முஸ்லிம்)

- நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் "பின்வரும் நிகழ்வுகள் நிகழாதவரை மறுமை ஏற்படாது அவை:
  - இரு பெரும் கோஷ்டியினரிடையே யுத்தம் மூண்டு அவர்களிடையே மிக அதிகளவிலான உயிர்ச்சேதம் நிகழும். அவ்விரு கோஷ்டியினரதும் கோஷம் ஒன்றே.
  - தன்னை அல்லாஹ்வின் தூதரென்று வாதிக்கும் ஏறத்தாழ 30 பொய்யர்கள் தோன்றுவர்.
  - அறிவைச் சுமந்த அறிஞர்கள் மரணிப்பர்.
  - பூகம்பங்கள் அதிகரிக்கும்.
  - காலம் சுருங்கும்.
  - கொலைகள் அதிகரிக்கும்.
  - தர்மம் பெறுவோரை தேட கஷ்டப்படும் அளவுக்கு உங்கள் மத்தியில் செல்வம் கொழிக்கும்.
  - தர்மத்தைக் கொண்டு போய்கொடுத்தால் கொடுக்கப்பட்டவர் அது எனக்கு அவசியமில்லை என்று எடுக்கமறுப்பர்.
  - மனிதர்கள் உயர்கட்டிடங்கள் கட்டுவதில் போட்டியிடுவர்;
  - ஒரு மனிதனின் புதைகுழியைக் கடந்து செல்லும் மனிதன் அவனது இடத்தில் தான் இருக்கக்கூடாதா என்று கைசேதப்படுவான்,
  - சூரியன் மேற்கில் உதிக்கும்

### 1. நடந்து முடிந்த அடையாளங்கள்

- நபி (ஸல்) அவர்களின் வருகை.
- முஸ்லிம்கள் தமக்கிடையே மோதிக்கொள்ளுதல் (ஜமல், ஸிப்பீன் யுத்தம்).
- நபித்துவ வாதம் புரியும் பொய்யர்களின் தோற்றம்.
- செல்வம் பெருகுதல் (உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் காலத்தில்)
- தாத்ததாரியர் யுத்தம் (ஹி- 7ம் நூற்றாண்டு).
- ஹிஜாஸ் நெருப்பு (ஹி- 654).
- பூகம்பங்கள் அதிகரித்தல்.

### 2. நடந்து கொண்டிருக்கும் அடையாளங்கள்

- மனோ இச்சைக்கு கட்டுப்படல்,
- உலோபித்தனம் அதிகரித்தல்.
- ஒருவனின் தீவினைக்கு பயந்து மரியாதை செய்தல்.
- தன் கருத்தையே சரியென வாதிடல், பிறர் கருத்துக்களை அலட்சியம் செய்தல்.
- உலக இலாபங்களுக்காக மார்க்க அனுஷ்டானங்களை மாற்றுதல்.
- கணவன் மனைவிக்கு கட்டுப்படல், மனைவி கணவனை அவமதித்தல்.
- துறவி வேடம் பூண்டு உலகப்பற்றற்றவரைப்போன்று நடித்தல்.
- காலம் சுருங்குதல்.
- குழப்பங்கள் அதிகரித்தல்.
- உயர் கட்டிடங்களை நிர்மாணிப்பதில் வறுமையிலிருப்போர் போட்டி போடுதல்.
- தகுதியற்றோர் உயர் பதவிகளில் அமர்த்தப்படுதல்.
- அமானிதம் மீறப்படுதல்.
- பள்ளிவாசல்களைப் பற்றி பெருமை பேசுதல்.
- அறிஞர்கள் மரணித்தல்.

- அறிவு கைப்பற்றப்படல்.
- கொலை அதிகரித்தல்.
- விபச்சாரம் பெருகுதல்.
- அறியமை அதிகரித்தல்.
- வட்டி, மதுப்பாவனை அதிகரித்தல்.

## வினா – 16

**மறுமை ஏற்படும் என்பதற்காக நபியவர்களால் எதிர்வு கூறப்பட்ட பெரிய அடையாளங்கள் நான்கினை விளக்குக.**

- இமாம் மஹ்தி அவர்கள் தோன்றி நீதியான ஆட்சி செய்வார்.
- இவர்களது ஆட்சியின் இறுதிப்பகுதியில் தஜ்ஜால் வெளிப்படுவான்.
- தஜ்ஜாலை அழிப்பதற்காக ஈஸா (அலை) அவர்களை அல்லாஹ் இவ்வுலகிற்கு அனுப்புவான்.
- ஈஸா (அலை) அவர்களின் ஆட்சியின் போது ய..ஜூஜ் ம..ஜூஜ் கூட்டத்தினர் தோன்றி உலகின் பல பாகங்களிலும் பரவி குழப்பம் விளைவிப்பர்.
- ஈஸா (அலை) அவர்களின் மறைவோடு அபீஸீனியாவைச் சேர்ந்த ஒருவனால் க..பா இடிக்கப்படும்.
- இரவு நீண்டு கொண்டே போகும், பின் மேற்கில் மறைந்த சூரியன் அதே திசையிலிருந்து கிளம்பி தனது கதிர்களை வெப்பமுடையதாக பரப்பிக்கொண்டிருக்கும். ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்து நிகழும் இந்நிகழ்ச்சிகளைக் காணும் மக்கள் திடுக்கிடுவர். அப்போது தௌபா ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- தாப்பதுல் அர்ழ் எனும் பெயரைக் கொண்டு பூமியில் திரியக்கூடிய ஓர் அற்புதமான பிராணி வெளிப்படும்.
- ஒரு வகையான புகை வெளிப்பட்டு ஈமானற்றவர்களுக்கு மயக்க நிலையை ஏற்படுத்திவிடும்
- பின்னர் நறுமணமுடைய காற்று வீசும். இதனால் முஸ்லிம்கள் அனைவரும் இறப்பர். அல்லாஹ் எனும் நாமத்தை உச்சரிக்கும் எவரும் இப்பூமியில் இருக்க மாட்டார்கள். காபிர்கள் மாத்திரம் எஞ்சியிருப்பர்.
- நெருப்பு வெளியாகி உலகமெங்கும் பரவும்.
- இஸ்ராபீல் (அலை) அவர்கள் சூர் எனும் குழலை அல்லாஹ்வின் ஆணைப்படி ஊத உலகம் முற்றாக அழிந்துவிடும்.

## வினா – 17

**மறுமை நம்பிக்கை ஒரு முஸ்லிமின் வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கங்களுள் ஆறு அம்சங்களை குறிப்பிடுக.**

- ஒவ்வோர் ஆத்மாவும் தனது செயல்களுக்குத் தனித்தனியாகப் பொறுப்பாளர்கள் எனும் உணர்வு ஏற்படுவதால் இவ்வுலகில் மனிதன் தனது வாழக்கையை செவ்வனே நெறிப்படுத்திக் கொள்வதற்குத் துணை செய்கின்றது.
- கஷ்டங்களின்போதும் கவலைகளின்போதும் அவற்றைச் சகித்துக்கொள்ளும் பொறுமையை ஏற்படுத்துகிறது.
- சுயநலப்போக்குகளில் இருந்து விடுபட்டு தன்னிடம் இருப்பதைக் கொண்டு திருப்தியடையும் மன நிலையும் தன்னிடம் இருக்கின்றவற்றை மற்றவர்களுக்கு வழங்கும் தாராளத்தன்மையும் ஏற்படுகிறது.

- எப்போதும் நேர்மையானவனாகவும் மன உறுதியுடையவனாகவும் சுறுசுறுப்பானவராகவும் நற்பழக்கங்கள் உள்ளவராகவும் வாழ வழிகாட்டுகின்றது.
- மறுமையில் உயர்ந்த பதவிகளை அடைய வேண்டும் என்ற மனத்தூய்மையுடன் செயலாற்றத் தூண்டுகின்றது.
- மறுமையில் தனது நன்மைகள் மீஸானில் எடை போடப்படும் என்ற நம்பிக்கை ஒரு விசுவாசிக்கு நன்மைகளை செய்வதற்கும் தீமைகளைத் தவிர்ந்துகொள்வதற்கும் ஊக்கமளிக்கிறது. பிறர் உரிமைகளை மீறாமல் நடந்துகொள்ள துணை செய்கிறது.
- பிறரின் மூலமாக நமக்கு ஏற்பட்ட அநீதங்களுக்காக இவ்வுலக வாழ்க்கையில் நீதி கிடைக்காத போது மறுமையில் ஏற்படவிருக்கும் தீர்ப்பை எண்ணி மனநிம்மதி அடைய முடிகின்றது.
- மறுமையைப் பற்றிய நம்பிக்கையானது விசுவாசிகளின் உள்ளங்களில் ‘‘தக்வா’’ எனும் பயபக்தி நிலையை ஏற்படுத்தி விடுகின்றது. இவ்வாறே அது அவர்களுக்கு எந்நேரமும் நரக வேதனைகளை எச்சரித்துக் கொண்டும் சுவன இன்பங்களை ஆசையூட்டிக் கொண்டும் இருக்கின்றது. இதனால் விசுவாசிகளின் ஒழுக்க வாழ்வு சீர்படுகின்றது.

## வினா – 18

**‘கழா’, ‘கத்ர்’ ஆகிய சொற்களை வரைவிலக்கணப்படுத்துக.**

**கழா:** ‘கழா’ - படைத்தல், தீர்ப்பளித்தல், நிறைவேற்றுதல்

- இஸ்லாமிய பரிபாசையில்: ‘அல்லாஹ் அவனது அறிவுக்கும், நாட்டத்திற்கும் ஏற்ப பிரபஞ்சத்தையும் அதில் உள்ளவற்றையும் சிருஷ்டித்துள்ளான்’

**கத்ர்:** கத்ர் - நிர்ணயித்தல், முன்னேற்பாடு, மட்டிடுதல், ஒரு விடயத்தின் முடிவு

- இஸ்லாமிய பரிபாசையில்: அல்லாஹ்வின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் சகல விடயங்களும் நிகழ்வதற்கான கால, நேர, இடம் பற்றிய நிர்ணயிப்பு அல்லது, இறை நியதி அல்லது அல்லாஹ்வின் அறிவு “கத்ர்” எனப்படும்.

  அதாவது: கத்ர் என்பது இறைவனின் முன்கூட்டிய அறிவின் படி படைப்புக்களுக்கு அவன் விதித்த தீர்மானமாகும்.

  உதாரணமாக, ‘கத்ர்’ என்பதை ஒரு வீட்டைக் கட்ட விரும்பும் ஒருவர் அதற்காக தயாரிக்கும் வரைபடத்திற்கும், ‘கழா’ என்பதை அவ்வரைபடத்தின் படி வீட்டைக்கட்டி முடிப்பதற்கும் ஒப்பிடலாம்.

**கழா கத்ர்:**

- பொதுவாக “கழா கத்ர்” என்ற இரு பதங்களையும் “இறைவனால் விதிக்கப்பட்ட விதி” என்று கூற முடியும்.

  அதாவது: அல்லாஹ் இப்பிரபஞ்சத்தில் ஏற்படுத்தியுள்ள திட்டவட்டமான ஒழுங்குகள், அல்லது முன்னளப்பு அல்லது அல்லாஹ்வின் கட்டளை அல்லது பிரபஞ்ச ஒழுங்கமைப்பு அல்லது இறை நிர்ணயம் அல்லது பொதுச் சட்டங்கள் காரண காரியத்தோடு இணைத்து வைத்துள்ள நியதிகளை ‘விதி’ என வழங்கலாம்.

- அல்லது அல்லாஹ்வின் கட்டளை என்றோ, அவன் நிர்ணயித்து விட்டிருக்கும் வானம், பூமி, மனிதன், ஏனைய ஜீவராசிகள், சடப்பொருட்கள் இவை அனைத்தினதும் நடத்தைகள், செயற்பாடுகள் அனைத்தினையும் உள்ளடக்கிய பிரபஞ்ச அமைப்பு குறித்த இறை ஞானத்தை இது குறிக்கிறது.

- **கழா கத்ர் என்பவற்றிற்கிடையில் உள்ள வேறுபாடு**

  சில அறிஞர்கள் இதனை வேறுபடுத்தி நோக்குவர். இரு சொற்களும் ஒரே கருத்தைக் கொண்டது என்பதுவே மிகக் கிட்டிய கருத்தாகும். ஏனெனில் அவை இரண்டையும் பிரித்து நோக்குவதற்கான எவ்வித ஆதாரமும் அல்-குர்ஆனிலோ ஸுன்னாவிலோ கிடையாது. இரண்டும் ஒரே கருத்திலேயே மாறி மாறிப் பிரயோகிக்கப்படுகின்றன. இருப்பினும் கத்ர் என்ற சொல் குர்ஆனிலும் ஹதீஸிலும் கூடுதலாக இடம்பெற்றுள்ளது.

# வினா – 19

**கழா கத்ர் நம்பிக்கையின் முக்கியத்துவத்தை அல்குர்ஆன், ஸுன்னா ஆதாரங்களுடன் முன்வைக்குக.**

01. **அல்-குர்ஆன் அடிப்படையில் கழா கத்ர் நம்பிக்கையின் முக்கியத்துவம்:**

- "நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும், (நிர்ணயிக்கப்பட்ட) அளவின்படியே படைத்திருக்கின்றோம்" (கமர்: 49)
- "இன்னும் அல்லாஹ்வுடைய கட்டளை தீர்மானிக்கப்பட்ட முடிவாக இருக்கின்றது" (அஹ்ஸாப்: 38)
- "அவன் எத்தகையவனென்றால், உங்களை களிமண்ணால் படைத்தான். பின்னர் உங்களுக்கு ஒரு தவணையையும் நிர்ணயம் செய்தான்..." (06:02)
- "ஒவ்வொரு சமுதாயத்தாருக்கும் ஒரு தவணையுண்டு. அவர்களது தவணை வந்துவிட்டால் ஒரு கணப்பொழுது பிந்தவுமாட்டார்கள், முந்தவுமாட்டார்கள்" (07:34)
- "அல்லாஹ் ஒரு தீமையை உம்மைத் தீண்டும் படி செய்தால் அதை அவனைத் தவிர (வேறு எவரும்) நீக்க முடியாது. அவன் உமக்கு ஒரு நன்மை செய்ய நாடிவிட்டால் அவனது அருளைத் தடுப்பவர் எவருமில்லை'' (10:107)

02. **ஹதீஸ் அடிப்படையில் கழா கத்ர் நம்பிக்கையின் முக்கியத்துவம்:**

- அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கும் "ஹதீஸு ஜிப்ரீல்" எனும் பிரபலமிக்க ஹதீஸில் ஜிப்ரீல் (அலை) நபி (ஸல்) அவர்களிடம், "ஈமான் பற்றி எனக்கு அறிவியுங்கள்?" என்று கேட்டமைக்கு பதிலளித்த நபியவர்கள், "அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும் அவனது வேதத்தையும் அவனது றஸூல்மார்களையும் மறுமை நாளையும் நீர் நம்புவதும் நல்லதும் கொடியதும் கத்ரின் படியே என்றும் நம்புவதாகும். (முஸ்லிம்)
- "சில மனிதர்கள் கத்ரை விசுவாசிப்பதில்லை என்ற செய்தி அப்துல்லாஹ் இப்னு உமர் அவர்களை எட்டியபோது கூறினார். நான் அவர்களைச் சந்தித்தால் அவர்களிடம் கூறுவேன்: நான் உங்களை விட்டும் நிரபராதியாகி விட்டேன் நீங்களும் என்னை விட்டு நிரபராதியாகி விட்டீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக உஹத் மலையளவு தங்கத்தைத் தர்மம் செய்தாலும் அவர்கள் கத்ரை நம்பும் வரை அவர்களது தர்மம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை (முஸ்லிம்).
- "வானம் பூமி படைக்கப்பட ஐம்பதாயிரம் வருடங்களுக்கு முன்னரே படைப்புக்களின் அளவீட்டை அல்லாஹ் எழுதி வைத்துள்ளான்" (முஸ்லிம்)

## வினா – 20

**விதியை நம்புவதன் அவசியம் குறித்து ஆராய்க.**

- அல்-குர்ஆன், ஹதீஸ் கட்டளை.
- ஈமானின் அடிப்படை ஆறு அம்சங்களுள் கத்ர் இறுதியானது.
- 'கத்ர்' பற்றிய நம்பிக்கை இறை நம்பிக்கையுடன் நேரடி தொடர்புடையது. அது அல்லாஹ்வின் பண்புகளை உறுதிப்படுத்துகின்றது.
- கத்ர் மனித வாழ்விற்கு அர்த்தபுஷ்டியை ஏற்படுத்துகிறது.
- கத்ர் இறைவனுக்கு உயர்வை வழங்குகிறது.
- கத்ர்ரை உரிய பிரகாரம் ஏற்றுக் கொள்ளாத போது வழிகேடு / குப்ரை ஏற்படுத்துகின்றது.
- கத்ர் முன்னைய சமூகத்தினரின் நம்பிக்கை கோட்பாடுகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. (அல்-குர்ஆன் 12:100) (அல்-குர்ஆன் - 07:155) (அல்-குர்ஆன் 37:102).

## வினா – 21

**கழாகத்ரை விசுவாசிப்பதால் ஏற்படும் நன்மைகளைக் குறிப்பிடுக. அல்லது 'கழா கத்ர்' பற்றிய நம்பிக்கை மனித வாழ்வை நெறிப்படுத்திக் கொள்வதற்கு எவ்வாறு துணை புரிகின்றது என்பதை விளக்குக.**

கழா கத்ரை விசுவாசம் கொள்வதன் மூலம் ஒரு மனிதனின் வாழ்வில் உயர்ந்த தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. அவற்றை பின்வருமாறு நோக்கலாம்:

- ஒரு முஸ்லிமை இலட்சிய வாதியாக மாற்றுகின்றது.
- சமநிலையான ஆளுமை உருவாகின்றது. (57: 22:23)
- மன அமைதியும், உள ஆறுதலும் ஏற்படுகிறது.
- விரக்தி நீங்கி பாதுகாப்புக் கிடைக்கிறது.
- செயற்பாட்டு வேகம் கூடுகிறது.
- அல்லாஹ்வின் மீது ஆழ்ந்த விசுவாசமும் நம்பிக்கையும் ஏற்படுகிறது.
- வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கும் மனப்பான்மையை தோற்றுவித்தல்
- மன நிறைவையும் சுறுசுறுப்பையும் தோற்றுவித்தல்.
- மனித பலவீனத்தை உணர்துகிறது.
- வாழ்வின் நிகழ்வுகளை அங்கீகரிக்கும் மனப்பக்குவத்தை ஏற்படுத்துகிறது.
- தோல்வி மனப்பான்மையிலிருந்து விடுதலை பெறல்.
- பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் ஏற்படுத்தல்.
- தொடர் முயற்சிக்கு வழிவகுத்தல்.

**ஈமானுக்கும் அஹ்லாக்குக்கும் இடையிலான தொடர்பு**

- ஈமானுக்கும் அமலுக்கும் இடையிலான தொடர்பு
- ஈமானுக்கும் அக்லாக்கிற்கும் இடையிலான தொடர்பு
- அமலுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு
- ஈமானுக்கும் அமலுக்கும் அக்லாக்குக்கும் இடையிலான தொடர்பு

**பின்வரும் சொற்றொடர்களுக்கிடையிலான வேறுபாட்டை மதிப்பிடுக / ஒப்புநோக்குக.**

- ஈமான் - அமல்
- இபாதத் - முஆமலாத்
- ஹுகூகுல்லாஹ் - ஹுகூகுல் இபாத்

# வினா – 01

**ஈமான் – அமல்**

- **ஈமான்** : ஈமான் என்பது உள்ளத்தால் நம்பி நாவால் மொழிந்து செயல்களால் வெளிப்படுத்துவதாகும்.
- **அமல்** : அமல் என்பது ஈமானின் விளைவாக வெளிப்படும் செயற்பாடுகளே அமல்களாகும்.
- இஸ்லாம் முழு வாழ்வையும் ஈமானுடன் பின்னிப்பிணைத்திருப்பது அதன் தனிச் சிறப்பம்சம்.
- ஒருவர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்கின்ற போது முதலில் ஈமான் அவசியம்...
- செயற்பாடுகளே ஈமானுள்ளவரை அடையாளம் காட்டுகின்றன.
- இஸ்லாத்தில் ஈமானும் அமலும் பின்னிப்பிணைந்தவை...
- அல்குர்ஆன் ஈமானையும் அமலையும் மூன்று விதமாகத் தொடர்பு படுத்திக் கூறுகிறது.
- ஈமான் கொண்டு நற்கருமங்கள் செய்வோர் என்று பொதுப்படையாகக் கூறுதல் உதாரணம் (2:25)
- அல்குர்ஆனில் ஏறத்தாள 52 இடங்களில் இவ்வாறு பொதுப்படையாகக் கூறப்பட்டுள்ளது.
- ஈமான் கொண்டவர்களின் பண்பாக பல்வேறு நற்கருமங்களைக் கூறுதல் உதாரணம் (23:1-11)
  இவ்வசனத்தில் தொழுகை, வீணான காரியங்களைத் தவிர்த்தல், ஸக்காத்துக் கொடுத்தல், கற்பைப்
  பேணல், அமானிதம் பேணல் ஆகிய அமல்கள் ஈமானுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளன.
- ஈமான் கொண்டவர்களை விளித்து நற்செயல்ளை ஏவுதலும் தீச்செயல்களை விலக்கலும்...
- அல்குர்ஆனைப் போலவே அல்ஹதீஸும் ஈமானுடன் அமலை இணைத்தே பேசுகிறது.
- நாளாந்த வாழ்வுடன் தொடர்பான அனைத்துக் காரியங்களையும் அது ஈமானுடன் தொடர்பு படுத்துகிறது.
- ‘‘அண்டை வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் உண்டு மகிழ்பவன் உண்மை முஃமினல்ல.’’ (தபரானி)

- ‘‘தனக்கு விரும்புவதை தனது சகோதரனுக்கும் விரும்பாதவரை மு.்.மினாக மாட்டான்.’’ (புஹாரி)
- ‘‘யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்கிறாரோ அவர் ...’’ (புஹாரி)

# வினா – 02

**இபாதத், – முஆமலாத்**

- **இபாதத்** என்பது மொழியில்: ‘அபத’ என்ற சொல்லிலிருந்து தோன்றியது.
- **பரிபாஷையில்** : பூரண அன்புடன்கூடிய பூரண கட்டுப்பாடு
- தொழுகை, நோன்பு, ஹஜ், குர்ஆன் திலாவத், பிரார்த்தனை, உம்ரா, திக்ர், தவ்பா, போன்ற புனிதத்துவம் கொண்ட அனைத்து வணக்கவழிபாடுகளும் இபாதாத் எனப்படுகின்றன.
- கடமையாக்கப்பட்டவை பர்ளுகள் என்றும் ஆர்வமூட்டப்பட்டவைகள் நபில்கள் என்றும் கூறப்படும்
- இவை நபி(ஸல்) அவர்களது முன்மாதிரிக்கமையவே செய்யப்படல் வேண்டும். முன்மாதிரிக்கு முரணாக அமைகின்ற போது பித்அத் எனப்படுகின்றது.

- **முஆமலாத் :** கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள். இபாதாத் தவிர்ந்த அனைத்து செயற்பாடுகளும் முஆமலாத் வகையைச் சார்ந்தவைகளாகும்.
- இவை செய்யப்படுவதற்கான அடிப்படை நோக்கம் மனிதர்களினதும் மற்றவைகளினதும் தேவைகளை நிறைவேற்றி வைப்பதாகும்.
- மனிதனின் அடிப்படைத் தேவைகள் முதல் வியாபாரம், திருமணம், ஏனைய கொடுக்கல் வாங்கல்கள், ஜீவகாருண்யம், சுற்றாடலைப் பேணல், நீதி நிர்வாகம் போன்ற அனைத்தும் முஆமலாத் வகையைச் சேர்ந்த அமல்களாகும்.
- ஷரீஅத் வழிமுறைக்கமையவும் அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்தும் உலக ஆசையோ சுயநலமோ இன்றி முஆமலாத் விடயங்களில் ஈடுபடும் போது அவைகளும் அல்லாஹ்விடம் இபாத்தாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
- ஈமான் பூரணமடைய தொழுகை போன்ற வணக்க வழிபாடுகளினூடாக இறை திருப்தியைப் பெற முயற்சிப்பவர் முஆமலாத்களினூடாகவும் அதைப் பெற முயல வேண்டும்.

# வினா – 03

**ஹுகூகுல்லாஹ் – ஹுகூகுல் இபாத்**

- **ஹுகூகுல்லாஹ்** : மனிதன் அல்லாஹ்வின் அடிமை என்ற வகையிலும் சமூகமாய் வாழ்பவன் என்ற
வகையிலும் அவன் அல்லாஹ்வுக்கும், ஏனையவற்றுக்கும் செய்யவேண்டிய கடமைகள் பல உள்ளன. அவற்றுள் அல்லாஹ்வுக்குச் செலுத்தவேண்டியவை.
- அல்லாஹ் அடியார்கள்மீது விதியாக்கியுள்ள தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற கடமைகளும் ஏவல்கள், விலக்கல்கள் என்ற அவனது கட்டளைகளும் ஹுகூகுல்லாஹ்வைச் சார்ந்தனவாகும்.
- இவற்றை முறையாக நிறைவேற்றுவது அடியார்களின் கடமையாகும். நிறைவேற்றாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றம்.
- இக்குற்றங்களை மன்னிப்பதும் மன்னிக்காமல் விடுவதும் அல்லாஹ்வைப் பொறுத்துள்ளது. தான் நாடியவர்களுக்கு ஷிர்க்கைத் தவிர எல்லாப் பாவங்களையும் மன்னிப்பதாக அல்லாஹ்வே கூறுகிறான்.

- **ஹுகூகுல் இபாத்:** ஒரு மனிதன் தனக்குத்தானே செய்ய வேண்டிய கடமைகள் மற்றும் பிறருக்கும் பிற உயிரினங்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகள்...
- இவற்றை அலட்சியப்படுத்த முடியாது.
- மனிதனது உயிரும், உடலும் அல்லாஹ்வினால் அவனுக்கு வழங்கப்பட்டுள்ள அமானிதங்களாகும். அவற்றைப் பேணுவதும், பாதுகாப்பதும் மனிதனது கடமையாகும்.
    - மனிதன் தனது உயிருக்கோ, உடலுக்கோ, பிறரது உடலுக்கோ தீங்கு விளைவிப்பதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை.
    - இஸ்லாம் பொருத்தமான உணவை அளவோடு உண்ணுதல்.
    - உடலையும், மானத்தையும் உடையைக் கொண்டு மறைத்தல்.
    - உள்ளத்திற்கும் உடலுக்கும் ஓய்வு வழங்குதல்.
    - இஸ்லாம் சுத்தத்தை வலியுறுத்தி சுகவாழ்விற்கு மனிதனை இட்டுச் செல்கின்றது.
    - ஆரோக்கியம், பொருத்தமான சிகிச்சை பெறுவது பற்றி பேசியுள்ளமை
- **பிற மனிதர்களுக்கு...**
    - கணவனாக, மனைவியாக, தந்தையாக, தாயாக,மகனாக, மகளாக, சகோதரனாக, சகோதரியாக நிறைவேற்ற வேண்டிய கடமைகளை...
    - குடும்பத்தலைவனாக உணவு, உடை, வீடு, பொருத்தமான கல்விக்கான செலவு, சுகவாழ்வு, பாதுகாப்பு, ஒழுக்கம், ஆன்மீகப் பயிற்சி போன்றவற்றை நிறைவேற்றக் கடமைப்படுகின்றான்.
    - அதற்காக உழைப்பது, செலவு செய்வது, வழிகாட்டுவது குடும்பத் தலைவனுக்கு கடமையாகின்றது. அதேபோன்று குடும்பத் தலைவி...
    - உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள்
    - அநாதைகள், விதவைகள், நோயாளர்கள், அங்கவீனர்கள், கைவிடப்பட்ட வயோதிபர்கள்...
    - இவர்களுக்குத் தனிப்பட்ட வகையிலும் கூட்டாகவும் சமூகம் உதவ வேண்டும். ஸகாத், ஸதகா, ஸகாதுல் பித்ர் எனவுள்ள பொதுக் கடமைகளுக்கூடாகவும் ...
    - சமூக நலன் கருதி செய்ய வேண்டிய பொதுப் பணிகளும் இவற்றிலடங்கும். பொதுப் பாதைகள், கிணறுகள், கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள், நூலகங்கள், பள்ளிவாசல்கள், கழிவறைகள்...
    - வறட்சி, வெள்ளம், புயல், பூகம்பங்கள் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போதும் விபத்து, கலவரம், யுத்தம் போன்றஅசாதாரண சூழ்நிலைகளின் போதும் சமூக நலப்பணிகளில் ஈடுபடுவதும்...

## வினா – 04

**பர்ளு ஐன் - பர்ளு கிபாயா**

- **பர்ளு ஐன்**:
    - ஒவ்வொரு தனிநபரும் நிறைவேற்றவேண்டிய ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாத் சார்ந்த கடமைகள் அனைத்தும் பர்ளு ஐன் எனப்படுகின்றன: ஐங்காலத் தொழுகை, குடும்பத்தைப் பராமரித்தல், தனது ஊதியத்துக்குரிய பணி போன்றன.
    - அவற்றை நிறைவேற்றாதவன் குற்றவாளியாகக் கருதப்படுவான்.

- **பர்ளு கிபாயா** என்றால் எல்லோர் மீதும் கடமையான பொது விடயங்களாகும்.
    - அவற்றுள் ஜமாஅத் தொழுகை போன்ற ஹுகூகுல்லாஹ் சார்ந்த விடயங்களும் பொதுப்பணியுடன் தொடர்பான ஹுகூகுல் இபாத் சார்ந்த விடயங்களும் அடங்குகின்றன.

- அவற்றைப் பேணுவது சமூகத்தார் அனைவர் மீதும் கடமையாகும். யாராவது அவற்றை நிறைவேற்றினால் சமூகத்தின் மீதுள்ள பொறுப்பு நீங்குகிறது. ஆனால் நிறைவேற்றியவர்கள் மட்டுமே அல்லாஹ்விடத்தில் நன்மைகளைப் பெற்றுக்கொள்வர்.
- உதாரணங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.
- அனைத்து அமல்களையும் ஒரு மு.்.மின் சமாந்தரமாகப் பேணுவது அவசியமாகும்.

## வினா – 05


**ஈமானுக்கும் அக்லாக்குகளுக்குமிடையிலான தொடர்பை விளக்குக.**

- இஸ்லாம் அமல்களுக்கு முக்கியத்துவம் வழங்கியிருப்பது போன்று ஒழுக்கத்துக்கும் கூடிய முக்கியத்துவம்…
- ‘‘நான் நல்லொழுக்கங்களைப் பூர்த்தியாக்கவே அனுப்பப்பட்டுள்ளேன்’’
- ‘‘நபியேநீர் சிறந்த நற்குணமுடையவராக இருக்கின்றீர் ’’ (அல்குர்ஆன்)
- இஸ்லாம் ஒழுக்கத்தையும் ஈமானுடன் தொடர்புபடுத்தியே நோக்குகிறது. நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ‘‘ஈமான் எழுபதுக்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டது…’’.( புஹாரி, முஸ்லிம்)
- இஸ்லாம் ஈமான், அமல், அக்லாக்கினையும் இணைத்து மூன்றையும் பிரிக்கமுடியாத ஒரே உருவாகக் காட்சிப்படுத்துகிறது.
- ஈமானில் பூரணத்துவம் மிக்கவர் அவர்களுள் அழகிய நற்குணமுடைவராவார். ’’ (திர்மிதி)
- “மறுமையில், மு.்.மினின் மீதானில் நல்லொழுகத்தை விடவும் எடைகூடிய இன்னொன்று இருக்கமுடியாது’’. (திர்மிதி)
- ‘‘மு.்.மின், தனது நல்லொழுக்கத்தினால், நின்று வணங்கும் நோன்பாளியின் அந்தஸ்த்தை அடைந்துகொள்கிறார் ’’. (அபூதாவூத்)
- ‘‘உங்களில் எனக்கு மிகவும் விருப்பமானவரும் மறுமையில் எனக்கு மிகவும் நெருக்கமாக அமர்பவரும் யாரெனில் உங்களில் சிறந்த நற்குணமுடையவராவார்’’.(திர்மிதி)
- ஒரு மனிதன் தீய செயல்கள் ஈமானின் பலவீனத்தைக் காட்டும், ‘‘விபசாரம் புரிபவன் விபசாரம் புரியும்போது மு.்.மினான நிலையில் அவ்வாறு செய்யமாட்டான். திருடன் திருடும் போது மு.்.மினான நிலையில் திருடமாட்டான். ஒருவன் மது அருந்தும் போது மு.்.மினான நிலையில் மது அருந்த மாட்டான். ’’ (புஹாரி)

## வினா – 06

**இஸ்லாம் ஈமானையும் அமலையும், ஈமானையும் அக்லாக்கையும், அமலையும் அக்லாக்கையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தும் விதத்தை விளக்குக.**

- ஈமான் ஆனது இபாதாத் முஆமலாத் அக்லாக் ஆகியவற்றுடன் தனித்தனியாக இருவழித் தொடர்பைக் கொண்டுள்ளது. இது இபாதாத், முஆமலாத், அக்லாக் ஆகியன ஈமானின் பிரதிபலிப்பாக இருப்பது போலவே அவை ஒவ்வொன்றும் ஈமானுக்குச் சான்று பகர்வனவாயும் உள்ளன என்பதை விளக்குகிறது.



வரிப்படம்

- ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் ஈமானின் அளவுக்கு ஏற்பவே அவற்றின் தரம் அமைகிறது. தரத்துக்கு ஏற்பவே அல்லாஹ்விடம் வெகுமதி வழங்கப்படுகிறது. ஈமான் இல்லாத அமல்கள் பயனற்ற கானல் நீர் போன்றது.

- ஈமானுடன் ஒன்றறக் கலந்த இபாதாத், முஆமலாத், அக்லாக் ஆகியவற்றுக் கிடையிலான தொடர்பு சுழற்சி முறையில் காணப்படுகிறது. அதாவது, இபாதாத் சிறந்த அக்லாக்குகளை ஏற்படுத்தும் போது முஆமலாத் சிறப்புறுகிறது. அப்போது முஆமலாத் இபாதத் ஆக மாறுகிறது.
- ஈமான், அமல், அக்லாக் ஆகியவற்றிற்கிடையில் இஸ்லாம் ஏற்படுத்தியுள்ள தொடர்பை விளக்கப் பின்வரும் உதாரணம் மிகவும் பொருத்தமானது.
- ஈமான் உயிர் போன்றது. அமல் உடல் போன்றது. அக்லாக் உடலை மறைக்கும் ஆடை அணிகலன் போன்றன. எனவே ஒரு முஸ்லிம் ஈமான் மூலம் வெளிப்படும் அமல்களை அஹ்லாக் எனும் ஆடை அணிகலன்களினால் அலங்கரிப்பவனாக இருக்க வேண்டும். இதுவே அவனது இம்மை மறுமை வெற்றிக்கு வழியாகும்.

**அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவின் அகீதா**

- தௌஹீதுக்கு முரணானவை
    - ஷிர்க்
    - குப்ர்
    - நிபாக்
    - ரித்தத்
    - இல்ஹாத்
- ஈமானில் முரண்பட்ட கொள்கை
    - ஷீஆ
    - கவாரிஜ்
    - மு.்.தஸிலா
    - வஹ்த்துல் வஜூத்

# வினா – 01

**அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ தோற்றத்திற்கான காரணத்தைக் குறிப்பிடுக.**

- **மொழிரீதியாக**: வழிமுறை சார்ந்த கூட்டம்
- **இஸ்லாமிய மரபில்** : அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் அவற்றை முழுமையாக அடியொட்டி வாழ்ந்த ஸலபுஸ்ஸாலிஹீன்களாகிய ஸஹாபாக்கள் தாபிஈன்கள் தபஉத் தாபிஈன்கள் ஆகியோர் வழியில் செல்வோர்.
- இவர்கள் அஹ்லுல் அஸர். அஹ்லுல் ஹதீஸ், தாஇபதுல் மன்ஸுரா, பிர்கதுன் நாஜியா போன்ற சொற்களாலும் அழைக்கப்படுகின்றனர்.

- **தோற்றம்** : நபியவர்களின் காலத்திலிருந்தே அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆ தோற்றம் பெற்றது. என்றாலும் இப்பெயர் கொண்டு அந்தச் சமூகம் அப்போது அழைக்கப்படவில்லை.
- அலி(ரழி) அவர்களது காலத்தில் ஏற்பட்ட அகீதா ரீதியான வேறுபட்ட சிந்தனைப்பிரிவுகள் தோற்றம் பெற்றதுடன் தாம் மாத்திரமே சரியான வழியில் செல்வோர் என்றும் வாதிட்டது.
- இவ்வாறான சூழலில் சரியான அகீதாவை அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் முழுமையாக அடியொட்டி வாழ்ந்த ஸலபுஸ்ஸாலிஹீன்களாகிய ஸஹாபாக்கள் வழியில் தெளிவுபடுத்திக் காட்டுவதற்காக அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆ என்ற சொற்பிரயோகம் உபயோகிக்கப்பட்டது.
- இந்த சார்ந்தவர்களே நேரான வழியில் செல்பவர்களாகவும் மறுமையில் வெற்றிபெறும் கூட்டத்தினர்களாகவும் இருப்பர், ''பனூ இஸ்ரவேலர்கள் 72 பிரிவினராகப் பிரிந்தனர். எனது உம்மத்தினர்...

- “அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவை சேர்ந்தோரே வெற்றிபெற்ற பிரிவினராவர். அவர்களே மிகப்பெரிய கூட்டத்தினருமாவர். யார் குர்ஆனையும் ஸுன்னாவையும் இஜ்மாவையும் அடிப்படையாக வைத்துப்
பேசுகிறாரோ அவர் அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஅத்தைச் சார்ந்தவராவார் ” -இப்னு தைமியா-

## வினா – 02

**‘ஷிர்க்’ எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்தி அதன் வகைகளை உதாரணங்களுடன் விளக்குக.**

- மொழி அடிப்படையில், பங்காளியாக்குதல் எனப் பொருள் தரும்.
- ஷிர்க் என்ற பதம் தவ்ஹீத் என்ற பதத்திற்கு நேர் எதிரானதாகும்.
- இஸ்லாமிய வழக்கில்: முழுப்பிரபஞ்சத்தையும் படைத்துக்காக்கும் அல்லாஹ்வின் உலூஹிய்யத். ருபூபிய்யத், தாத், ஸிபாத் ஆகியவற்றில் அல்லாஹ்வுக்கு இருக்கும் தனித்துவங்களை இன்னொன்றுக்கு வழங்குவதோ அல்லது அல்லாஹ்வுக்காக மாத்திரம் நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்களை இன்னொன்றுக்காகவும் நிறைவேற்றுவதோ ஷிர்க் என்று அழைக்கப்படுகிறது”

**ஷிர்க்கின் வகைகள்:**

- ஷிர்க் அவற்றின் பாரதூரத்திற்கு ஏற்பவும் அவற்றின் தன்மைகளுக்கு ஏற்பவும் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கப்படுகிறது.

1. **ஷிர்க்குல் அக்பர்:**

   இது மிகவும் பாரதூரமானது என்பதனாலேயே பெரிய வகை ஷிர்க் என்று அழைக்கப்படுகிறது. தான் மன்னிக்காத குற்றம் என்று அல்லாஹ்இதனையே கூறுகின்றான். இது ஜலி, கபி என்று இரு வகைப்படுகிறது.

   i. ஷிர்குல் ஜலி (தெளிவான ஷிர்க்):

   அல்லாஹ் அல்லாத வற்றை கடவுள் என்றோ அல்லது கடவுளுக்கு நிகரானதென்றோ அல்லது கடவுள் தன்மை கொண்டதென்றோ நினைத்து அவற்றை வணங்குவது ஷிர்க்குல் ஜலி எனப்படும். இங்கு வணங்கப்படும் பொருளும் வணக்கத்திற்குரிய செயற்பாடும் மயக்கமின்றித் தெளிவாகக் காணப்படும்.

   உ-ம்: சூரியன், சந்திரன். விக்கிரகங்கள், கற்கள், மிருகங்கள், ஜின்கள், ஷைத்தான்கள், மனிதர்கள்.

   ii. ஷிர்குல் கபி (மறைவான ஷிர்க்):

   அல்லாஹ் அல்லாதவற்றை கடவுள் என்றுகருதி அவற்றை வணங்காவிட்டாலும் அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரிய உரிமைகளை அவனல்லாதவற்றுக்கு வழங்குவது ஷிர்குல் கபி எனப்படும். இங்கு மேற்கொள்ளப்படுகின்ற செயல் வெளிப்படையில் வணக்கம் போன்று தென்படாமல் இருப்பதே இவ்வாறு அழைக்கப்படக் காரணமாகும்.

   உ-ம்: மரணித்தவர்களிடம் உதவி தேடல், அவர்களிடம் பிரார்த்தித்தல், சட்டமியற்றும் அதிகாரத்தை அல்லாஹ் அல்லதாவற்றுக்கு வழங்குதல் போன்றன. ஷிர்குல் கபி மயக்கமாக இருப்பதன் காரணமாக அது பற்றிய விளக்கமில்லாத அதிகமானோர் ஷிர்க்குல் அக்பர் என்ற பெரும் பாவத்தைச் சர்வ சாதாரணமாகச் செய்கின்றமை ஆபத்தான விடயமாகும்.

2. **ஷிர்குல் அஸ்கர்:**

ஷிர்குல் அக்பரோடு ஒப்பிடுகையில் இது பாரதூரம் குறைந்ததனாலேயே அவ்வாறு அழைக்கப்படுகிறது. எனினும் இதுபற்றியும் இஸ்லாம் கடுமையாக எச்சரிக்கிறது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"தஜ்ஜாலுடைய பித்னாவை விடவும் சிறிய ஷிர்க் ஆபத்தானது. "அல்லாஹ்வைப் பற்றிய அறிவும் தவ்ஹீத் பற்றிய நம்பிக்கையும் குறைந்து செல்கின்ற போதே இவ்வகையான ஷிர்க் தோற்றம் பெறுகிறது.

இஸ்லாமிய அறிஞர்கள் பின்வருவனவற்றை சிறிய வகையான ஷிர்க் என அடையாளப்படுத்துகின்றனர்.

1. அல்லாஹ் அல்லாதவற்றைக் கொண்டு சத்தியம் செய்தல்
2. நூல், வளையம் என்பன கட்டுதல்.
3. மந்திரித்தல்
4. சூனியம்செய்தல்
5. வசியம் செய்தல்
6. சோதிடம் பார்த்தல்
7. சகுனம் பார்த்தல்
8. அல்லாஹ் அல்லாதவற்றின் பெயரில் நேர்ச்சை வைத்தல்
9. அல்லாஹ் அல்லாதவற்றுக்காக பலியிடுதல்

# வினா – 03

**ஷிர்க்கின் விளைவுகள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக.**

1. நற்காரியங்கள் அனைத்தும் பயனற்றுப் போகின்றன.(39:65),(6:88)
2. அல்லாஹ்வின் மன்னிப்புக் கிடைக்காமல் போகின்றது. (4:48)
3. இறை இல்லத்தை மாசுபடுத்துகிறது (9:28)
4. காற்றில் அகப்பட்ட துரும்பைப் போன்று அலைக்கழிக்கப்படுவான் (22:31)
5. சுவர்க்கம் ஹராமக்கப்பட்டு நரகத்தில் நிரந்தரமாகத் தள்ளப்படுவான் (5:72)
6. மனித சமூகத்தின் ஒருமைப்பாடு குலைந்து போகும்

# வினா – 04

**குப்ர் என்றால் என்ன எனக் கூறி, அதன் வகைகளை உதாரணங்களுடன் விளக்குக.**

- மொழி அடிப்படையில், 'குப்ர்' என்ற பதம் மறைத்தல், மூடுதல் போன்ற கருத்துக்களில் கையாளப்படுகிறது. இஸ்லாமி வழக்கில், இஸ்லாத்தின் நம்பிக்கைகளையும் திட்டவட்டமாக அறியபட்ட அதன் செயன்முறைகளையும் நிராகரிப்பதைக் குறிக்க இப்தம் பயன்படுகிறது.
- அல்லாஹ்வின் பெயர்கள், பண்புகள், படைப்பாற்றல், நி.ஃ.மத்துக்கள் அவனது வழிகாட்டல்கள் போதனைகள் போன்றவற்றில் ஒன்றை மறுத்தல்.
- இஸ்லாமிய அடிப்படை நம்பிக்கைகளுக்கு முரணாக ஒருவனது செயற்பாடுகள் அமையும்போது, இறைகட்டளைகளை வேண்டுமென்றே புறக்கணிக்கும்போது, பெரும் பாவங்களில் தொடர்ந்தும் அலட்சியயமாக ஈடுபடுவோமானக இருந்தால் குப்ர் ஏற்படும்.
- அல்குர்ஆனும் சுன்னாவும் எச்சரிக்கின்றன.
- குப்ர் மிக பாரதுாரமானது எனவே, முஸ்லிம் ஒருவரை காபிர் என கூறுவது பாரிய குற்றமாகும்

**அதன் வகைகள்:**

**1. நம்பிக்கை சார்ந்தவை :**

- இறை நம்பிக்கையுடன் தொடர்பானவை : அல்லாஹ் இல்லையென நம்புதல்
- நபித்துவ நம்பிக்கையுடன் தொடர்பானவை : முஹம்மத் (ஸல்) இற்குப் பின்னர் நபி வரலாம் என நம்புதல்
- மறைவான அம்சங்கள் தொடர்பானவை : மலக்குமார்களை, மறுமையை நம்ப மறுத்தல்
- ஷரீஅத் சட்டங்களுடன் தொடர்பானவை : ஷரீஆ சட்டங்கள் எனக்கில்லை என நம்புதல்

**2. சொல் சார்ந்தவை**

- அல்லாஹ்வைத் தூற்றுதல்
- ஸஹாபாக்களை தூற்றுதல்

**3. செயல் சார்ந்தவை**

- இழிவுபடுத்தும் நோக்கில் அல்குர்ஆன் பிரதியை கிழித்தல்
- நபயைப் போன்று வேடம் தரித்தல்

**காபிர்களோடு நடந்து கொள்ள வேண்டிய ஒழுங்குகள்:**

- மார்க்க விடயங்களில் சமரசம் கிடையாது,
- முஸ்லிம்களுக்கு எதிரானவர்களுடன் ஒட்டுறவு கிடையாது,
- இஸ்லாத்தை, முஸ்லிம்களை அவமதிக்காதோருடன் நல்ல முறையில் நடந்து உபகாரம் செய்வது
- முஸ்லிம்களின் எதிரிகளுடனும் நியாயமாக நடத்தல்

# வினா – 05

**'நிபாக்' என்ற சொல்லை வரைவிலக்கனப்படுத்தி அதன் பிரதான வகைகளை விளக்குக.**

- **மொழியில் : நாபக** - கடந்து செல்லுதல் - மறைவு, சூழ்ச்சி, சுரங்கப்பாதை
- மக்கா காலத்தில் இருக்கவில்லை. மதீனா காலத்தில் தோற்றம் பெற்றமை…
- **பரிபாஷையில் :** உள்ளத்தில் உள்ள நம்பிக்கைக்கு முரணான சொல்லையோ செயலையோ வெளிப்படுத்தல் - இமாம் இப்னுல் அரபி
- "வெளிப்படையாக நலவைக் காட்டலும் உள்ரங்கமாக தீயதை மறைத்துக் கொள்ளலும்"- இப்னு கஸீர்
- "வெளிரங்கத்துக்கு முரணான உள்ரங்கம் - இமாம் இப்னுல் ஹஜர் அல்அஸ்கலானி
- ஏனையவற்றை விடவும் ஆபத்தானது. "நிச்சயமாக முனாபிக்கள் நரகத்தின் அடித்தளத்தில் இருப்பார்கள்''

**வகைகள்** :

- நம்பிக்கை சார்ந்தது, அமல் சார்ந்தது என்று வகைப்படுத்தி நம்பிக்கை சார்ந்த நிபாக்கையுடையவர்களே நரகில் நிரந்தரமாகத் தங்குவார்கள். செயல் சார்ந்த நிபாக் பெரும் பாவத்தை ஒத்தது. - இமாம் இப்னுல் அரபி, இப்னு கஸீர் -
- நிபாக்குல் குப்ர், நிபாக்குல் அமல் - இமாம் இப்னு ஹஜர்
- நிபாக்கை மார்க்கத்தில் இருந்து வெளியேற்றிவிடக் கூடிய பெரிய வகை நிபாக் என்றும் மார்க்கத்தில் இருந்து வெளியேற்றும் அளவு பாரதூரம் இல்லாத சிறிய வகை நிபாக் - இப்னு தைமியா, இப்னு ரஜப்
- மேலும் முக்கிய வகைகள் 2

**பெரிய வகை நிபாக்**

- "ஒரு மனிதன் விசுவாசிப்பது போன்று வெளிரங்கத்தில் காட்டிக் கொண்டு உள்ரங்கத்தில் அவற்றுக்கு முரணான நம்பிக்கையில் இருப்பதாகும்". எ இந்த வகை நிபாக் தான் நரகின் அடித்தளத்தில்...
- இவர்கள் நபியவர்களது காலத்திலும் பின்னரும் இருந்து கொண்டே இருக்கின்றனர்.
- நயவஞ்சகம் தொடர்பில் அல்குர்ஆனில் வந்துள்ள பண்புகள்...
- நபியவர்களை அல்லது அவரது ரிஸாலத்தின் ஒரு பகுதியை நிராகரித்தல் அல்லது வெறுத்தல்
- மார்க்கத்தின் மறைவை நினைத்து மகிழ்தல் அல்லது அதன் வெற்றியை வெறுத்தல்
- நபியவர்கள் கூறிய விடயங்களை ஏற்க வேண்டும் என்ற கடமைப்பாட்டை நம்பாதிருத்தால்
- நபியவர்கள் ஏவிய விடயங்களில் அவர்களுக்கு கட்டுப்பட வேண்டும் என்ற கடமைப்பாட்டை மறுத்தல்
- நபியவர்களுக்கு நோவினை செய்தல் அல்லது அவரைக் குறை கூறுதல்
- மு.ஃமின்களை எதிர்க்கும் காபிர்களுக்கு ஆதரவாய் நிற்றல்
- மு.ஃமின்கள் அல்லாஹ்வுக்கும் தூதரையும் கட்டுப்பட்டுவதால் அவர்களைப் பரிகசித்தல்.
- அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் தீர்ப்பைப் புறக்கணித்தல்.

**சிறிய வகை நிபாக்**

- உள்ரங்கத்துக்கும் வெளிரங்கத்துக்கும் இடையில் உள்ள முரண்பாட்டின் சாதாரண ஒரு நிலையாகும். உதாரணமாக :-ஒருவர் மீதுள்ள வெறுப்பையும் குரோதத்தையும் மறைத்துக் கொண்டு அவரைநேசிப்பது போன்றும் அவருக்கு உதவி செய்வது போன்றும் வெளிக்காட்டிக் கொள்ளுதல்.
- வணக்க வழிபாடுகளில் ஆர்வமுடையவராகத் தன்னைக் காண்பித்துக் கொண்டு ஈடுபடாதிருத்தல்.
- மார்க்கத்தில் நம்பிக்கை இருப்பினும் அதற்காக எவ்விதத் தியாகமும் செய்யாதிருத்தல்.
- சிறிய வகை நிபாக்கின் அடயாளங்கள் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள்
- "நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று...
- ஒரு மு.ஃமினிடம் குறிப்பிடப்பட்ட நிபாக்கின் பண்புகள் காணப்படுமாயின் அவன் காபிர் என்றோ நரகத்தில் நிரந்தரமாகத் தங்கும் முனாபிக் என்றோ தீர்ப்பளிக்கப்படுவதில்லை.
- நயவஞ்சகர்களின் பண்புகள் பற்றிய ஹதீஸ்கள் ஒரு முஸ்லிமிடம் அப்பண்புகள் வந்து விடக் கூடாது என்பதற்காக அவனை எச்சரிக்கும் நோக்கிலேயே கூறப்பட்டுள்ளன.
- பெரிய வகை நிபாக்கிற்கும் சிறிய வகை நிபாக்கிற்கும் இடையில் உள்ள பொதுத் தன்மை "உள்ரங்கத்துக்கு முரணான வெளிரங்கத்தின் நிலைப்பாடாகும்."
- இந் நிலைப்பாட்டை உணர்ந்த சில ஸஹாபாக்கள் கூட சில சந்தர்ப்பத்தில் தாமும் முனாபிக்காகி விட்டோமா என்று நிலை தடுமாறினார்கள். இதற்கு ஹன்ஸலா (ரழி) அவர்களது சம்பவம் சிறந்த உதாரணமாகும்.

# வினா – 06

**'இல்ஹாத்' என்றால் என்ன என்பதைக் கூறி வரலாற்று ரீதியாக அது பரவியமைக்கான காரணங்களைக் விளக்குக.**

- குறித்த ஒரு இலக்கிலிருந்து தவறிவிடுதல், விட்டுத் திரும்புதல், புனிதத்துவத்தை இல்லாமல் செய்தல், மார்க்கத்தைப் பொய்ப்பித்தல்
- அல்லாஹ்விலோ அடிப்படை நம்பிக்கையில் ஒன்றிலோ சந்தேகம் கொள்ளல்

- இப்பிரபஞ்சமும் அதிலுள்ள அனைத்தும் தானாக தோன்றியது அது படைக்கப்படவில்லை படைப்புக்கள் தம்மைத்தாமே தோற்றுவித்துக் கொண்டன என கருதுதல்.
- இதனை ஏற்பவன் முல்ஹித், தஹ்ரிய்யூன்
- தனிப்பட்ட சிலரால் இக்கொள்கை வரலாற்று நெடுகிலும் வளர்க்கப்பட்டுள்ளமை...
- இஸ்லாம் அறிமுகப்படுத்தப்பட்ட காலத்தில் நாஸ்திக நம்பிக்கையுடையவர்களும் இருந்தனர். "இது நமது உலக வாழ்க்கையைத் தவிர வேறு வாழ்க்கை கிடையாது. நாம் இறக்கிறோம். இன்னும் வாழ்கிறோம். காலம் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை"(அல்குர்ஆன்)
- முந்திய வேதங்கள் போதிக்கப்பட்ட காலங்களிலும் இத்தகைய நாஸ்திக நம்பிக்கையுடையவர்கள் இருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன...
- மத்திய கால ஐரோப்பாவில் நாத்திகம் வளரக் காரணங்கள்...
- நாஸ்திக நம்பிக்கை அறிவியல் பரிமாணம் பெறுவதற்கு டாவின், பேடன் ரஸல், புரோய்ட், கார்ல்மாக்ஸ் போன்ற அறிவியலாளர்களே காரணம்...
- ஒக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து கம்யூனிஸ ஆட்சியின் கீழ் வந்த ரஷ்யாவில் நாத்திகம் முழுமையான மத எதிர்ப்பு மனப்பாங்குடன் செயற்பட்டது.
- நாத்திக நம்பிக்கையின் செல்வாக்குடன் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் போன்ற துறைகளில் ஏற்பட்ட பாரிய அபிவிருத்தி, சமய நம்பிக்கைகளைப் பொய்ப்பிக்கும் அவற்றின் பிரச்சாரம் என்பன காரணமாக 19ம் நூற்றாண்டின் தொடக்கத்துடன் நாத்திகம் உலகெங்கிலும் விரைவாகப் பரவ ஆரம்பித்தது.

## வினா – 07

**நாஸ்திக சிந்தனை பரவுவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்களைக் குறிப்பிட்டு மதச்சார்பின்மையின் வகைகளை விளக்குக.**

- சமயங்களுக்கிடையிலும் சமயங்களுக்குள்ளும் இருந்த முரண்பாடுகளும் எதிர்ப்புணர்வுகளும்
- சமயங்களில் காணப்பட்ட மூடநம்பிக்கைகள்
- சமயங்கள் அறிவுபூர்வமான கருத்துப் பரிமாற்றத்தைத் தவிர்த்தமை
- சமயங்கள் அறிவியல் கோட்பாடுகளைக் கண்மூடித்தனமாக எதிர்த்தமை
- நாத்திக நம்பிக்கையில் காணப்பட்ட கருத்து ரீதியான நடத்தை ரீதியான சுதந்திரம்
- நாத்திகத்தின் பின்னணியில் ஏற்பட்ட அபிவிருத்திகள்

மதச்சார்பின்மையின் வகைகளைக் குறிப்பிடுக.

- நாத்திகம் பேசுகின்ற எல்லோரும் ஒே ரவிதமானவர்கள் அல்லர். கடவுள் பற்றிய அவர்களது கருத்துக்களுக்கும் நம்பிக்கைளுக்கும் ஏற்ப அவர்கள் மூவகையினராக வகைப்படுத்தி நோக்கப்படுகின்றனர்.
    1. **முல்ஹிதூன்** : கடவுளை முற்றாக நிராகரிப்பவர்கள். மதம், கடவுள் என்பனமனிதர்களின் கட்டுக்கதை என்பதே இவர்களது கருத்தாகும்.
    2. **லாஅத்ரிய்யா** : கடவுள் பற்றிய முடிவான கருத்துக்கு வராதவர்கள். இவர்கள்கடவுளை ஏற்கவும் மாட்டார்கள் மறுக்கவும் மாட்டார்கள்.
    3. **ருபூபிய்யூன்கள்** : இவர்கள் கடவுளை ஏற்கமாட்டார்கள். ஆனால் உலகை இயக்கும்ஒரு சக்தி இருப்பதாக நம்புவார்கள்.

## வினா – 08

**இஸ்லாமிய உலகில் இல்ஹாத் பரவிய விதம் குறித்தும் அதனை தடுக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் முன்வைக்க.**

- சியோனிஸ சூழ்ச்சியின் பின்னணியில் உஸ்மானிய கிலாபத் வீழ்ந்ததைத் தொடர்ந்து மதச்சார்பற்ற ஐரோப்பிய நாடுகளும் நாத்திக சோவியத் ரஷ்யாவும் முஸ்லிம் நாடுகளில் தமது சிந்தனையைப் பரப்புவதற்காக மேற்கொண்ட முயற்சியின் பயனாக முஸ்லிம் பெரும்பான்மையைக் கொண்ட பல நாடுகள் மதச்சார்பற்ற நாடுகளாக மாறின.
- அதே போன்று இன்னும் சில முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் கம்யூனிஸத்தை பின்பற்றும் ரஷ்யா சார்புள்ள நாடுகளாக மாறின.
- அதனைத்தொடர்ந்து நாத்திக நம்பிக்கையின் அடிப்படையில் இஸ்லாமிய பெறுமானங்கள் அனைத்தையும் அழித்தொழிப்பதற்கான பல முயற்சிகள் அந்நாடுகளில் மேற்கொள்ளப்படலாயின.
- நாத்திக நம்பிக்கை முஸ்லிம்களின் ஈமானுக்குக் பெரும் சவாலாய் அமைந்தபோது அதிலிருந்து இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பாதுகாப்பதற்காக ஜமாலுத்தீன் ஆப்கானி, முஹம்மது அப்துஹ், அல்லாமா இக்பால் போன்ற இஸ்லாமிய அறிஞர்கள் கடுமையாக உழைத்தார்கள்.

  1. நாத்திக வாதத்தின் அறைகூவல்களுக்குப் பதில் கூறல்

  2. முஸ்லிம் உம்மத்தை அறிவு பூர்வமாகக் கட்டியெழுப்புதல் ஆகிய இரு பரிமாணங்களில் தொண்டாற்றினார்கள். அதன் பயனாக அல்குர்ஆனுக்கான நவீன விரிவுரைகள் தோற்றம் பெற்றன.
- அத்துடன் நவீனஅறிவியலின் இஸ்லாத்துக்கெதிரான அறை கூவல்களுக்கு முன்னால் அறிவார்ந்த அடிப்படையில் முஸ்லிம் உம்மத்தை வழிநடாத்தக்கூடிய இஸ்லாமிய இயக்கங்களும் தோற்றம் பெற்றன.

## வினா – 09

**அகீதாவுக்கு முரண்பட்ட நம்பிக்கைகளும் பல்வேறு பிரிவுகளும் முஸ்லிம் உம்மத்தினுள் தோற்றம் பெற ஏதுவாக அமைந்த காரணிகளை விளக்குக.**

1. **பகுத்தறிவுக்குக் கொடுக்கப்பட்ட அதி முக்கியத்துவம் :**
   - இஸ்லாம் விளக்கும் சில விடயங்களை பகுத்தறிவினால் விளக்க முடியுமாக இருக்க வேறு சில விடயங்களை வவிஹின் வாயிலாக மட்டுமே விளங்கக் கூடியதாக இருக்கின்றது. வஹி விளக்கும் விடயங்களையும் பகுத்தறிவு ரீதியாக ஆய்வு செய்ய முற்பட்டபோது பிரிவுகள் உருவாகின.
   - கிரேக்க தத்துவ சிந்தனையின் செல்வாக்கு உருவானமை.
2. **எளிமையான விடயங்களை ஆய்வுகளுக்குட்படுத்தியமை:**
   - அல்லாஹ், மறுமை, கழாகதர் பற்றிய விடயங்கள் ஆரம்ப கால சமூகத்தினரால் எளிமையாக புரியப்பட்டிருந்தன.
   - இவ்விடயங்களில் அவசியமற்ற ஆய்வுகள் மேற்கொள்ளப்படவே முரண்பாடான கருத்துக்கள் வளரத் தொடங்கின.
3. **தடை செய்யப்பட்ட பகுதிகளை ஆய்வுக்குட்படுத்தியமை:**
   - அல்லாஹ்வின் ‘தாத்’, எனப்படும் மெய்ப்பொருள் பற்றியும், ‘ஸிபாத்’ எனும் பண்புகள் பற்றியும் ஆய்வு செய்வதை இஸ்லாம் தடுத்துள்ளது.
4. **இஸ்லாம் ஈட்டிய வெற்றிகளால் பொறாமை கொண்டமை:**

- இஸ்லாம் அடைந்த அமோக வெற்றிகளால் பொறாமை கொண்டவர்கள் இஸ்லாத்தை வீழ்த்துவதற்கான சதித் திட்டங்களை மேற்கொண்டமை.

5. **ஸஹாபாக்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல் சர்ச்சைகள்:**
   - நபி (ஸல்) அவர்கள்து அரசியல் வாரிசாக அலி (ரழி) அவர்களை இணங்காட்டி ஷீஆ அமைப்பு உருவாதல்.
   - ஸிப்பீன் யுத்த விவகாரத்தில் அலி (ரழி) அவகளுடன் முரண்பட்டு கவாரிஜிகள் உருவானமை.
6. **பிற கலாச்சாரத் தாக்கம்:**
   - இஸ்லாத்தின் பெயரில் பௌத்த, பிராமனிய, யூத, கிறிஸ்துவ, கிரேக்க, பாரசீக கலப்புக்கள் உருவானமை. துறவற, அனைத்திறைக் கோட்பாடு உருவானமை.
7. **இஸ்லாத்திற்கு எதிரான சதிகள் :**
   - அப்துல்லாஹ் இப்னு ஸபா மூலம் ஷீஆ சிந்தனை உருவாக்கப்பட்டமை.
   - ஆங்கிலேயர் மூலம் காதியானிகள் உருவாக்கப்பட்டமை.
8. **ஸஹாபாக்கள் விடயத்தில் எல்லைமீறிய நிலைப்பாடுகள்** :
   - ஸஹாபாக்களை ஏசுவதன் மூலம் கவாரிஜ்கள், ஷீஆக்கள் முரண்பட்டுச் சென்றமை.
9. **அல்குர்ஆன், ஸுன்னா விடயத்தில் போதிய அறிவின்மை**
   - அதன் விளைவாக கழா கத்ரில் முரண்பட்ட சிந்தனைப் பிரிவுகள் தோன்றியமை

## வினா – 10

**ஷீஆக்கள் என்போர் யாவர் என குறிப்பிட்டு அவர்களது தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்குக.**

- மொழி ரீதியாக ‘‘பிரிவு’’ ‘‘கூட்டம்’’ என்றும் ‘‘ஆதரவு அணி’’ என்றும் பொருள் தருகிறது.
- இஸ்லாமிய மரபில்: ‘‘அலி (ரழி) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தவர் மீதும் அளவு கடந்த அன்பை வெளிப்படுத்துவதுடன் அவர்களுக்கே நபியவர்களின் பின் அரசியல், ஆன்மீக தலைமைத்துவம் வாரிசு அடிப்படையில் சென்றிருக்கவேண்டும் எனக்கூறி முந்திய மூன்று கலீபாக்கள் மீதும் அவர்களுக்கு ஆதரவான ஸஹாபாக்கள் மீதும் தப்பபிப்பிராயத்தைப் பரப்பும் ஒரு சிந்தனைப் பிரிவு ‘ஷீஆ’ என்று அழைக்கப்படுகிறது.

**தோற்றம் குறித்து நிலவும் கருத்துக்கள்** :

- நபி (ஸல்) அவர்களின் வபாத்துடன் கிலாபத் தெரிவில் அலி (ரழி) அவர்களுக்கு ஆதரவளித்தோரே ஷீஆக்கள்.
- கலீபா உஸ்மான் (ரழி) அவர்களை கொலை செய்தவர்களை புதிய கலீபா அலி (ரழி) அவர்கள் பழி வாங்க வேண்டும் எனும் விடயத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டில் அலி (ரழி) அவர்களுக்கு ஆதரவு வழங்கியோர் ஷீஆக்கள்.
- ஜமல் யுத்தத்தின் போது அலி (ரழி) அவர்களின் தரப்பிலிருந்து போராடியோரே ஷீஆக்கள்.
- அலி (ரழி) மற்றும் முஆவியா (ரழி) ஆகியோருக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டில் அலி (ரழி) அவர்களுக்கு ஆதரவு வழங்கியோர் ஷீஆக்கள்.
- ஸிப்பீன் யுத்தத்தின் போது அலி (ரழி) அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டோரே ஷீஆக்கள்.
- பாரசீக பிரதேசத்தில் காணப்பட்ட - ‘‘அப்துல்லாஹ் இப்னு ஸபா’’ என்ற யூதன் முன்வைத்த தெய்வீக உரிமைக் கோட்பாடும், ஷீஆ பிரிவின் தோற்றமும்.

- கர்பலா சோக நிகழ்வு - இமாம் ஹுஸைனின் கொலைக்குப்பின் அவர்களுக்கு உதவி செய்யவில்லை என்று கைசேதப்பட்டோரே ஷீஆக்கள்.
- அலி (ரழி) கொலைக்கு பின் வளர்ச்சி - ஆட்சிக்குத் தகுதி அஹ்லுல் கிதாப்கள் என்ற சிந்தனையின் பின்னணியில் வளர்சி கண்டமை.
- கர்பலா நிகழ்வுக்கு பின் தீவிரமடைந்தமை.
- கிலாபத் அலிக்கு சொந்தமானது என்பதற்கு போலி ஹதீஸ்கள் உருவாக்கப்பட்டமை.
- முக்கிய கோட்பாடு இமாம்களை மையமாகக் கொண்டமைந்தமை.
- அகீதாப் பிரிவில் மிக பழைமை வாய்ந்தது.
- ஆரம்பத்தில் வழி கெட்ட குழுவாக செயற்படவில்லை.குலபாக்களது காலங்களுக்குப் பின்னர் வழிகெட்ட சிந்தனைகளைக் கொண்டதாக மாற்றமடைந்தமை.

## வினா – 11

**ஷீஆக்களின் பிரதான கேட்பாடுகளை குறிப்பிடுக.**

1. **இமாமத்:** தலைமைத்துவம் அஹ்லுல் பைத்துக்களுக்குரியது.
2. **அல்-கபா:** மறைவு, தலைமறைவு, மறைந்து வாழுதல். ஒளிந்திருத்தல் 12 ஆவது இமாம் மறைந்து வாழ்வதாக நம்பப்படுதல்
3. **அர்-ரஜ்ஆ / மஹ்தியா:** மறைந்து வாழும் இமாம் மீண்டு வருதல்.
4. **அல்-இஸ்மத்**: இமாம்கள் அனைவரும் பாவங்கள் செய்வதை விட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள்.
5. **அத்-தகிய்யா:** உண்மையை மறைத்தல். தமது உயிர், சொத்து, மானம் என்பவற்றை பாதுகாக்க தாம் இல்லாத கொள்கை ஒன்றில் இருப்பது போன்று நடிப்பது.
6. **அத்-தீனா:** களிமண் - ஹுஸைன் (ரழி) அவர்களது அடக்கஸ்தலத்திலிருந்து பெறப்படும் மண் சகல நோய்களுக்கும் நிவாரணி.
7. **முத்ஆ:** இன்பப்பொருள் - தற்காலிகத் திருமணம்.

## வினா – 12

**ஷீஆக்களின் இமாமிய்யாக் கோட்பாடு பற்றி விளக்குக.**

- தற்போதைய ஷீஆக்களில் பெரும்பாலானவர்கள் - 12 இமாம்களை விசுவாசிப்பதால் இஸ்னா அஷ்ரிய்யா என அழைக்கப்படுகின்றனர்.
- இமாம்களை அல்லாஹ் நியமிக்கிறான் - நபிமார்களின் பிரதிநிதிகள் எனும் கருத்து.
- இமாம்கள் ம.்.ஸூம்கள் - நபியவர்களின் வாரிசாக அவர்களைத் தொடர்ந்து 12 இமாம்கள்
- இவர்கள் உலுல் அஸ்ம்களை விட மேலானவர்கள்.
- மலக்குகள், வானம் பூமியிலுள்ள அனைத்தும் இவர்களுக்கு கட்டுப்படும்.
- மறைமுக அறிவு இமாம்களுக்கு உண்டு
- இமாம்களை நம்பாதோர் காபிர்கள், தெரியாமல் மரணிப்போர் ஜாஹிலிய்ய மரணத்தை தழுவுகின்றனர்.

# வினா – 13

**ஷீஆக்களின் இமாமியத் சிந்தனையின் வரலாற்றுச் சுருக்கம் பற்றி எடுத்துக்காட்டுக.**

- அலி (ரழி), ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி), அலி இப்னு ஹுஸைன்(ரஹ்) ஆகியோர் முன்னைய கலீபாக்கள் மூவர்மீதும் மிகுந்த மரியாதையுடனேயே இருந்துள்ளமை.
- நான்காவது இமாமாகிய அலி இப்னு ஹுஸைனுக்கு முஹம்மத், ஸைத் என்ற இரு ஆண் பிள்கைள் இருந்தனர். ஷீஆக்களில் ஒருசாரார் முஹம்மதையும் இன்னொரு சாரார் ஸைதையும் இமாமாகக் கொள்கின்றனர்.
- இமாம் ஸைதைப் பொறுத்தவரையில் அவரது நிலைப்பாடு அலி(ரழி) அவர்களே கிலாபத்துக்கு மிகவும் தகுதியானவர் என்றாலும் முன்னைய கலீபாக்களை நிராகரிக்கவில்லை.
- இமாம் ஸைதிடம் முதல் கலீபாக்கள் மூவரைப் பற்றியும் வினவிய போது அவர் நல்லதையே கூறியமையால் கோபமடைந்த அவர்கள் இமாமின் நிலைப்பாட்டை நிராகரித்து அவரை விட்டும் பிரிந்து சென்றனர். அவ்வாறு சென்றவர்களே **ராபிழ்கள்**.
- இமாம் ஸைத் அவர்கள் உமையாக்களின் அடாவடித்தனங்களை எதிர்த்துப் போரிட்டமையினால் ஹிஜ்ரி 122ல் கொலை செய்யப்பட்டமை. அதன் பின் உருவான பிரிவினரே ஸைதிகள்.
- இமாம் முஹம்மதுக்குப் பின் வந்த இமாம் ஜ.ஃபர் ஸாதிக்(ரஹ்) தனது முன்னோரைப் போன்றே கலீபாக்கள் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவராகவே திகழ்ந்தமை.
- பின் மூஸா இப்னு ஜ.ஃபர் (ரஹ்) இமாமாகக் கருதப்படுகிறார். இக்காலத்தில் அப்பாசியர் தமக்குச் சார்பாக அஹ்லுல் பைத் ஆதாரவாளர்களை இணைத்துக் கொண்டனர். ஷீஆகக்களும் அப்பாஸியருக்கு ஆதரவளிப்பதன் மூலம் அரசியல் தலைமைத்துவத்தை அலி(ரழி) அவர்களின் பரம்பரையினருக்கு பெற்றுக் கொடுக்க முடியும் என்று நம்பினர்.
- ஆயினும் அப்பாசியர் அவர்களது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றாமையினால் ஏமாற்றமடைந்த நிலையில் இமாம் அலி அர்ரிழா(ரஹ்) திடீர் மரணம் எய்தவே அவரது மரணத்தில் அப்பாசியரைச் சந்தேகித்து எதிராகக் கிளர்ச்சி செய்தனர்.
- இக்காலத்தில் இவர்கள் அபூதாலிபின் பெயரில் தாலிபிய்யூன் என அழைக்கப்பட்டனர்.
- அப்பாஸிய கிலாபத்துக்கெதிராக தாலிபிய்யூன்கள் கிளர்ச்சி செய்து கொண்டிருந்த சமகாலத்தில் பாரசீகர்களும் கிலாபத்துக் கெதிராகக் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தனர்.
- பலம் பெற்றிருந்த அப்பாஸிய கிலாபத்தை வீழ்த்துவது எளிதல்ல என்பதை உணர்ந்த பாரசீகர் தாலிபீன்கள் ஆதரவைப் பெறுவதன் மூலம் இதைச் சாதிக்கலாம் எனக் கருதினர்.
- பாரசீகர்களின் இவ்விணைப்புதான் **வெறும் அரசியல் பிரிவாக இருந்த அஹ்லுல் பைத் ஆதரவாளர்களாகிய முஸ்லிம்களிடையே பாரசீக நம்பிக்கைகளுடன் ஒன்றறக் கலந்த "ஷீஆ" என்ற சமயப்பிரிவு தோன்றுவதற்கு காரணமாய் அமைந்தது.**
- இமாம் அலி அர்ரிழாவின் மரணத்தைத் தொடர்ந்து, மரணிக்கின்ற இமாமின் மூத்த புதல்வனே அடுத்த இமாமாகத் தெரிவு செய்யப்படும் மரபு தோன்றியமை. மூத்த பிள்ளைக்கு அரச தலைமைத்துவத்தை வழங்குதல் பாரசீக மரபுகளில் ஒன்றாகும்.
- பதினோராவது இமாம் ஹஸன் இப்னு அலி அல்அஸ்கரி என்பவர் ஹி 260ல் மரணிக்கும் போது 5 வயது சிறுவனாக இருந்த அவரது மூத்த மகன் முஹம்மத் இமாமாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- முஹம்மத் தனது சிறுவயதிலேயே மரணித்தமையினால் இமாமத் பதவிக்கு வாரிசு ஒருவர் இல்லாத நிலையினால் கலவரமடைந்த ஷீயாக்கள் இமாம் மரணித்தார் என்று கூறாமல் தற்காலிகமாக மறைந்து விட்டார் என்ற நம்பிக்கையை உருவாக்கிக் கொண்டமை.

## வினா – 14

**ஷீயாக்கள் முன்வைக்கும் இமாமியத் கோட்பாட்டில் காணப்படும் குறைபாடுகளைக் குறிப்பிடுக.**

- கதிர்கும் தொடர்பான ஹதீஸின் நம்பகமற்ற தன்மை.
- இமாம்கள் யார் என்பதைத் தீர்மானிப்பதில் ஷீயாக்களிடம் காணப்படும் கருத்துவேறுபாடுகள்.
- இமாம்களின் எண்ணிக்கையில் காணப்படும் கருத்துவேறுபாடுகள்.
- இமாம்களின் எண்ணிக்கை பன்னிரண்டுடன் முற்றுப்பெறுதல்.
- இமாமியத் கோட்பாடு ஷீயாக்கள் கூறும் ஆரம்ப கால இமாம்களிடம் காணப்படாமை.
- ஷீயாக்களின் நம்பிக்கைகள் அவ்வக்காலங்களில் தோன்றிய அரசியல் பின்னணிகளின் பின்புலத்தில் மாற்றங்களுக்குட்பட்டமை.
- பிறகலாசாரத்தாக்கங்கள் செல்வாக்குச் செலுத்தியமை.

## வினா – 15

**ஷீஆக்களின் பிரதான பிரிவுகளைக் குறிப்பிட்டு 'இஸ்னா அஷரிய்யாக்களது கோட்பாடுகள் குறித்து விளக்குக.**

ஷீஆக்களில் பல பிரிவுகள் தோன்றினாலும் அவற்றின் பல காலப்போக்கில் மறைந்து ஒழிந்தன. இமாமிய்யா, ஸைதிய்யா என்ற இரு பிரிவுகள் இன்று வரை நிலைத்து நிற்கின்றன. இவ்வகையில் ஷீஆக்கள் மத்தியில் தோன்றிய பிரிவுகளில் பின்வருவன குறிப்பிடத்தக்கன.

1. 'இஸ்னா அஷரிய்யா / இமாமிய்யா / அல்-ஜ.ஃ.பரிய்யா'
2. 'இஸ்மாஈலிய்யா'
3. 'பாத்தினிகள்'
4. 'அஸ்-ஸைதிய்யா'
5. 'அஸ்-ஸபஇய்யா'
6. 'அல்-கைஸானிய்யா' / 'தவ்வாபீன்'
7. 'அர்-ராபிழாக்கள்'
8. நுஸைரிய்யா / அலவிய்யாக்கள்

## வினா – 16

**ஷீஆக்களில் 'இஸ்னா அஷரிய்யா / இமாமிய்யா குறித்து விளக்குக.**

- இப்பிரிவு ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டளவில் தோன்றிய அதி தீவிரப்பிரிவாகும்.
- இமாம்களின் மொத்த எண்ணிக்கை பன்னிரண்டு என இவர்கள் விசுவாசிப்பதனால், 'இஸ்னா அஷரிய்யா' என அழைக்கப்படுகின்றனர்.
- 12 இமாம்களை விசுவாசிப்பதனால் இவர்களை 'இமாமிய்யா' இமாம்களைச் சார்ந்தோர் எனவும் அழைப்பர்.
- இவர்கள் விசுவாசிக்கும் இமாம்களில், முதன்மையானவர் அலி (ரழி) அவர்களும் இறுதியானவர் அபுல் காஸிம் முஹம்மத் பின் அல்-ஹஸன் அவர்களும் காணப்படுகின்றனர்.

- தற்போதைய ஷீஆக்களில் பெரும்பாலானவர்கள்.
- இமாம்களை அல்லாஹ் நியமிக்கிறான்.
- இமாம்கள் நபிமார்களின் பிரதிநதிகள்
- இமாம்கள் ம.ஃ.ஸூம்கள்
- நபியவர்களின் வாரிசாக அவர்களைத் தொடர்ந்து 12 இமாம்கள் நியமிக்கப்பட்டனர்.
- இவர்கள் உலுல் அஸ்ம்களை விட மேலானவர்கள்.
- மலக்குகள், வானம் பூமியிலுள்ள அனைத்தும் இவர்களுக்கு கட்டுப்படும்.
- மறைமுக அறிவு இமாம்களுக்கு உண்டு.
- இமாம்களை நம்பாதோர் காபிர்கள்.
- இமமைத் தெரியாமல் மரணிப்போர் ஜாஹிலிய மரணத்தைத் தழுவுகின்றனர்.

## வினா – 17

**இஸ்மாஈலிய்யாக்கள் / பாதினிய்யாக்கள் கோட்பாட்டை தெளிவுபடுத்துக.**

- இமாம் ஜ.ஃ.பர் ஸாதிகின் மூத்த பிள்ளையாகிய இஸ்மாஈல் என்பவரைப் பின்பற்றுபவர்களே இஸ்மாஈலிய்யா எனப்படுகின்றனர்.
- ஷீஆக்களில் அதி தீவிர பிரிவு. இஸ்லாத்தின் புறஅம்சங்களை அந்தரங்கமான முறையில் அர்த்தப்படுத்துவதன் காரணமாக பாதினிகள் எனப்படுகின்றனர்.
- அல்குர்ஆனுக்கு உள்ளார்ந்த பொருளுண்டு என்பதை விசுவாசிப்பது ஈமானில்...
- அலி(ரழி) க்கு வர வேண்டிய கிலாப்தை ஏனையோர் அபகரித்துக் கொண்டனர். அதற்கு துணை நின்றோர் உம்மஹாதுல் மு.ஃ.மின்கள் சதிகாரர்கள் என குறிப்பிடல்.
- இவர்கள் மதுவை ஹலாலாக்கிக் கொண்டனர்.
- தொழுகையை இருநேரமாக்கினர்.
- தமது கொள்கை சாராத ஏனைய முஸ்லிம்களைக் கொலை செய்வதை ஹலாலாக்கிக் கொண்டனர்.
- இவர்கள் மக்காவுக்குச் சென்று பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களைக் கொலை செய்து ஹஜருல் அஸ்வத் கல்லை யெமனுக்கு எடுத்துச் சென்றனர்.
- இடைப்பட்ட ஒரு காலத்தில் கராமைத் என்பவரால் வழிநடாத்தப்பட்டதனால் இவர்கள் கராமிதாக்கள் என்றும் அழைக்கப்படுன்றனர்.
- இவர்களைச் சார்ந்து நிஸாரிகள், முஸ்தாலிகள், துரூஸ்கள், முகன்னாஹ் போன்ற பல் பிரிவுகள் தோற்றம் பெற்றன.
- இவர்கள் வாக்களிக்கப்பட்ட மஹ்தி இஸ்மாஈல் என்றும் அவர் மரணிக்கவில்லை மீண்டும் வருவார் என்றும் நம்புகின்றனர். ஆனால், தந்தை உயிருடன் இருக்கும் போதே இஸ்மாஈல் மரணித்துவிட்டார் என்றே பெரும்பாலான ஷீயாக்கள் நம்புகின்றனர்.
- இஸ்மாஈலின் இமாமத்துடன் தொடர்பான விடயத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் உருவாகிய இப்பிரினர் காலப்போக்கில் இன்னும் பல பிரிவுகளாகப் பிரிந்தனர்.

## வினா – 18

**ஷீஆக்களில் ஸைதீக்கள் பற்றி விளக்கமளிக்குக.**

- 'அஸ்-ஸைதிய்யா' என்போர் ஸைத் பின் அலி ஸைனுல் ஆப்தீன் பின் ஹுஸைன் (ஹுஸைன் (ரழி) அவர்களது மகனான அலி ஸைனுல் ஆப்தீன் என்பவரின் மகன் ஸைத்) என்பவரைப்

பின்பற்றியவர்களாவர்; அதாவது, ஸைத் என்பவரைப் பின்பற்றியதாலேயே. இவர்கள் ‘ஸைதிக்கள்’ என அழைக்கப்படுகின்றனர்.

- ஷீஆக்களில் மிதவாதிகள்
- அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவுக்கு மிக நெருக்கமானவர்கள்
- ஹஸைன் (ரழி) இன் ஸைனுல் ஆப்தீனின் மகன் ஸைதை பின்பற்றியமையால் ஸைதீக்கள்.
- ஸஹாபர்களை ஏசுவதில்லை.
- நபிமார்களுக்குப் பின் இமாம்கள் மனிதர்களில் சிறந்தோர்
- இமாம்களை ம.்.சூம்களாக கருதவில்லை. நபிமார்களின் அந்தஸ்துக்கு உயர்த்தவுமில்லை.
- தெய்வீகப் பண்பு கொண்டோராய் கருதவுமில்லை.
- நபிகளாரின் குடும்பத்தில் தகுதியுள்ளவர் இமாமத் கோரினால் வழங்க வேண்டும்.
- மிக தகுதியுள்ளவர் இருக்க தகுதியுள்ளவர் கலீபாவாக தெரிவாகலாம்.

## வினா – 19

**வழிதவறிய பிரிவான நுஸைரிகள் பற்றி குறிப்பிடுக.**

- முஹமம்மத் பின் நுஸைர் எனப் வரினால் உருவாகக்பட்ட ஷீஆப்பிரிவினரே நுஸைரிகள்
- எனப்படுகின்றனர். இவர்கள் அலவிய்யூன்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். ஷீயாக்களில் மிகவும் மோசமான பிரிவினர்களாகவே இவர்கள் வரலரற்றில் அடையாளப் படுத்தப்பட்டுள்ளனர்.
- அலி (ரழி) அவர்களுக்கு தெய்வீக அந்தஸ்து இருப்பதாக வாதிடும் இவர்கள் அலி (ரழி) அவர்களைக் கொலை செய்த இப்னு முல்ஜிமையும் நேசிக்கின்றனர்
- இஸ்லாம் ஹராமாக்கிய பல விடயங்களை தமக்கு ஹலாலாக்கிக் கொண்டுள்ளனர்.
- இவர்கள் பற்றி இமாம் இப்னு தைமியா (ரஹ்) பின்வருமாறு கூறுகிறார்கள். “பாதினிப் பிரிவைச் சேர்ந்த இவர்கள் யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் விட நிராகரிப்பில் கூடியவர்கள் முஸ்லிம்களுககு எதிராக யுத்தம் செய்த தாத்தாரிகளைவிடவும் இவர்கள் ஆபத்தானவர்கள். தாத்தாரியர்கள் இவர்களது உதவியுடனேயே முஸ்லிம் நாடுகளுக்குள் நுழைந்து கலீபாவையும் அதிகமான முஸ்லிம்களையும் கொலை செய்தனர்”

## வினா – 20

**வஹ்ததுல் வுஜூத் / அத்வைதக் கோட்பாடு பற்றி தெளிவு படுத்துக.**

- மொழி ரீதியாக : உள்ளவை அனைத்தும் ஒன்று
- இஸ்லாமிய மரபில் : அல்லாஹ்வும் இயற்கையும் ஒன்று என்று வாதிடும் தத்துவ கொள்கை
- அல்லாஹ்வின் தோற்றமே இப்பிரபஞ்சம். தமக்கென்று சுய இருப்பில்லாத சடப்பொருட்களின் மொத்தமான வெளித்தோற்றம் அல்லாஹ்வின் இருப்பில் நிலை கொண்டுள்ளது.
- தஸவ்வுப் சிந்தனையினூடாக முஸ்லிம்கள் மத்தியிலும் செல்வாக்கு…
- சில தஸவ்வுப் வாதிகள், ஷரீஅத்துக்கு அப்பால் அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைய முயற்சித்தமையே இதற்கான காரணமாகும்.
- இச்சிந்தனையைப் புகுத்தியவர்களாக இப்னு அரபி, இப்னு பாரில், இப்னு ஸப்ஈன், தல்மஸானி…

- புதூஹாதுல் மக்கி எனும் நூலை எழுதிய இப்னு அரபியே முன்னோடி. ஹிஜ்ரி 7ம் நூற்றாண்டிற்குப் பிறகு பேச ஆரம்பித்தார்.
- இப்னு அரபியின் வஹ்தத்துல் வுஜூத் சிந்தனையின் படி, படைப்பாளனுக்கும் படைப்புக்களுக்கும் இடையில் வேறுபாடுகள் எதுவும் கிடையாது.
- அல்லாஹ் அனைத்துப் படைப்புக்களையும் தன்னிலேயே உள்ளடக்கியுள்ளான்.
- ''அனைத்தும் அவனாகிய நிலையில் அனைத்தையும் வெளிப்படுத்தும் அவன் தூய்மையானவன்'' - இப்னுல் அரபி -
- சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடு வெறும் தரவேறுபாடே அன்றி வகை வேறுபாடல்ல.
- மதங்களுக்கிடையில் கூட வேறுபாடு கிடையாது. அல்லாஹ்வை வணங்குபவனும், கற்களை வணங்குபவனும் சிலைகளை வணங்குபவனும் சமமானவர்களே. ஏனெனில்எல்லோரும் அல்லாஹ்வையே வணங்கியுள்ளனர். அதாவது படைப்பாளனும் படைப்புக்களும்.

## வினா – 21

**கவாரிஜ்கள் எனப்படுபவர்கள் யார் எனக்கூறி அவர்களது தோற்றப்பின்னணியை விளக்குக.**

- 'கவாரிஜ்' என்ற சொல் 'காரிஜ்' என்ற மூலச் சொல்லில் இருந்து தோன்றியதாகும். 'வெளியேறிச் சென்றவன்' என்ற கருத்தை இது கொண்டுள்ளது.
- தலைவரின் கட்டுப்பாட்டை விட்டு வெளியேறிச் சென்று தலைமைத்துவத்துக்கு எதிராக கிளர்ச்சி செய்பவரைக் குறிக்கிறது.
- "பாவம் செய்பவன் காபிராவான் என்ற கருத்தின் அடிப்படையில் பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தை விட்டும் பிரிந்து அதற்கு எதிராக செயற்படும் பிரிவினர்" கவாரிஜ் எனப்படுகின்றனர்.
- ஹி. 37 ஆண்டு அலி (ரழி), ஆமுவியா (ரழி) ஆகியோர்களுக்கும் இடையில் நடைபெற்ற ஸிப்பின் யுத்தமே 'ஹவாரிஜி' எனப்பட்ட இப்பிரிவினரின் தோற்றத்திற்கான உடனடிக் காரணமாகும்.

**கவாரிஜ்கள் எனப் பெயர்வருவதற்கான காரணம்**

- அலி (ரழி) அவர்களின் படையில் இருந்து பிரிந்து சென்றவர்களை காரிஜி என்ற பதத்தினால் அழைக்கின்றனர்.
- அலி (ரழி) அவர்கள் கொண்டிருந்த கருத்தில் ஒற்றுமை காணாது பிரிந்து சென்றதனால் வெளியேறியோர் என்ற கருத்தைக் கொடுக்கும் ''காரிஜி'' என்ற பதப் பெயர் வந்திருக்கலாம்.
- வேறு சிலர் அலி (ரழி) அவர்கள் பெரும் பாவம் செய்து விட்டார் என்றும் முஆவியா (ரழி) அவர்கள் உரித்தில்லாத ஒன்றுக்காக உரித்துக் கோரி பெரும் பாவம் செய்து விட்டார் என்றும் இவர்கள் நிலை நாட்டத் தவறிய தூய ஆட்சியை நிலை நாட்டுவதற்காக தம் இருப்பிடங்களை விட்டு வெளியேறிச் சென்றதனால் இப்பெயர் வரக்காரணமாக அமைந்திருக்கலாம் எனக் குறிப்பிடுகின்றனர்.

கவாரிஜ்களின் தோற்றம்

- கலீபா அலி (ரழி) அவர்களுக்கும் ஷாம் தேச கவர்னர் முஆவியா (ரழி) அவர்களுக்கும் இடையே உஸ்மான் (ரழி) அவர்களின் கொலை தொடர்பாக ஏற்பட்ட கருத்து வேறுபாட்டினால் உருவான ஸிப்பீன் யுத்தத்திற்கு தீர்வு காண்பதற்காக இரு தரப்பிலிருந்தும் இரு ஸஹாபாக்கள் நடுவர்களாகத் தெரிவு செய்யப்பட்டபோது அலி (ரழி) அவர்களின் படையில் இருந்த ஒரு பிரிவினர் ''அல்லாஹ் தீர்ப்பு வழங்கிய விடயத்தில் நடுவர்களை நியமித்து அவர்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்வது அல்லாஹ்வின் தீர்ப்பைப்

புறக்கணிப்பதாகும் எனக்கூறி ‘‘தீர்ப்புக் கூறும் அதிகாரம் அல்லாஹ்வுக்கன்றி வேறெவர்க்கும் இல்லை’’ என்ற கோஷத்துடன் நடுவர்களின் தீர்ப்பை நிராகரித்து

- தொடர்ந்தும் முஆவியாவுக்கு எதிராகப் போராடுமாறு அலி (ரழி) அவர்களை வலியுறுத்தினர். அதைக் கேட்ட அலி(ரழி) அவர்கள் ‘‘உண்மையான வார்த்தை பிழையாக நோக்கப்படுகிறது’’ எனக்கூறி அவர்களின் வாதத்தை மறுத்துரைத்தார்கள்.
- அப்போது அவர்கள் அப்துல்லாஹ் இப்னு வஹப் அர்-ராஸிபி என்பவரைத் தமக்கு அமீராக நியமித்துக் கொண்டு அலி (ரழி) அவர்களை விட்டுப் பிரிந்து சென்று அவர்களுக்கு எதிராகப் போர்தொடுக்க முனைந்ததன் மூலம் கவாரிஜ் என்ற பிரிவு தோற்றம் பெற்றது.

# வினா – 22

**கவாரிஜ்களின் பிரிவுகளை விபரிக்க.**

1. **அல்-அஸாரிக்:**
   - நாபி.்். இப்னு அஸ்ரக் என்பவரைப் பின்பற்றுபவர்கள்.
   - காபிர்களின் குழந்தைகளும் நரகம் நுழைவர் என்பது இவர்களது கருத்தாகும்.
   - ரஜ்ம் தண்டனையை மறுத்தல்
   - பெண் மீது கூறப்படும் படுதூறுக்காக மாத்திரம் தண்டனை வழங்குதல்.
   - திருடப்பட்ட பொருள் சிறியதாயினும் பெரியதாயினும் சமமாகத் தண்டனை வழங்குதல் போன்ற நடைமுறைகளும் இவர்களிடம் காணப்பட்டன.

2. **அஸ்-ஸபரிய்யா:**
   - ஸியாத் அல்-அஸ்பர் என்பவரைப் பின்பற்றுவோரே இவ்வாறு அழைக்கப்படுகின்றனர்.
   - இவர்களது கொள்கை நம்பிக்கையில் முரண்பட்டோரது பிள்ளைகளைக் கொல்ல வேண்டும் என்ற விடயத்தில் மாத்திரம் அஸாரிக்களுடன் முரண்படுகின்றனர்.

3. **அந்-நஜ்தாத்:**
   - நஜ்தா இப்னு ஆமிர் அல்-ஹனபீ என்பவரைப் பின்பற்றுபவர்கள்.
   - இவர்களது கருத்தின்படி மார்க்கம் என்பது இரு விடயங்களாகும்.
     - ஒன்று: அல்லாஹ்வை அறிவதும் அவனது தூதரை அறிவதும் முஸ்லிம்களது இரத்தத்தையும் செல்வங்களையும் மதித்து நடத்தல்.
     - இரண்டு: அல்லாஹ்விடமிருந்து வந்தவற்றை முழுமையாக ஏற்றுக்கொள்ளல்.
   - அது தவிர்ந்த ஏனைய ஹலால் ஹராம் சார்ந்த விடயங்கள் பற்றி அறியாதிருப்பது குற்றமல்ல. ஏனெனில் அது மார்க்கத்தில் உள்ளதல்ல.
   - ஒருவன் பாவத்தில் பிடிவாதம் காட்டுவதன் மூலம் காபிராகின்றான். அது பெரும் பாவமாயினும் சரி சிறு பாவமாயினும் சரி.

4. **அல்-அபாலிய்யா:**
   - அப்துல்லாஹ் இப்னு அபால் என்பவரைப் பின்பற்றுவோர் இவ்வாறு அழைக்கப்படுகின்றனர்.
   - இப்பிரிவு தோன்றக் காரணம் கவாரிஜ்களின் தலைவர் நாபி.்். பின் அஸ்ரக் என்பவர் அனைத்து முஸ்லிம்களும் அரபுக் காபிர்களைப் போன்றவர்களே.
   - இவர்களிடம் எதிர்பார்க்கப்படுவதெல்லாம் இஸ்லாம் அல்லது யுத்தம்.

- அவர்களைத் திருமணம் முடிக்கக்கூடாது. அவர்கள் அறுத்தவற்றை சாப்பிடக்கூடாது. அவர்கள் மத்தியில் வாழவும் கூடாது.
- இவ்வாறு கூறும் போது இப்னுஸிபார் என்பவர் அதை மறுத்து **ஸிபரிய்யாவை** உருவாக்கினார்.
- அப்போது இப்னுஅபால் இன்னொரு கருத்தைக் கூறினார். அதாவது அவர்கள் முஷ்ரிக்குகள் அல்ல. நி.்.மத்தை மறுக்கும் காபிர்கள்.
- இவர்களது இரத்தத்தைத் தவிர வேறெதுவும் எமக்கு ஹலாலாக மாட்டாது. என்ற கருத்தின் அடிப்படையில் தனது இயக்கத்தை அமைத்தார்.

# வினா –23

**கவாரிஜ்களின் முரண்பாடான நம்பிக்கைகளை விளக்கி அவர்களது பண்புகளை குறிப்பிடுக.**

1. பெரும் பாவம் செய்தவர்களை காபிர்கள் என்றும் அவர்கள் நரகில் நிரந்தரமாகத்தங்குவார்கள் என்றும் கூறுதல்.
2. அலி (ரழி), உஸ்மான் (ரழி) ஆகியோரையும் இன்னும் அதிகமான ஸஹாபாக்களையும் காபிர்கள் என்று கூறுதல்
3. மறுமையில் அல்லாஹ்வைக் காணமுடியும் என்பதை மறுத்தல்
4. ஸிராத்தையும் அதைக் கடந்து செல்வதையும் நிராகரித்தல்
5. அல்லாஹ்விடமிருந்தல்லாமல் நபியவர்கள் கூறும் விடயங்களில் நபிக்கு கட்டுப்படவேண்டிய அவசியம் இல்லை எனக்கூறுதல்
6. குர்ஆனின் வெளிப்படையான கருத்து என தாம் நம்பும் விடயங்களுக்கு முரணாக வரும் முதவாதிரான ஹதீஸ்களை நிராகரித்தல்
7. அல்குர்ஆனும் ஸுன்னாவும் உறுதிப்படுத்தும் அல்லாஹ்வின் பண்புகளை மறுத்தல்
8. தமது நம்பிக்கைகளில் தம்முடன் உடன்பட்டவர்களுடனல்லாமல் ஜமாஅத்தாக தொழுவதை மறுத்தல்
9. திருமணத்துக்குப் பின் விபசாரத்தில் ஈடுபடும் ஆணுக்கு ரஜ்ம் தண்டனைவழங்குவதை மறுத்தல்
10. ஷபாஅத்தை மறுத்தல்
11. குறைந்த பட்சம் 40 பேர் இருக்கும் நிலையில் தவறிழைக்கும் தலைவர்களுக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபடுவது கடமை எனக் கூறல். இது **'ஹத்து ஷிரா.்.'** எனப்படுகிறது.

**கவாரிஜ்களின் இயல்பான பண்புகள்**

- சில நபர்களிடம் காணப்பட்ட இயல்பான பண்புகளுடன் தீவிர மதப்பற்றும் ஒன்று சேர்ந்தமையே கவாரிஜ்கள் தோற்றம் பெறுவதற்குக் காரணமாய் அமைந்தது. அப்பண்புகள் வருமாறு:
- **தீவிரத் தன்மை:**

  இவர்கள் தாம் உருவாக்கிக் கொண்ட நம்பிக்கைகளிலும் ஏனைய வணக்க வழிபாடுகளிலும் தீவிரத் தன்மையை வெளிப்படுத்தியமையினால் அதிக வணக்கவாளிகளாகவும் பாவங்களுக்கிடையில் பாகுபாடு பார்க்காமல் அனைத்துப் பாவங்களையும் பெரும் பாவங்களாக காட்டுபவர்களாவர்.
- **கடும்போக்கு:**

  கடும்போக்குக் காரணமாக இவர்களிடம் எந்த ஒன்றிலும் நளினத்தன்மை இருக்கவில்லை. சிறிய தவறுகளுக்காகவும் மக்களை எதிர்த்துப் போர் புரிபவர்களாகவே இருந்தனர்.
- **எதிர்ப்பு மனப்பாங்கு:**

இணங்கிப் போகின்ற தன்மை இவர்களிடம் குறைவாகவே காணப்பட்டது. இதனால் தம்முடன் முரண்படுபவர்களை எப்போதும் எதிர்த்துக்கொண்டே இருப்பார்கள். சமாதானம் செய்து கொள்வதை ஏற்றுக்கொள்ளவேமாட்டார்கள்.

- **மேலோட்டமான அறிவு:**

  இவர்கள் மார்க்கம் தொடர்பான மேலோட்டமான அறிவையே பெற்றிருந்தனர். ஷரீஅத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்கின்ற அளவுக்கு அவர்களிடம் நுணுக்கமான அறிவு இருக்கவில்லை. அதனால் தான் நடுவர்கள் நியமிக்கப்பட்டதை அவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் போனது.

- **பிரமை:**

  தாம் கற்ற அறிவில் கொண்ட பிரமை காரணமாக தாம் ஸஹாபாக்களை விடவும் ஏனைய அறிஞர்களை விடவும் தம்மைக் கற்றவர்களாகக் கருதிக் கொண்டார்கள்.

- **முதிர்ச்சியின்மை:**

  முதிர்ச்சியின்மை காரணமாக தமது சிந்தனையிலும் செயற்பாட்டிலும் பொறுமை இழந்து செயற்பட்டனர்.

# வினா – 24

**கவாரிஜ்களின் விடயத்தில் ஸஹாபாக்களின் நிலைப்பாட்டினை குறிப்பிடுக.**

- கவாரிஜ்கள் ஸஹாபக்களை காபிர்கள் என்று கூறினாலும் ஸஹாபாக்கள் அவர்களை அவ்வாறு கூறவில்லை. மாறாக கவாரிஜ் அமைப்பபைச் சேர்ந்த ஒருவர் தொழுகையில் இமாமத் செய்யும் போது அவருக்குப் பின்னால் நின்று தொழுதிருக்கின்றார்கள்.
- இவர்கள் பற்றி அலி (ரழி) அவர்கள் குறிப்பிடும் போது “எமக்கெதிராக அத்துமீறிய எமது சகோதரர்கள்” என்றே கூறினார்கள். எனினும் அவர்களை எதிர்துப் போரிட்டுள்ளார்கள். அதற்கு இரு காரணங்கள் உள்ளன.

1. **கவாரிஜ்களின் அத்துமீறிய செயற்பாடு:**

   இவர்கள் அலி (ரழி) அவர்களையும் இன்னும் பல ஸஹாபாக்களையும் காபிர்கள் எனக் கூறி அவர்களுக்கு எதிராக வாளேந்திப் போரிட்டதுடன் சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள், நிரபராதிகள் என்று பார்க்காமல் தமது கொள்கைக்கு மாற்றமான முஸ்லிம்களை கொன்று குவித்துள்ளார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஸஹாபாக்கள் அவர்களை எதிர்த்துப் போராடியுள்ளார்கள். நகர்வான் யுத்தம் அதற்கு சிறந்த உதாரணமாகும்.

2. **ஸஹாபாக்களின் இஜ்திஹாத்:**

   நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புக்களின் படி வாளேந்திப்போராடுமாறு கூறப்பட்டுள்ளவர்களின் பண்புகள் முழுமையாக கவாரிஜ்களிடம் காணப்பட்டமையினால் அவர்களை எதிர்த்துப் போராடுவதை நன்மை என்று கருதினார்கள்.

   கவாரிஜ்கள் விடயத்தில் ஸஹாபாக்கள் கொண்டிருந்த அதே நிலைப் பாட்டையே ஸஹாபாக்களுக்குப் பின் வந்த ஸலபுஸ் ஸாலிஹீன்களும் கொண்டிருந்தார்கள்.

## வினா – 25

**மு.்.தஸிலாக்கள் எனப்படுவோர் யார் எனக் குறிப்பிட்டு அதன் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்குக.**

**மொழிக்கருத்து:** "இ.்.தஸல" - "மு.்.தஸிலா" - பிரிந்து சென்றவர்கள், விலகியவர்கள், தனியே ஒதுங்கியவர்கள்

**இஸ்லாமியமரபில்** "அகீதா சார்ந்த விடயங்களை பகுத்தறிவு ரீதியாக சிந்தித்ததனால் எழுந்தகருத்து வேறுபாடு காரணமாக பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தை விட்டும்பிரிந்து சென்ற ஒரு தத்துவ இயக்கம்"

**மு.்.தஸிலா இயக்கத்தின் தோற்றம் பற்றி விளக்குக.**

- இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) பஸராப் பள்ளி வாசலில் இஸ்லாமிய வகுப்புக்களைநடாத்திக் கொண்டிருந்தபோது அவர்களது மாணவர்களில் ஒருவனாயிருந்த வாஸில்பின் அதாவினாலேயே இவ்வியக்கம் உருவாக்கப்பட்டது

**தோற்றம்:**

- ஜமல், ஸிப்பீன் யுத்தங்களின்போது தவறு செய்தவர்கள் பற்றிய கருத்து முரண்பாட்டில், பெரும் பாவங்கள் செய்தவர்கள் முஸ்லிம்களா? காபிர்களா? என்ற விடயத்தில் காரிஜீக்களும், முர்ஜிய்யாக்களும் வேறுபட்ட கருத்துக்களை கொண்டிருந்தனர். தவறிழைத்தோர் காபிர்கள் என்பது காரிஜீக்களது வாதமாகும். முர்ஜிய்யாக்கள் அவர்கள் மு.்.மீன்கள் எனக் குறிப்பிட்டனர்.
- இவ்விடயம் சம்மந்தமாக இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்களுக்கும் அவரது மாணவரான வாஸில் பின் அதா.். என்பவருக்குமிடையில் வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டது. வாஸில் பின் அதா.்., "பொரும் பாவம் செய்தவன் குப்ருக்கும் ஈமானுக்கும் இடையில் இருக்கிறான்" எனக் கூறி இமாம் அவர்களது சபையில் இருந்து விலகிச் சென்றான். அப்போது இமாமவர்கள் "ஹுவ இ.்.தஸல அன்னா" (அவர் - வாஸில் பின் அதா.்.) நம்மை விட்டு விலகி விட்டார் / பிரிந்து சென்று விட்டார்) என்று கூறினார்.
- இந்நிகழ்வைத் தொடர்ந்து இவர்கள் மு.்.தஸிலாக்கள் (பிரிந்து சென்றவர்கள்) என வரலாற்றில் அடையாளப் படுத்தப்படுகின்றனர்.
- இமாமை விட்டுப் பிரிந்த வாஸில், பகுத்தறிவு ரீதியாக சிந்திக்கத் தொடங்கி தனது கருத்துக்கு சார்பாக மாணவர்களைத் திரட்டிக் கொண்டார். அவர்களது செயற்பாட்டால் இவ்வியக்கம் மேலும் வளர்ச்சி பெற்றது.
- அல்-குர்ஆன் படைக்கப்பட்டது என்பது இவர்களது பிரதான கொள்கைகளில்ஒன்றாகும். அல்லாஹ்வின் தாத், ஸிபாத் பற்றிய விடயத்திலும் இவர்கள் முரண்பட்டசிந்தனையைக் கொண்டிருந்தனர்.
- மனிதன் பூரண செயற் சுதந்திரம் மிக்கவன் எனப் பகுத்தறிவு ரீதியாக விளக்கினர்.
- மறுமையில் அல்லாஹ்வைக் காண முடியாது எனவும் பெரும் பாவம் செய்தவர்கள் நிராகரிப்புக்கும் விசுவாசத்துக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கின்றனர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

## வினா – 26

**மு.்.தஸிலாகளின் பிரதான கோட்பாடுகளைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விளக்குக.**

- தொடக்கத்தில் பெரும் பாவம் செய்தவனின் விடயத்தில் முரண்பட்ட மு.்.தஸிலாக்கள் பின்னர் இன்னும் பல விடயங்களிலும் முரண்பட்டனர்.
  1. மனிதன் பூரண செயல் சுதந்திரமுடையவன்.

2. பாவங்களில் ஈடுபட்டவன் மு.ஃமினும் இல்லை, காபிரும் இல்லை. அவன் இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கின்றான்.

- பின்னர் தங்கள் இயக்கத்துக்கென தனியான சில அடிப்படைகளை ஏற்படுத்திக் கொண்டனர். அவைகள் பின்வருமாறு:

1. **தவ்ஹீத் – ஏகத்துவம்:**

   இவர்களிடத்தில் தவ்ஹீத் என கருதுவது அல்லாஹ்வின் தாத்தும் ஸிபத்தும் ஒன்றே என்பதாகும். இவர்கள் அல்லாஹ்வை எதிர்மறையிலேயே வர்ணிப்பார்கள் உதாரணம். அவன் நீளமானவனுமல்ல. அகலமானவனுமல்ல

2. **அத்ல் (இறை நீதி):** இதன் மூலம் இவர்கள் நாடுவது. மனிதர்களது செயற்பாடுகள் அனைத்தும் அவர்களாகவே செய்து கொள்வதுதான். அவர்களது எந்தச் செயற்பாட்டிலும் அல்லாஹ்வின் நாட்டத்திற்கு எப்பங்கும் கிடையாது.

3. **அல்வ.ஃது வல்-வயீத் (வாக்கும் - நற்கூலியும், எச்சரிக்கையும் - தண்டனையும்):**

   மு.ஃமின் தவ்பா செய்தவனாகவும் கட்டுப்பட்டவனாகவும் உலகை விட்டுச் சென்றால் பிரதிபலன்களுக்கும் நன்மைகளுக்கும் உரித்துடையவனாவான். தான் செய்த பெரும்பாவத்துக்காக தவ்பா செய்யாத நிலையில் மரணித்தால் அவன் நரகில் நிரந்தரமாகாகத் தங்குவான். எனினும் அவனுக்குரிய தண்டனை காபிருக்குரிய தண்டனையை விடக் குறைவானதாக இருக்கும்.

4. **அல்-மன்ஜிலது பைனல் மன்ஜிலைதன். (ஈமானுக்கும் குப்ருக்கும் இடைப்பட்ட நிலை):**

   உலகில் பெரும் பாவம் செய்பவன் எவ்விதத்திலும் மு.ஃமின் என்று அழைக்கப்பட தகுதி அற்றவன். அவன் மு.ஃமினுக்கும் காபிருக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பான். அவன் தவ்பா செய்தால் ஈமானின் பக்கம் மீள்வான். தவ்பாச் செய்யாத நிலையில் மரணித்தால் நரகில் நிரந்தரமாகத் தங்குவான்.

5. **அல்-அம்ரு பில்-ம.ஃரூப் வந்நஹ்யு அனில் முன்கர் (நன்மையை ஏவி தீமையை தடுத்தல்):**

   நாவினாலோ கையினாலோஆயுதத்தினாலோ சக்தி பெறும் போது அதற்கேற்ப நன்மையை ஏவித் தீமையைத் தடுப்பது அனைவர் மீதும் கடமையானதாகும்

இவை அல்லாத, இன்னும் பல நம்பிக்கைக் கோட்பாடுகளும் 'மு.ஃதஸிலாக்களிடம்' காணப்படுகின்றன:

1. மறுமையில் எவருக்கும் அல்லாஹ்வைக் காண முடியாது.
2. அல்-குர்ஆன் படைக்கப்பட்டது.
3. "அல்லாஹ் அர்ஷில் அமர்ந்துள்ளான்" என்பதை மறுத்தல்.
4. பெரும் பாவம் செய்த எவருக்கும் நபியவர்களின் 'ஷபாஅத்தைப்' பெறமுடியாது.
5. இறைநேசர்களின் ('அவ்லியாக்களின்') 'கராமத்தை' மறுத்தல்.

## வினா – 27

### மு.ஃதஸிலாக்களின் உட்பிரிவுகளில் ஐந்தினைக் குறிப்பிடுக.

- பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட 'மு.ஃதஸிலாக்கள்' தமக்குள்ளும் கருத்து வேறுபாடுற்று, ஈமான் சார்ந்த விடயங்களில் பல உட்பிரிவுகளாகப் பிரிந்தனர்; அவற்றுட் சில வருமாறு:

1. 'வாஸிலிய்யா'
2. 'ஹுதைலிய்யா'
3. 'நிழாமிய்யா'
4. 'ஹாதிபிய்யா
5. 'பஷரிய்யா'
6. 'முர்தாரிய்யா'

7. ‘ஸமாமிய்யா’ 8. ‘ஹிஷாமிய்யா’

- இது மட்டுமல்லாது, முஸ்லிம் ‘உம்மத்தில்’, ‘ஜஹமிய்யா’, ‘கத்ரிய்யா’, ‘ஜபரிய்யா’, ‘முஅத்திலா’ போன்ற பிரிவுகள் தோன்றுவதற்கும், ‘மு.ஃ.தஸிலாக்கள்’ உருவாக்கிய ‘பகுத்தறிவுவாத சிந்தனைப் போக்கே’ காரணமாக அமைந்தது.

**இஸ்லாத்தின் அடிப்படை கடமைகள் பற்றிய விளக்கம்**

- இபாதத் எண்ணக்கரு விளக்கம்
  - வகைகள்
- அடிப்படை கடமைகள்
  - தொழுகை
    - முக்கியத்துவம்
    - நோக்கங்கள்
    - பயன்கள்
- அடிப்படை கடமைகள்
  - அஸ்ஸலாத்
    - முக்கியத்துவம்
    - நோக்கங்கள்
    - பயன்கள்
  - ஸகாத்
    - முக்கியத்துவம்
    - நோக்கங்கள்
    - செயற்படுத்தல்
    - பயன்கள்
  - அஸ்ஸவ்ம்
    - முக்கியத்துவம்
    - நோக்கங்கள்
    - பயன்கள்
  - அல்ஹஜ்
    - முக்கியத்துவம்
    - நோக்கங்கள்
    - பயன்கள்
  - ஹுகூகுல் இபாத்
    - தனக்குரிய கடமைகள்
    - பிறருக்குரிய கடமைகள்
    - ஏனையவற்றிற்குரிய கடமைகள்

## வினா – 01

**இபாதத் என்பதனை வரைவிலக்கனப்படுத்துக.**

- ‘‘அபத’’ ‘‘உபூதிய்யா’’ எனும் அரபு மூலவேர்ச் சொற்களிலிருந்து தோன்றிய பதமே இபாதாவாகும். (அப்த் - அடிமை)
- அடிபணிதல், பணிபுரிதல், ஊழியம் செய்தல், அடிமையாய் இருத்தல், வணங்குதல், வழிபடுதல் முதலான கருத்துக்களை இப்பதம் தருகின்றது.
- இஸ்லாமிய பரிபாஷையில் ‘‘அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிந்து அல்லாஹ்வை ஏகனாக, எஜமானாக ஏற்று தான் அல்லாஹ்வின் அடிமை என்ற உணர்வுடன் அவனது ஏவல்களை ஏற்று விலகல்களை விலக்கி பூரணமாகக் கட்டுப்பட்டு வாழும் செயலொழுங்கு இபாதத் எனப்படும்’’

- ''(எனக்கு வழிபட்டு என்னை) வணங்குவதற்காகவேயன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் படைக்கவில்லை'' (அஸ்ஸாரிய்யாத் : 56)
- இபாதத் இரு பகுதிகளைக் கொண்டது
  1. கட்டுப்பாடு – (தாஅத்)
  2. இறை நேசம் - (மஹப்பத்)

## வினா – 02

**பிரதான இபாதத்துக்களின் நோக்கங்களைக் குறிப்பிடுக.**

1. உள்ளத்தை பக்குவப்படுத்தி இறையச்சத்தை ஏற்படுத்துவது
2. அல்லாஹ்வுடனான நெருக்கத்தை ஏற்படுத்துவது
3. பாவமான காரியங்களில் இருந்து தவிரந்து வாழப் பயிற்றுவிப்பது
4. தியாகம், பொறுமை, பிறர் நலன் பேணல் போன்ற நற்பண்புகளை வளர்ப்பது
5. இறைத்திருப்தியைப் பெற்று சுவனம் நுழைய வழியமைப்பது.

## வினா – 03

**அன்றாட நடவடிக்கைகளை இபாதத்தாக மாற்றிக்கொள்ள இஸ்லாம் விதித்துள்ள நிபந்தனைகளை குறிப்பிடுக.**

**1). தூய எண்ணம்** :- அடிப்படை வணக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்கு நிய்யத் அவசியப்படுவது போலவே அன்றாட நடவடிக்கைகள் இபாதத்தாக மாறுவதற்கும் தூய எண்ணம் அவசியமாகிறது.

**2). இஸ்லாமிய ஷரீஆவின் அனுமதி** :- அன்றாட நடவடிக்கைகளுக்குரிய செயற்பாடுகள் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதாக இருத்தல். இஸ்லாம் தடுத்த விடயங்கள் தூய எண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்டாலும் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**3). ஷரீஆவின் வரையறைகளை மீறாதிருத்தல்** :- குறித்ததொரு அனுமதிக்கப்பட்ட செயலை அன்றாட வாழ்வில் செய்வதாக இருந்தாலும் அதற்கென விதிக்கப்பட்டுள்ள சட்டங்களையும், ஒழுங்குகளையும் பேணி அதனை நிறைவேற்ற வேண்டும்.

**4). நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செய்தல்** :- அன்றாட விவகாரங்கள் அதற்குரிய ஒழுங்கமைப்பைப் பேணியும், சீராகவும் நிறைவேற்றப்படல் வேண்டும். ஒழுங்கீனம், வீண்விரயம், ஊழல் இடம்பெற முடியாது.

**5). அடிப்படை வணக்கங்களுக்குத் தடையாக அமையாதிருத்தல்** :- அன்றாட நடவடிக்கைகள், தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் போன்ற கடமைகளை நிறைவேற்றத் தடையாக அமையுமாயின் அச்செயற்பாடுகள் இபாதாவாகக் கணிக்கப்படமாட்டாது.

## வினா – 04

**'அஸ்ஸலாத்' எனும் சொல்லை வரைவிலக்கனப்படுத்தி தொழுகையின் முக்கியத்துவத்தினை விளக்குக.**

- ''ஸல்லா'' எனும் அரபு சொல்லில் இருந்து தோன்றிய பதமே ஸலாத் என்பது
- பிரார்த்தனை, பிரதான பகுதி, முதுகெழும்பு முதலான கருத்துக்களை இப்பதம் தருகின்றது.

- இஸ்லாமிய பரிபாஷையில் ''இஹ்ராம் தக்பீருடன் ஆரம்பிக்கப்பட்டு பர்ளான, சுன்னத்தாக ஓதல்களையும், பர்ளான, சுன்னத்தான செயற்பாடுகளையும் உள்ளடக்கி ஸலாத்துடன் மடிவடைகின்ற அல்லாஹ்வுக்காக நிறைவேற்றப்படுகின்ற ஒரு வணக்கமாகும்''

**தொழுகையின் முக்கியத்துவம்**

- கட்டாயக் கடமை
- பெறுமதி மிக்க கடமை
- ஈமானின் அடையாளம்
- வெற்றிக்கான வழி
- எல்லா நபிமார்களுக்கும் விதியாக்கப்பட்ட கடமை
- முஸ்லிமுக்கும் காபிருக்கும் இடையிலான வேறுபாடு
- மறுமையில் முதலில் விசாரிக்கப்படும் கடமை
- மன்னறை வரை நிறைவேற்றப்படும் அமல்
- தொழுகையின் முக்கியத்துவத்தை குர்ஆனும், ஸுன்னாவும் வலியுறுத்துகின்றன.
- "நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான, வெறுக்கத்தக்க கருமங்களிலிருந்து (மனிதனைப்) பாதுகாத்துவிடும்"(29:45)
- ''முஸ்லிமுக்கும் காபிருக்கும்இடையிலான வேறுபாடு தொழுகையை விடுவதாகும்'' (முஸ்லிம்)
- எல்லாக் கடமைகளையும் உலகில் விதியாக்கினான். தொழுகையை விண்ணுலகத்தில் பரிசாக கொடுக்கப்பட்டது.
- தொழுகை அல்லாஹ்வை சதாவும் நினைவுகூரக்கூடிய விதத்திலும், அவனுக்கு கட்டுப்படுத்து நடக்கக் கூடிய விதத்திலும் காலங்களுக்கும், நேரங்களும், நிறைவேற்றக்கூடிய ஒழுங்கு முறைகளும் வகுத்து வழங்கப்பட்டுள்ளமை அதன் முக்கியத்துவத்தை மற்றொரு வகையில் எடுத்துக்காட்டுகின்றது.
- தொழுகையை விட அனுமதியில்லை. தொழுகை விடுபடாமல் இருக்க நியதிகளுடன் கூடிய சலுகை வழங்கப்பட்டுள்ளது.
- தொழுகை உடற்பரிசுத்தத்திற்கும் உளப் பரிசுத்தத்திற்கும் வழிவகுக்கும்
- தொழுகை உடலுக்கு ஒரு சிறந்த பயிற்சியாகவும் அமைகின்றது.

## வினா – 05

**தொழுகையின் நோக்கத்தைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.**

- தொழுகையின் நோக்கங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.
  - அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிதல்.
  - அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுதல்
  - நிறைவேற்றுவதன் மூலம் மறுமை வெற்றியை உறுதிப்படுத்தல் (அல் அன்ஆம் : 72)
  - உலகின் சீரான செயற்பாட்டுக்கு உந்து சக்தியாக அமைதல்.
  - தொழுகையை சரியாக நிறைவேற்றும்போது அடியார்களுக்கிடையிலான ஆளிடைத் தொடர்பு சீர்பெறும்.

- தக்வாவை ஏற்படுத்தி பாவச்செயல்களிலிருந்து தவிர்ந்துகொள்ளல். (அல் அன்கபூத் : 45)
- நற்கூலியைப் பெற்று சுவனப்பாக்கியத்தை அடைந்து கொள்ளல். (2 : 277)
- அல்லாஹ்வை ஞாபகம் செய்தல் (20 : 14)- உள நிம்மதியை ஏற்படுத்தல் (13 : 28)

## வினா – 06

**தொழுகையின் ஆன்மீக, லௌகீக பயன்களை குறிப்பிடுக.**

**(ஆன்மீகப் பயன்கள்)**

1. இறையச்சம் (தக்வா) ஏற்படல்
2. உளத்தூய்மை
3. இறை சிந்தனை, இறைத்தொடர்பு
4. பாவமன்னிப்புப் பெறல்
5. இறைவனுக்கு நன்றி பாராட்டும் மனநிலையை ஏற்படுத்தல்
6. பாவங்களில் இருந்து தவிர்ந்து வாழ்தல்
7. இறையருள் கிட்டல்
8. சுவர்க்கத்தின் திறவுகோளாய் அமைதல்
9. பாவமன்னிப்பை பெற்றுத்தரல்
10. மறுமையில் சாட்சியாக அமைதல்
11. நகரை விட்டு காப்பாற்றப்படுதல்

**(லௌகீகக் பயன்கள்)**

1. அக புற சுத்தத்தை ஏற்படுதல்
2. மனநிம்மதி ஏற்படல்
3. சுறுசுறுப்பு ஏற்படல், உடலாரோக்கியம் கிடைத்தல்
4. ஐக்கியம், சகோதர்த்துவ உணர்வு ஏற்படல்
5. தலைமைத்துவத்திற்கு கட்டுப்படல்
6. உள அமைதி ஏற்படல்
7. உறுதிமிக்க மனநிலை ஏற்படல்
8. தயாள சிந்தனை ஏற்படல்
9. பாவச் செயல்களில் இருந்து தடுத்தல்
10. நேர முகாமைத்தவம்

## வினா – 07

**கூட்டுத் தொழுகையின் பயன்கள் ஐந்தைக் குறிப்பிடுக.**

1. கூட்டுறவு ஏற்படுதல்
2. உதவும் மனநிலை ஏற்படுதல்
3. ஐக்கியம், சகோதரத்துவம், சமத்துவம்

4. தலைமைத்துவக் கட்டுப்பாடு
5. இராணுவப் பயிற்சி கிடைத்தல்

## பகுதி i

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**1** முஸ்லிம்களது முதல் கிப்லா அமைந்துள்ள இடம்,
I மக்கா II மதீனா III கூபா IV ஜெரூஸலம் V சிரியா

**2** பர்ளான தொழுகையின் நேரத்தை அறிவது,
I ஷர்த்து II பர்ளு III வாஜிப் IV சுன்னத் V முபாஹ்

**3** தொழும் முறையை தெரிந்து கொள்வது,
I ஷர்த்து II பர்ளு III வாஜிப் IV சுன்னத் V முபாஹ்

**4** மஸ்ஜிதில் இடம் பெறும் நபி (ஸல்) அவர்கள் செய்து காட்டிய செயற்பாடுகளில் மிகப்ரிரதானமானது,
I தொழுதல்
II அல்குர்ஆன் ஓதுதல்
III கல்வி கற்றல்
IV இ∴திகாப் இருத்தல்
V திக்ர் செய்தல்

**5** ஸுபஹுத் தொழுகையின் அதானில் 'அஸ்ஸலாத்து கைருன் மினன்நவ்ம்' என்ற தொடரை முதலில் சொன்னவர்,
I நபி (ஸல்) அவர்கள்
II அலி (ரழி)
III பிலால் (ரழி)
IV அபூபக்கர் (ரழி)
V அம்மார் (ரழி)

**6** தொழுகையின் போது மறதியினால் நடு அத்தஹிய்யாத்தை தவறவிட்ட நீர்
I ஸஜதா ஸஹ்வு செய்வீர்
II ஸஜதா திலாவத் செய்வீர்
III தவறிய அத்தஹிய்யாத்தை மீண்டும் ஓதுவீர்
IV தொழுகையை மீட்டித் தொழுவீர்
V ஸஜதா ஷுக்ர் செய்வீர்

**7** ''ஸலாத்துல் குஸுபைன்'' எனக் குறிப்பிடும் சுன்னத்தான தொழுகை,
I இரு கிரகணத் தொழுகை
II மழை வேண்டித் தொழும் தொழுகை
III இரவுத் தொழுகை
IV இரு பெருநாள் தொழுகை
V நன்மை நாடித் தொழுமை தொழுகை

**8** சுபஹுத் தொழுகையில் கட்டாயம் ஓத வேண்டிய சூறா
I சூறா இஹ்லாஸ்
II சூறா அல்காஷியா
III சூறா அல் பாத்திஹா
IV சூறா அஸ்ஸஜதா
V சூறா அல் அன்ஆம்

**9** தொழுகையில் சிறப்பம்சங்களை உடுத்தக் காட்டும் சரியான தொகுதி,
A மு∴மீனின் மி∴ராஜ்
B சுவர்க்கத்தின் திறவு கோல்
C தொழாதவன் முஸ்லிமல்ல
D விட்டு விட்டுத் தொழுவதில் பாவமில்லை
E ஜமாஅத் தொழுகைக்கு 27 மடங்கு நன்மையுண்டு

F தொழுபவருக்கு ‘வய்ல்’ என’ற நரகம்

I ABCD II BCDE III EDCB IV ABCE V CDEF

**10** ஒரு முஸ்லிம் வுழு இன்றி செய்யக்கூடாத செயல்,

I தொழுதல் IV தௌபா கேட்டல்
II அல்குர்ஆன் ஓதுதல் V திக்ருகளை ஓதுதல்
III இ.்.திகாப் இருத்தல்

**11** தொழுகையின் போது க.்.பாவை முன்னோக்குவது,

I ஷர்த்து II பர்ளு III வாஜிப் IV சுன்னத் V முபாஹ்

**12** ‘‘நான் தொழுவதை எவ்வாறு கண்டீர்களோ அவ்வாறே நீங்களும் தொழுங்கள்’’ என்று மொழிந்தவர்.

I இமாம் ஷாபிஈ (ரஹ்) IV அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்)
II ஜிப்ரீல் (அலை) V முஹம்மது நபி (ஸல்)
III அபூ மூஸா அல்அஷ்அரி

**13** பி:ப 5.30 மணிக்கு கொழும்பிலிருந்து கண்டியை நோக்கிப் புறப்பட்ட நீங்கள் ம.்.ரிப் தொழுகை குறித்து எடுக்கக் கூடிய சிறந்த முடிவு,

I ம.்.ரிப் தொழுகையை தொழாதிருத்தல்
II கண்டிக்குச் சென்றதும் இஷாத் தொழுகையை நிறைவேற்றல்
III கண்டி நகரை அடைந்ததும் ம.்.ரிபையும் இஷாவையும் சேர்த்துத் தொழுதல்
IV கண்டியை அடைந்ததும் இஷாவையும் பின்னர் ம.்.ரிபையும் தொழுதல்
V அடுத்த நாள் கழா செய்தல்

**14** கட்டாயம் ஜமாஅத்துடன் நிறைவேற்ற வெண்டிய தொழுகை,

I தராவீஹ் தொழுகை IV ஜும்ஆ தொழுகை
II ஜனாஸா தொழுகை V பெருநாள் தொழுகை
III வித்ர் தொழுகை

**15** மஹ்ரிபையும் இஷாவையும் மஹ்ரிபுடைய நேரத்தில் முற்படுத்திச் சேர்த்துத் தொழுவது,

I ஜம்உ கஸ்ர் IV ஜம்உ தக்தீம்
II ஜம்உ V ஜம்உ த.்.கீர்
III கஸ்ர்

**16** பின்வருவனவற்றுள் தொழுகையின் பர்ளுகளுள் அடங்காதது,

I சூறதுல் பாத்திஹா ஓதுதல் IV ஸுஜூது செய்தல்
II கிப்லாவை முன்னோக்கல் V முதலாம் ஸலாம் கொடுத்தல்
III இ.்.திதாலில் தரித்தல்

**17** நபி (ஸல்) அவர்கள் மீது ஜும்ஆத் தொழுகை விதியாக்கப்பட்ட இடம்,

I மக்காவுக்கும் குபாவுக்குமிடையில் IV மக்காவுக்கும் தாயிபிற்குமிடையில்
II குபாவுக்கும் தாயிபிற்குமிடையில் V குபாவுக்கும் மதீனாவுக்குமிடையில்
III மக்காவுக்கும் மதீனாவுக்குமிடையில்

18 – 20 வினாக்களுள் வரும் சொற்களில் இரண்டு சொற்கள் இன்னும் இரண்டு சொற்களுடன் ஏதேனும் ஒரு விதத்தில் உடன்படுகின்றன. அவ்வாறு உடன்படாத சொல்லைத் தெரிவு செய்க.

**18** I அஸர் II ளுஹர் III வித்ர்
IV லுஹா V குஸூபைன்

**19** I அஸர் II ளுஹர் III வித்ர்
IV நோன்புப் பெருநாள் V ஹஜ்ஜுப் பெருநாள்

**20** I ஸலாதுல் ஹாஜா II ஸலாத் III ஸவ்ம்
IV தொழுகை V நோன்பு

## வினா – 08

**‘ஸகாத்’ என்ற சொல்லை வரைவிலக்கனப்படுத்துக.**

- ❖ இஸ்லாத்தின் மூன்றாவது கடமை
- ❖ தொழுகைக்கு அடுத்து ஹிஜ்ரி 2ல் கடமையாக்கப்பட்டது
- ❖ சொல் ரீதியான அர்த்தம் - தூய்மை, வளர்ச்சி, அபிவிருத்தி, அழுக்குகளைப் போக்கி விடல், அருள், பேறு, அதிகரிப்பு, சீர்மை
- ❖ இஸ்லாமிய பரிபாஷையில் - ‘‘ஸகாத் விதியாவதற்குரிய நிபந்தனைகளுக்கு உட்படுகின்ற முஸ்லிம்கள் தமது சொத்தில் முசு செல்வங்களில் இருந்து அவற்றின் நிஸாபையும் காலத்தையும் அடைந்ததன் பின்னர் அல்லாஹ் விதியாக்கிய நிஸாப் அளவில் 8 கூட்டத்தாருக்கு பகிர்ந்தாளிக்கும் அமைப்பைக் கொண்ட கடமை ஸகாத் ஆகும்’’

## வினா – 09

**ஸகாத்தின் முக்கியத்துவத்தினை விளக்குக.**

1. அல்குர்ஆனில் 30 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
2. தொழுகையோடு இணைத்து 27 இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
3. முன்பிருந்த சமூகத்தில் கடமையாக்கப்பட்டிருந்த கடமை.
4. நபியின் கூற்று – அவசியமானால் ஆயதப் பிரயோகம் செய்தேனும் நிலை நாட்ட முயல்க. ‘‘மக்கள் அல்லாஹ்வின் தூதர் என மொழிந்து, தொழுகையை நிலை நாட்டி, ஸகாத்தையும் கொடுக்கும் வரை அவர்களோடு போராட நான் அனுப்பப்பட்டுள்ளேன்’’ (புகாரி) (அபூபக்கர் (ரழி)யின் கூற்று)
5. இஸ்லாத்தை விட்டு நீங்கியவர் - மதம் மாறியவர்- முர்தத்
6. ஹிஸ்புல்லாஹ் என்ற படையில் சேர்வார்.
7. குர்ஆனும் ஹதீஸும் முன்வைக்கும் போதனை

**ஸகாத்தின் பர்ளுகள் 2**

1. நிய்யத்து வைத்தல்
2. தகுதியானவர்களுக்கு கொடுத்தல்

## வினா – 10

**ஸகாத்தின் கடமையாவதற்குரிய நிபந்தனைகளைக் குறிப்பிடுக**

1. முஸ்லிமாக இருத்தல்
2. சுதந்திரவானாக இருத்தல்

3. பொருள் தனக்குரியதபாக இருத்தல்
4. நிஸாபை அடைந்திருத்தல்
5. வருடம் பூர்த்தியாகி இருத்தல்
6. சொத்து வளர்ச்சி அடையக்கூடியதாக இருத்தல்
7. அடிப்படைத் தேவைகளை விட மேலதிகமாக இருத்தல்
8. ஹலாலான வழிகளில் சேர்ந்த செல்வமாக இருத்தல்
9. ஷரீஅத் தடை செய்த பொருளாக இல்லாதிருத்தல்.

## வினா – 10

**ஸகாத் விதியாகும் பொருட்களை அட்டவணைப்படுத்துக.**

1. தங்கள், வெள்ளி
2. பணம்
3. வியாபாரப் பொருட்கள்
4. விவசாயப் பொருட்கள் (தானியங்கள், பழ வகைகள்
5. கால் நடைகள் (ஆடு, மாடு, ஒட்டகம்)
6. கனிப்பொருட்கள், புதையல், மீன்பிடித்தல்

## வினா – 11

**ஸகாத் பெறத்தகுதியுடைய கூட்டத்தினரை அட்டவணைப்படுத்துக.**

1. பக்கீர் - பரம ஏழை
2. மிஸ்கீன் - போதிய வருமானம் அற்றவர்
3. அல் -ஆமில் - ஸகாத் வசூலிப்பவர்
4. முஅல்லபதுல் குலூப் (அல் முஅல்லபதுல் குலூபுஹூம்) - புதிய முஸ்லிம்
5. அர்ரிகாப் (பீ அல்- ரிக்காப்) - உரிமை சீட்டு எழுதப்பட்ட அடிமை
6. அல் காரிமூன் - கடன்காரன்
7. பீ ஸபீலில்லாஹ் - அல்லாஹ்வின் பாதையில் போராடுபவர்
8. இப்னுஸ்ஸபீல் - வழிப்போக்கன் / பிரயாணி

## வினா – 12

**ஸகாத் பெறத்தகுதியற்ற கூட்டத்தினை அட்டவணைப்படுத்துக.**

1. செல்வந்தர்கள்
2. உழைக்க முடியுமானவர்கள் (போதிய வருமானம் உள்ளவர்)
3. முஸ்லிம் அல்லாதவர்கள்
4. தனது பராமரிப்பில் உள்ளவர்கள்
5. அஹ்லுல் பைத் - (வேதத்தை உடையவர்கள்)
   பனூ ஹாஷிம்கள் (நபியின் வம்சத்தினர்)

பனூ முத்தலிப் (நபியின் குடும்பத்தினர்)

## வினா – 13

**ஸகாத்தின் மூலம் கொடுப்பவருக்குக் கிடைக்கும் நன்மைகளைக் குறிப்பிடுக.**

1. செல்வத்தின் மீதுள்ள பற்றைக் குறைத்தல்
2. உலோபித்தனம் நீங்கல்
3. பரந்த மனப்பாங்கு ஏற்படல்
4. செல்வம் தூய்மை அடைதலும் அபிவிருத்தி அடைதலும்
5. அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தல்

## வினா – 14

**ஸகாத்தின் மூலம் பெறுபவருக்கு கிடைக்கும் நன்மைகளைக் குறிப்பிடுக.**

1. ஏழ்மை குறைந்து வறுமை நீங்குதல்
2. பொருளாதார மேம்பாட்டுக்கு வழிவகுத்தல்
3. தொழில் வாய்ப்பு கிடைத்தல்

## வினா – 15

**ஸகாத்தின் மூலம் கிடைக்கும் சமூகப் பயன்களைக் குறிப்பிடுக.**

1. அல்லாஹ்வின் அன்பும் திருப்தியும்
2. பணச்சுழற்சி
3. சகோதரத்துவமும் சமத்துவமும்
4. திட்டமிட்டு செயற்பட வழிவகுக்கும்
5. சுரண்டலைத் தடுக்கும் (மேற்கூறப்பட்ட அனைத்துப் பயன்களையும் சமூகப் பயனாகவும் எடுக்கவும்)

## வினா – 16

**ஸகாத் கடமையாகும் பொருட்களையும் அதன் ஆரம்ப அளவு நிஸாபையும் குறிப்பிக.**

**நிஸாப் அளவு**

1. **கால்நடைகள்**

   **I. ஆடு**

   40 : 1 (2 வயதுள்ள பெண் ஆடு)
   121 : 2 (2 வயதுள்ள பெண் ஆடு)
   201 : 3 (2 வயதுள்ள பெண் ஆடு)
   400 : 4 (2 வயதுள்ள பெண் ஆடு)

(மேற்படும் ஒவ்வொரு 100குகும் 1 வீதம் அதிகரிக்கும்)

**II.** **மாடு**

30 : 1 (1 வயதுள்ள காளை மாடு)

40 : 1 (2 வயதுள்ள பெண் மாடு)

**III.** **ஒட்டகம்**

5 : 1 (2 வயதுள்ள பெண் ஆடு)

25 : 1 (1 வயதுள்ள பெண் ஒட்டகம்)

**2. தானியங்கள் (நெல், கோதுமை)**

- 5 வஸகு, 689.5Kg உமி நீக்காவிடின் இரு மடங்கு

**3. பழங்கள்**

**4. கனிப்பொருள்**

- தங்கம் - 20 மிஸ்கால் OR 85g, 1/40
- வெள்ளி – 200 திர்ஹம் OR 595g, 1/40

**5. பணம்**

- 85g தங்கத்தின் பெறுமதிக்கு மேல் காணப்படும் அளவில் 2.5%

**6. வர்த்தகப் பொருட்கள்**

## பகுதி i

மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**1** ஒருவர் தன்னிடம் வருடம் முழுவதும் வைத்திருக்கும் பாவனைக்கு மேலதிகமான தங்கத்திற்கு ஸகாத் வழங்குவதற்கான ஆரம்ப நிஸாப்,

I 672 கிராமை விட அதிகமாக இருக்க வேண்டும்

II 85 கிராமை விட அதிகமாக இருக்க வேண்டும்

III 20 கிராமை விட அதிகமாக இருக்க வேண்டும்

IV 10 கிராமை விட அதிகமாக இருக்க வேண்டும்

V 78 கிராமை விட அதிகமாக இருக்க வேண்டும்

**2** 401 ஆடுகளை வைத்திருக்கும் ஒருவர் வருட முடிவில் கொடுக்க வேண்டிய நிஸாபின் அளவு,

I 5 ஆடுகள்

II 4 ஆடுகள்

III 3 ஆடுகள்

IV 2 வயது காளை மாடு 1

V 2 வயது காளை மாடு 2

**3** ஸகாத் பெறத் தகுதியானோரில் தற்காலத்தில் வீடற்றோர் அடங்கும் பிரிவு

I பீஸபீலில்லாஹ்

II இப்னுஸ் ஸபீல்

III அடிமைகள்

IV காரிமூன்

V அல்முஅல்லபதுல் குலூப்

**4** ஸகாத்தின் பயன்களுன்

A அல்லாஹ்வின் அன்பு கிடைக்கின்றது

B உலோபித்தனம் நீங்குகின்றது

D சுயநலம் நீங்குகின்றது

E சுரண்டல் நீங்குகின்றது

C செல்வம் குறைவடைகின்றது

I ABCE II ABDE III ABCD IV ACDE V BCDE

5 ஸகாத் கொடுக்க மறுத்தவர்களுடன் போர் புரிந்த கலீபா,

I உமர் (ரழி)
II அபூபக்கர் (ரழி)
III முஆவியா (ரழி)
IV அலி (ரழி)
V உஸ்மான் (ரழி)

6 ஸகாத் பெறத்தகுதியானோரில் ‘‘பீ ஸபீலில்லாஹ்’’ என்போர்,

I கடன்காரர்கள்
II அடிமைகள்
III வழிப்போக்கர்கள்
IV இறை பாதையில் இருப்போர்
V ஸகாத் வசூலிப்போர்

7 ஸகாத் பெறத்தகுதியுடைய கூட்டத்தினர்,

I 6 II 8 III 7 IV 9 V 5

8 ஸகாத் பெறத்தகுதியானோரில் ‘‘அர்ரிகாப்’’ என்போர்,

I இறை பாதையில் இருப்போர்
II கடன்காரர்கள்
III ஸகாத் வசூலிப்போர்
IV அடிமைகள்
V வழிப்போக்கர்கள்

9 வியாபாரப் பொருளிற்கான ஸகாத் அளவு,

I 2% II 2.5% III 2.25% IV 2.75% V 3%

10 ஸகாத் பெறத்தகுதியானோரில் ‘‘இப்னுஸ்ஸபீல்’’ என்போர்,

I ஏழைகள்
II அடிமைகள்
III வழிப்போக்கர்கள்
IV போரிாளிகள்
V அடிமைகள்

11 பொருளால் நிறைவேற்றப்படும் வணக்கம்,

I தொழுகை II நோன்பு III ஸகாத் IV ஜிஹாத் V ஹஜ்

12 ஸகாத் விதியாக்கப்பட்ட ஆண்டு,

I ஹி - 1 II ஹி - 2 III ஹி – 3 IV ஹி - 4 V ஹி - 5

13 நீர்ப்பாசனத்துக்கு செலவளிப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட விவசாய அறுவடைக்கான ஸகாத்,

I 5% II 2.5% III 10% IV 20% V 15%

14 ஸகாத் விதியாவதற்கு இருக்க வேண்டிய குறைந்த அளவைக் குறிப்பது,

I நிஸாப்
II குல்லதைன்
III இறாத்தல்
IV வஸகு
V புலூ.ஃ

15 ஸகாத் பெறத்தகுதியற்றோர்,

A பனூ ஹாஷஸம்கள், அல்லுல் பைத்கள்
B அடிமைகள்
C காபிர்கள்
D கடன்காரர்கள்
E தன்னுடைய பராமரிப்பில் உள்ளவர்கள்

I BCDE II CDEA III ABCD IV ABCE V ABDE

16-20 வரையுள்ள வினாக்களில் இரண்டு வகையான கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிகளுக்கு கீழே உள்ள (1), (2), (3), (4), (5)

என்பவற்றில் மிகப் பொருத்தமானது எது என்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை பல்தேர்வு வினாப்பத்திரத்தில் உள்ள ஐந்து கூடுகளில் பொருத்தமானதற்கு அடையாளமிடுக.

| இல | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | முதலாம் கூற்றை மேலும் விளக்குகிறது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 16 | ஸகாத் நிதியை முஸ்லிம் அல்லாதவர்கள் சிலர் பெற அனுமதியுண்டு | இஸ்லாத்திற்கு இணக்கமானோருக்கு ஸகாத் வழங்குவதன் மூலம் அவர்கள் இஸ்லாம் பற்றி நல்லெண்ணம் கொள்ளவும், இஸ்லாத்தில் இணைந்து கொள்ளவும் வாய்ப்புண்டு |
| 17 | நிஸாப் என்பது அளவை நிறுவையில் பயன்படுத்தப்படும் அளவீடு ஆகும் | வருடத்திற்கு ஒரு முறை நிஸாப் அளவில் கொடுக்க வேண்டும் |
| 18 | கலண்டரை அடிப்படையாகக் கொண்டு ஸகாத் வழங்க வேண்டும் | அர்ரிகாப் எனும் கூட்டத்தினர் இலங்கையில் வாழ்கின்றனர் |
| 19 | ஸகாத் பெறும் 8 கூட்டத்தினரைப் பற்றி அல்குர்ஆன் பேசுகின்றது | சூறா தௌபாவில் ஸகாத் பெறத்தகுதியானோர் பற்றி கூறப்பட்டுள்ளது |
| 20 | பாவனையில் உள்ள தங்கத்திற்கு ஸகாத் விதியாகாது | உமர் (ரழி) ஸகாத் கொடுக்க மறுத்தோருக்கு எதிராக யுத்தம் செய்து வெற்றி பெற்றார் |

## வினா – 17

**'அஸ்ஸவ்ம்' என்ற சொல்லை வரைவிலக்கனப்படுத்துக.**

- சொல் விளக்கம் - ஸவ்ம் - அடிச்சொல்
- விலகியிருத்தல், தவிர்ந்து கொள்ளல், தவிர்த்தல், தடுத்துக் கொள்ளல்
- ரமழான் - சுட்டெறித்தல்
- இஸ்லாமிய பரிபாஷையில் - ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் திருப்தியை நாடி நோன்பு நோற்கிறேன் என்ற நிய்யத்துடன் கிழக்கு வெளுத்தது முதல் அல்லது பஜ்ர் உதயமாகியது முதல் சூரியன் மறையும் வரை நோன்பை முறிக்கும் காரியங்களைத் தவிர்ந்து அல்லாஹ்விற்காக நிறைவேற்றுகின்ற ஒரு இபாதத்"

## வினா – 18

**நோன்பின் வகைகள்**

- 1. பார்ளான நோன்பு
    - ரமழான் நோன்பு
    - நேர்ச்சை நோன்பு
    - கழா நோன்பு
- 2. சுன்னத்தான நோன்பு
    - (வாராந்த நோன்பு )

            - திங்கள் , வியாழன்
    - (மாதாந்த நோன்பு )
        - அய்யாமுல் பீழ் பிறை 13, 14, 15
        - ஆய்யாமுஷ் ஷுத் பிறை 27, 28, 29,
    - (வருடாந்து நோன்பு)
        - அரபா நோன்பு துல்ஹஜ் 9
        - முஹர்ரம் 9 தாஸுஆ
        - முஹர்ரம் 10 ஆசூரா
        - 6 நோன்பு (ஷவ்வால் 2-7)
        - ஷ.்.பான் மாத பெரும்பாலான நாட்கள்
        - ஒரு நாள் விட்டு ஒரு நாள் (தாவூத் அலை)

## வினா – 19

**நோன்பு நோற்க தடை செய்யப்பட்ட நாட்கள் எவை?**

1. நோன்புப் பெருநாள் தினம்
2. ஹஜ்ஜுப் பெருநாள் தினம் (துல்ஹஜ் 11, 12, 13)
3. சந்தேகத்துக்குரிய நாட்கள் (பிறை)

## வினா – 20

**நோன்பின் முக்கியத்துவத்தினை குறிப்பிடுக.**

1. அடிப்படை வணக்கம் (உடல்,செயல்)
2. முன்னைய சமூகத்துக்கு விதியாக்கப்பட்ட கடமை ''எங்களுக்கு முன்பிருந்தோர் மீது விதியாக்கப்பட்டது போல உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது'' (2:83)
3. அல்லாஹ்வுக்காக செய்யும் அமல், கூலியைப் பொறுப்பேற்றுள்ளான். ''நோன்பு எனக்குரியது. அதற்குரிய கூலியை நானே தருவேன்'' (ஹதீஸ்)
4. விசேட சுவனம் - ரைய்யான் - வாசல்
5. குர்ஆன் அருளப்பட்ட மாதம்- கௌரவிக்கும் அமல் நோன்பு''யார் ரமழான் மாதத்தை அடைகின்றாரோ அவர் நோன்பு நோற்கட்டும்''
6. ஓவ்வொரு வருடமும் உலக முஸ்லிம்களால் ஏக காலத்தில் தொடர்ச்சியாக 30 நாட்கள் கட்டாயம் நோன்பு நோற்க வேண்டும்

## வினா – 21

**நோன்பின் நோக்கத்தினை விளக்குக.**

- தக்வாவை ஏற்படுத்தல்.
- அல்லாஹ்வுக்காக, தன் தேவைகளையும் ஆசைகளையும் கட்டுப்படுத்தும் பயிற்சியை வழங்குதல்.
- ஆன்மாவைப் பலப்படுத்தல்.
    - ''தனது மனோ இச்சையைத் தனது கடவுளாக எடுத்துக் கொண்டவனை நீர் பார்த்தீரா? நீ அவனுக்கும் பொறுப்பாளியாக இருப்பீரா? அல்லது அவர்களில் அதிகமானோர் செவிமடுக்கிறார்கள் அல்லது பகுத்தறிந்து கொள்கிறார்கள் என

நீர் நினைக்கிறிரா? அவர்கள் மிருகங்களைப் போன்றவர்கள். இல்லை அவர்கள் அதனைப் பார்க்கிலும் வழிகெட்டவர்கள்.'' (25: 43-44)

- ஆரோக்கியத்தைப் பெற்றுக் கொடுத்தல்.
    - ''நீங்கள் நோன்பிருங்கள்: ஆரோக்கியம் பெறுவீர்கள்.'' (ஹதீஸ்)
- ஆளுமையையும் தன்னம்பிக்கையையும் பெற்றுக் கொடுத்தல்
- இறை அருட்கொடைகளைப் புரிந்து கொள்ளச் செய்தல்
- ஏனையோரின் கஷ்டங்களை, துயரங்களைப் புரிந்து கொள்ளச் செய்தல்
- அல்லாஹ்வுக்குப் பூரணமாக அடிபணிய வைத்தல்.
- தீய செயல்களிலிருந்து விடுபட வழிவகுத்தல்.

## வினா – 22

**நோன்பின் பர்ளுகள் (MCQ)**

1. நிய்யத்து – அல்லாஹ்வுக்காக நோன்பு நோற்கின்றேன் என்ற எண்ணம்
2. சூரியன் உதித்திலிருந்து மறையும் வரை உண்ணாமல், பருகாமல் நோன்பை முறிக்கும் காரியங்களில் ஈடுபடாமல் இருத்தல்

## வினா – 23

**நோன்பை முறிக்கும் காரியங்கள் (MCQ)**

1. உண்ணல், பருகல், புகைப்பிடித்தல்
2. உடலுறவில் ஈடுபடல், இந்திரியம் வெளியாகுதல்
3. மாதவிடாய் ஏற்படல், பிரசவம் நிகழுதல்
4. முனைந்து வாந்தியெடுத்தல்
5. ஊசி போன்ற மருந்துகளை உடம்பினுள் செலுத்துதல்

## வினா – 24

**நோன்பின் சுன்னத்துக்கள் (MCQ)**

- ஸகர் செய்தல்
- ஸகர் செய்வதை பிற்படுத்தல்
- நோன்பு திறத்தல்
- நோன்பு திறப்பதை அவசரப்படுத்தல்
- பேரீத்தம் பழத்தைக் கொண்டு நோன்பு திறத்தல்
- துஆக்களை ஓதுதல்

## வினா – 25

**நோன்பில் செய்யக்கூடிய சுன்னத்துக்கள் (MCQ)**

- ஸதகா செய்தல்
- திலாவதுல் குர்ஆன்
- திக்ர் செய்தல்
- இரவில் நின்று வணங்குதல்
- அதிகமாக துஆ செய்தல்
- தராவீஹ் மற்றும் இரவு நேரத் தொழுகைகள் (இரவில் நின்று வணங்குதல்)
- இ.்.திகாப் இருத்தல்
- குளிப்பு கடமையானவர்கள் சுபஹுக்கு முன் குளித்தல்
- ஸகாதுல் பித்ர் வழங்கல்

## வினா – 26

**நோன்பின் ஆன்மீக, லௌகீக பயன்களை குறிப்பிடுக.**

**நோன்பின் பயன்கள் (ஆன்மீகம்)**

- தக்வாவை ஏற்படுத்தல்
- ஆன்மீக வலிமை ஏற்படுதல்
- பாவமன்னிப்பு கிடைத்தல்
- பொறுமை ஏற்படுதல்
- அதிக நன்மை கிடைத்தல்
- தீமையை விட்டு விடுதல்
- உளத்தூய்மை ஏற்படுதல்
- குர்ஆனோடு இணைப்பு ஏற்படுத்தல்

**நோன்பின் பயன்கள் (லௌகீகம்)**

- உடலாரோக்கியம் கிடைத்தல்
- பிறர் நலன் பேணல்
- ஐம்புலன்கள் கட்டுப்படுத்தல்
- கட்டுப்பாடான வாழ்வுக்கான பயிற்சி கிடைத்தல்
- சகோதரத்துவ, சமூக உணர்வு ஏற்படுதல்
- தாராளமான தன்மை ஏற்படுதல்
- வீண்விரயம் தவிரத்தல்
- சிக்கனமான வாழ்வு ஏற்படுதல்

**பகுதி I**

**மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

**01** நோன்பு நோற்பதற்கு சுன்னத்தாக்கப்பட்ட அய்யாமுல் பீழ் தினங்கள்,

I வருடத்திற்கு ஒரு முறை வரும்
II மாதத்திற்கு ஒரு முறை வரும்
III வாரத்திற்கு ஒரு முறை வரும்
IV வருடத்திற்கு இரு முறை வரும்
V மாதத்திற்கு இரு முறை வரும்

**02** நீர் ஏன் ரமழான் மாதத்தில் நோன்பு நோற்கின்றீர் என ஒரு முஸ்லிம் அல்லாத நண்பர் உம்மிடம் கேட்டால் நீர் அவருக்கு சொல்லும் சரியான பதில்,

I நோன்பு நோற்றால் உடல் ஆராக்கியம் கிடைக்கும்

II பசியின் கொடுமையை உணர்வதற்கு
III அல்லாஹ்வின் கட்டளை அதற்கு கட்டுப்படுவது எமது கடமை
IV முஸ்லிமாக இருப்பதனால் நோன்பு நோற்க வேண்டும்
V நோன்பு நோற்பதனால் பல ஆன்மீக, லௌகீக பயன்கள் கிடைக்கின்றன

**03** நோன்பு நோற்பவர் ஸகர் செய்வது,
I பர்ளாகும்
II முஸ்தஹப்பாகும்
III சுன்னத்தாகும்
IV வாஜிபாகும்
V ஜாஇஸாகும்

**04** நோன்பினால் ஏற்படும் நன்மைகள்,
A உடலாரோக்கியம் குன்றுதல்
B ஏழைகளின் பசியை உணர்தல்
C புலனடக்கம்
D பொறுமை
E தக்வா

I ABCD II ABDE III ACDE IV BCDE V ABCE

**05** ரமழான் நோன்பினால் எதிர்ப்பார்க்கப்படும் பயன்களில் பிரதானமானது,
I உடல், உள கட்டுப்பாடு
II ஏழைகளின் கஸ்டங்களை உணர்தல்
III உலக முஸ்லிம்களின் ஐக்கியத்தை உணருதல்
IV உடலாரோக்கியம் பெறுதல்
V விழித்திருந்து அமல் செய்தல்

**06** அய்யாமுல் பீழ் என்பது,
I மாதத்தில் பிறை 11, 12, 13
II மாதத்தில் பிறை 13, 14, 15
III மாதத்தில் பிறை 27, 28, 29
IV மாதத்தில் பிறை 28, 29, 30
V துல்ஹஜ் பிறை 11, 12, 13

**07** பின்வருவனவற்றுள் நோன்பு செல்லுபடியற்றதாகும் செயல்,
I பட்டினியோடு நோன்பிருத்தல்
II பகலில் தூக்கத்தில் உமிழ்நீர் வடிதல்
III இரவில் நீண்ட நேரம் விழித்திருத்தல்
IV பெண்களுக்கு பிரசவம் ஏற்படல்
V பிரயாணம் செய்தல்

**08** சுன்னத்தான நோன்பு நோற்கப்படும் நாட்களின் தொகுதி,
A திங்கள், வியாழன்
B மாதத்தில் பிறை 13, 14, 15
C அய்யாமுத் தஷ்ரீக்
D அரபா நாள்
E ஈதைன்
F ஷவ்வால் ஆறு தினங்கள்

I ABCD II CDEF III ABDF IV BDEF V ACEF

**09** பின்வரும் செயல்களில் நோன்பை முறிக்கும் செயல் அல்லாதது,
I பிள்ளைப் பேறு
II உடலுறவு கொள்ளல்
III ஊசி மருந்து ஏற்றல்
IV அதிக நேரம் சுய நினைவின்னிற இருத்தல்
V ஸுப்ஹுக்கு அதான் சொல்லும் போது உணவினை உட்கொள்ளுதல்

**10** ஸவ்முல் கப்பாரா என்பது,
I ஷ.ஃபான் மாதத்தில் 15வது நாள் நிறைவேற்றப்படும் நோன்பு
II ரமழான் மாதத்தில் 27வது நாள் நிறைவேற்றப்படும் நோன்பு

III நேர்ச்சையாக நிறைவேற்றப்படும் நோன்பு

IV இபாதத்துக்களின் போது விடுபட்ட தவறுகளுக்கு தண்டனையாக நிறைவேற்றப்படும் நோன்பு

V ஷவ்வால் ஆறு நோன்பு

**11** நோன்பின் பயன்களைக் குறிக்கும் தொகுதி,

A இறையச்சம் B ஈமான் C உணவுக்கட்டுப்பாடு

D தியாகம் E இரவு விழித்திருத்தல்

I Aயும் Dயும் II Bயும் Cயும் III Cயும் Eயும்

IV Bயும் Dயும் V Aயும் Bயும்

**12** சுன்னத்தான நோன்பு நோற்க அனுமதிக்கப்படாத மாதம்,

I ரமழான் III ஷவ்வால் V துல்க.்.தா

II துல்ஹஜ் IV முஹர்ரம்

**13** ரமழான் மாதத்தில் நிறைவேற்றும் விசேடமான சுன்னத்தான அமல்,

I தஸ்பீஹ் தொழுகை IV தஹஜ்ஜுத் தொழுகை

II தராவீஹ் தொழுகை V கியாமுல்லைல் தொழுகை

III வித்ர் தொழுகை

**14** நீர் ஏதாவது ஒரு மாதத்தில் சுன்னத்தான நோன்பு நோற்கவுள்ளீர். அதற்கு பொருத்தமான தினங்கள்,

I திங்கள், வியாழன் IV திங்கள், செவ்வாய்

II வியாழன், வெள்ளி V வியாழன், ஞாயிறு

III சனி, ஞாயிறு

**15** ரமழானில் நோன்பு நோற்றவர், நோற்காதவர் அனைவரும் நிறைவேற்ற வேண்டிய கட்டாயமான ஒரு அமல்,

I ஸகாதுல் பித்ர் IV ஸகாத்

II ஸதகா V இப்தார் ஏற்பாடு

III உழ்ஹிய்யா

**16** ரமழான் மாத பகற்காலங்களில் கணவன் மனைவி உடலுறவில் ஈடுபடுவது,

I ஹலால் IV ஸுன்னத்

II ஹராம் V முபாஹ்

III வாஜிப்

**17** நோன்பு நோற்பதற்கு தடை செய்யப்பட்ட நாட்கள் அல்லாதது.

I நோன்புப் பெருநாள் IV சந்தேகத்துக்குரிய நாள்

II ஹஜ்ஜுப் பெருநாள் V அய்யாமுல் பீழ்

III அய்யாமுத் தஷ்ரீக்

**18** நோன்பாளிகளுக்கொன்றே தயாரிக்கப்பட்ட சுவனவாயில்,

I பாபுர் ரையான் IV பாபுர் ரஹ்மத்

II பாபுல் ஜிஹாத் V பாபுல் ஜன்னத்

III பாஸ் ஸலாத்

**19** பின்வருவனவற்றுள் நோன்பு நோற்க தடுக்கப்படாத நாட்கள்,

I நோன்புப் பெருநாள்
II அய்யாமுத் தஷ்ரீக்
III சந்தேகத்துக்குரிய நாட்கள்
IV ஹஜ்ஜுப் பெருநாள்
V திங்கள், வியாழன்

**20** அறபா நோன்பு நோற்பது துல்ஹஜ்,
I 7ம் நாள் II 8ம் நாள் III 9ம் நாள் IV 10ம் நாள் V 11ம் நாள்

21 ஆஷூரா நோன்பு நோற்க்கப்படும் மாதம்,
I முஹர்ரம் II ரஜப் III துல்க..தா IV ஷ..பான் V துல்ஹஜ்

**22** பெருநாள் தினங்களில் நோன்பு நோற்பது,
I ஹராம் II ஹலால் III முபாஹ் IV ஸுன்னத் V மக்ரூஹ்

**23** ''ஷஹ்ருஸ்ஸப்ர்'' (பொறுமையின் மாதம்) என சிறப்பிக்கப்படும் மாதம்,
I முஹர்ரம் II ஸபர் III ரமழான் IV ரபீஉல்அவ்வல் V துல்ஹஜ்

**24** ஷவ்வால் பிறை 01இல் முஸ்லிம்களால் நிறைவேற்றப்படும் கிரியை,
I நோன்பு
II ஸுன்னத்தான நோன்பு
III ஹஜ்ஜுப் பெருநாள்
IV நோன்புப் பெருநாள்
V மினாவில் கல்லெறிதல்

**25** முஹர்ரம் பிறை 9, 10ஆம் நாட்களில் நோற்கப்படும் நோன்பு,
I தாஸுஆ, ஆஷுரா
II ஆஷுரா, தாஸுஆ
III அய்யாமுத் தஷ்ரீக்
IV அய்யாமுல் பீழ்
V ஸியாமுஷ் ஷவ்வால்

**26** ரமழானுக்கு அடுத்ததாக முஸ்லிம்கள் அதிகமாக நோன்பு நோற்க வேண்டிய மாதம்,
I முஹர்ரம் II ரஜப் III துல்க..தா IV ஷ..பான் V துல்ஹஜ்

**27** ரமழான் என்பதன் பொருள்,
I நோன்பு மாதம்
II சுட்டெரித்தல்
III பொருந்திக் கொள்ளல்
IV பிரார்த்தனை
V அருள்

**28** ரமழானில் நோன்பு நோற்க சக்தியற்றவர்கள் என்ன செய்ய வேண்டும்?
I கடைகளில் உணவருந்த வேண்டும்
II ஒவ்வொரு நோன்புக்கும் ஒவ்வொரு ஏழைக்கு உணவளிக்க வேண்டும்
III வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்
IV வானொலிப் பெட்டியை சப்தமாக வைத்துக் கொண்டிருக்க வேண்டும்
V நோன்பாளிகளுக்கு உதவிகளைச் செய்ய வேண்டும்

**29** இஸ்லாமிய மாதங்களில் ரமழான் எத்தனையாவது மாதம்,
I 01 II 03 III 09 IV 11 V 12

**30** ''இந்த அமல் எனக்குரியது அதற்கு நானே கூலி கொடுப்பேன்'' என அல்லாஹ் கூறிய அமல்,
I தொழுகை II நோன்பு III ஸகாத் IV ஹஜ் V ஜிஹாத்

**31** நோன்புப் பெருநாள் கொடுக்கப்படும் தர்மம்,
I அகீகா II உழ்ஹிய்யா III ஸகாத் IV ஸதகதுல் பித்ர் V ஹதீய்யா

**32** நோன்பு நோற்பதற்கு தடை செய்யப்பட்டுள்ள நாட்கள்,
A ஷ..பான் மாதம் முதலாவது பிறை
D சந்தேகத்துக்குரிய நாட்கள்

B நோன்புப் பெருநாள்

C ஹஜ்ஜுப் பெருநாள்

E அய்யாமுஷ் ஷுத்

I ABCE II ABCD III BCDE IV ABDE V ACDE

**33** நோன்பின் மூலம் உருவாகும் குணப்பண்புகள்,

A தக்வா

B மனக்கட்டுப்பாடு

C பொறுமையின்மை

D நேரமுகாமைத்துவமும் கட்டுப்பாடும்

E மனித நேயம்

I ABCD II BCDE III ABCE IV ABDE V ACDE

**34** சுன்னத்தான நோன்புகள் அடங்கிய தொகுதி,

A ஆஷுரா, தாஸுஆ

B நத்ர் நோன்பு

C ஷவ்வால் மாத 6 நோன்பு

D அரபா நோன்பு

E அய்யாமுல் பீழ் நோன்பு

I ABCD II ABED III ABCE IV BCDE V ACDE

**35** ஒவ்வொரு வாரமும் நோன்பு நோற்பதற்கு ஸுன்னத்தாக்கப்பட்ட நாட்கள் அல்லாதவை,

I புதன், வியாழன்

II சனி, ஞாயிறு

III திங்கள், செவ்வாய்

IV செவ்வாய், வியாழன்

V திங்கள், வியாழன்

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1. நோன்பின் முக்கியத்துவத்தையும் பயன்களையும் ஆராய்க? (10)
2. நோன்பின் மூலம் உருவாகும் குணப்பண்புகள் யாவை என விளக்குக? (5)
3. ஒரு முஸ்லிமின் ஆளுமை விருத்தியில் அப்பண்புகளை ஆராய்க? (5)
4. நோன்பு காலத்தில் இலங்கை முஸ்லிம்களிடையே காணப்படும் பழக்க வழக்கங்களை விளக்குக? (5)
5. ரமழான் காலத்தில் சமூகத்தில் காணப்படும் பிழையான செயற்பாடுகளை ஆராய்க? (5)

# வினா – 27

**ஹஜ்ஜின் சிறப்புக்களைக் குறிப்பிடுக.**

- ஹஜ் என்ற பதம் தரிசித்தல், நாடுதல் எனும் கருத்துக்களைத் தருகின்றது.
- ஐம்பெரும் கடமைகளில் இறுதியானதாக அமையும் ஹஜ்ஜை ஷரீஅத் நோக்கில் பின்வருமாறு குறிப்பிடலாம். துல்ஹஜ் பிறை 8-13 வரையுள்ள தினங்களில் குறித்த சில நிபந்தனைகளுக்கு உட்படுகின்ற முஸ்லிம்கள் ஹஜ்ஜுக்குரிய விதிமுறைகளை அனுசரித்து புனித மக்கமா நகரத்திலுள்ள குறித்த தலங்களுக்குச் சென்று அல்லாஹ்வுக்காக நிறைவேற்ற வேண்டுமென விதிக்கப்பட்டுள்ள கடமையினை குறிக்கின்றது.''

**ஹஜ்ஜின் சிறப்புக்கள்**

- **அமல்களில் சிறந்தது** – ‘‘செயல்களில் சிறந்தது எது என நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. ... ‘‘ஏற்றுக்கொள்ளப்படும் ஹஜ் என்றார்கள். (புகாரி)
- **அன்று பிறந்த பாலகர்** - ‘‘உடலுறவு மற்றும் பாவமான செய்லகளில் ஈடுபடாமல் ஒருவன் அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்தால் அவன் அவனது தாய் பெற்றெடுத்த நாளில் இருந்ததைப் போன்று (பாவமறியாத பாலகனாக) திரும்புவான்’’ (புகாரி)
- **சுவனமே பரிசு** – ஓர் உம்ரா செய்வது மறு உம்ரா வரையில் உள்ள பாவங்களின் பரிகாரமாகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுக்கு சொர்க்கத்தைத் தவிர வேறு கூலியில்லை’’ (புகாரி)
- **தவிடு பொடியாக்கும் தவறுகள்** - நிச்சியமாக ஹஜ் அதற்கு முன்னால் உள்ள பாவத்தைத் தகர்த்தெறிந்து விடுகின்றது (முஸ்லிம்)
- எச்சரிக்கை – ‘‘யார் வசதியிருந்தும் ஹஜ் செய்யவில்லையோ அவர் யஹூதியாகவோ நஸாராவாகவோ மரணிக்கட்டும்’’ (திர்மிதி)

# வினா – 28

**ஹஜ்ஜின் முக்கியத்துவத்தினை விளக்குக.**

- குர்ஆனும், ஸுன்னாவும் ஹஜ்ஜின் முக்கியத்தைக் கூறுகின்றன. ‘‘நாம் இந்த ஆலயத்தை மனிதர் ஒதுங்கும் தலமாகவும் அபயமளிக்கக் கூடியதாகவும் ஆக்கினோம்.’’(2:125) ‘‘அல்லாஹ்வுடைய தூதுவர்கள் மூன்று வகையினர். அவர்களில் இருவராக ஹஜ்ஜுக்குச் செல்வோர், உம்ராச் செய்வோர்.’’(நஸாஈ) என குறிப்பிட்டார்கள்
- இவ்வுலக வாழ்வு தற்காலிகமானது மறுமை வாழ்வு நிரந்தரமானது என்ற இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையை ஆழப் பதியவைக்கும் கடமை.
- அல்லாஹ்விற்கு அடிமைப்படுதல், தன்னை அர்ப்பணித்தல், தியாகம் செய்தல் முதலான பண்புகளை வளர்க்கின்ற கடமை.
- மனித குலம் பிரதேச, நிற, குல, கோத்திர, மொழி, அடிப்படையில் பிரிக்க முடியாதவர்கள் எனும் தத்துவத்தை வருடாவருடம் உலகிற்கு எடுத்துக் காட்டும் கடமை.
- முஸ்லிம்கள் ஓர் இறைவனை ஏற்று , ஒரு கொள்கையின் அடிப்படையில் வாழ்நது ஓர் இலக்கை நோக்கிச் செல்லும் தனித்துவமானவர்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தும் கடமை.
- புனித மக்கமா நகரை அடிபப் டையாக வைதது இகக் டமை செயறப் டுதத் பப் டுவதால் நபிமார்களது வரலாறுகளை நினைவுபடுத்தி ஒரு முஸ்லிம் தனது பணியினை திட்டமிட்டுக் கொள்ள வழி வகுக்கும் கடமை.
- சைத்தானுக்கும், மனோ இச்சைக்கும் எதிரான முஸ்லிமினது போராட்டத்திற்குச் சிறந்ததோர் பயிற்சிக் களத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் கடமை.
- ஹஜ்ஜுக்காக அணியும் ஆடை எளிமையான வாழ்வை மேற்கொள்ளப் பயிற்சி அளிப்பதோடு மறுமையை நினைவு கூர்வதற்கும் அடிப்படையாக உள்ளமை.

## வினா – 29

ஹஜ்ஜின் நோக்கங்களை விளக்குக.

1. **அகீதா சார்ந்த நோக்கங்கள்**
    - தௌஹீதை நிலை நாட்டுதல்
    - அல்லாஹ்விற்கு முற்றிலும் அடிமைப்படல்
    - வணக்க வழிபாடுகளில் குப்ர் சமூகத்திற்கு முரண்படுதல்
    - அல்லாஹ்வை நினைவுபடுத்துவதும் அதில் தொடர்ந்தும் நிலைத்திருக்கச் செய்வதற்குமான பயிற்சி பெறல்.
    - ஹஜ்ஜின் தலங்களை முக்கியத்துவப்படுத்தல் அல்லாஹ்விற்றாக அர்ப்பணித்தல்
2. **பிக்ஹ் சார்ந்த நோக்கங்கள்**
    - முஸஸ்லிம் சமூகத்திற்கு இஸ்லாமிய சட்டங்களை பின்பற்றுவதில் இலகுதன்மையை ஏற்படுத்தல்
    - இஸ்லாமிய சட்டங்களைப் பேணுவது வளர்க்கப்படுகின்றது.
3. **அறிவு சார்ந்த நோக்கங்கள்.**
    - மார்க்கம் பற்றிப் பொதுவாகவும் ஹஜ் பற்றிக் குறிப்பாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்
    - பலர் ஒன்று கூடுவதனால் ஏற்படும் அனுபவங்கள்.
4. **பொருளாதாரம் சார்ந்த நோக்கங்கள்**
    - ஹலாலாகச் செலவு செய்வதற்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
    - செல்வத்தை அல்லாஹ்வுக்காகச் செலவு செய்து அனுபவித்தல்
    - ஹஜ் கிரியை நடைபெறும் பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வருமானம் சேர்த்தல்.
5. **சமூகவியல் சார்ந்த நோக்கங்கள்**
    - உடற் சுத்தம் பேணுதல்
    - பெரும் பாவம், வீண் வார்த்தைகளிலிருந்து தவிர்ந்திருக்கச் செய்தல்
    - அடுத்தவர்களை மதித்து நடத்தல்
    - ஒழுங்கு பேணுதல், நேரத்திற்கு இயங்கச் செய்தல்
    - முஸ்லிமினது உயிர், மானம், செல்வம் என்பவற்றுக்கான பாதுகாப்பு உத்தரவாதம்
    - முஸ்லிம் உம்மத்தின் ஒருமைப்பாடு வலியுறுத்தப்படல்
    - இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளோடு(மக்கா, மதீனா) நெருக்கத்தை ஏற்பாடுத்தல்
    - ஆன்மீக, லௌகீக பயன்பாடுகளை அடைந்து கொள்ளச் செய்தல்

## வினா – 30

ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டும் மூன்று வகைகள் (MCQ)

1. **தமத்து.ஃ.** - சுகம் பெறுதல், அவகாசம் பெற்றுக் கொள்ளல் என்று அர்த்தம் உம்ராவுக்கு வேறாகவும் ஹஜ்ஜுக்கு வேறாகவும் இஹ்ராம் கட்டுவது
2. **கிரான் -** சேர்த்துச் செய்தல் என்பது பொருள் உமாராவையும் ஹஜ்ஜையும் ஒன்றாகச் செய்ய இஹ்ராம் கட்டுதல்
3. **இ.ஃப்ராத் -** தனித்துச் செய்தல் ஹஜ்ஜுக்கு வேறாகவும் உம்ராவுக்கு வேறாகவும் இஹ்ராம் கட்டுதல்

## வினா – 31

**ஹஜ்ஜின் மீகாதுகள் (ஆஊஞு)**

1. துல்ஹுலைபா : மதீனாவிலிருந்தும் அதற்கு வடக்கெ இருந்தும் வருபவர்களது மீகாத்
2. அல் ஜுஹ்பா: சிரியா, துருக்கி வழியாக வருபவர்களுக்கான மீகாத்
3. கர்னுல் மன்ஸில் : நஜ்த், பாரசீகக் குடாவழியாக வருபவர்களுக்குரிய மீகாத்.
4. யலம்லம் : யமன், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, மலேசியா போன்ற பிரதேசங்களிலிருந்து வருவோருக்குரிய மீகாத்
5. தூத்துல் இராக் அல்லது ஸ.்.த், ஈராக், ஈரான் வழியாக வருவோருக்குரிய மீகாத்.

## வினா – 22

**ஹஜ்ஜின் பர்ளுகள் / அர்கான்கள் (MCQ)**

- நிய்யத்து வைத்தல்
- துல்ஹஜ் 9ம் நாள் அறபாவில் தரித்தல்
- தவாபுல் இபாழாவை நிறைவேற்றல்
- ஸஈ செய்தல்
- தலைமுடி களைதல்
- ஒழுங்கு முறையாகச் செய்தல்

## வினா – 33

**ஹஜ்ஜின் வாஜிபுகள் (MCQ)**

- மீக்காத்தில் நிய்யத்து வைத்தல்
- துல்ஹஜ் 10ம் நாள் முஸ்தலிபாவில் தரித்தல்
- அய்யாமுத் தஷ்ரீக் உடைய நாட்களில் மினாவில் தங்குதல்
- துல்ஹஜ் 10ம் நாள் ஜம்ரதுல் அகபாவில் 7 கற்களை வீசுதல்
- அய்யாமுத் தஷ்ரீக் உடைய நாட்களில் மதியத்திற்குப் பின் 3 ஜம்ராக்களிலும் கல்வெறிதல்
- தவாபுல் விதாவை நிறைவேற்றுதல்

## வினா – 34

**ஹஜ்ஜின் ஸுன்னத்துக்கள் (MCQ)**

- குளித்தல் - நிய்யத்துக்கு முன், மக்காவுக்குள் நுழையும் முன், தறபா, முஸ்தலிபாவில் தங்கருவதற்கு முன், ஜம்ராக்கலில் கல்லெறிய முன், தவாப் செய்யும் முன்
- நிய்யத்துக்கு முன் மணம் பூசிக்கொள்வது
- நிய்யத்தை வாய்ல மொழிதல்
- தல்பிய்யா ஓதுதல்
- தவாபுல் குதூம் நிறைவேற்றல்
- துல்ஹஜ் 9ம் நாள் மினாவில் தங்குதல்
- குறிப்பிட்ட இடங்களிவ் குறிப்பிட்ட துஆக்களை ஓதுதல்
- ஸம் ஸம் நீரை அதிகம் குடித்தல்

## வினா – 35

**ஹஜ்ஜின் போது விலக்கப்பட்ட (முஹர்ரமாத்/முப்திலாத்) செயல்கள் (MCQ)**

- ஆண்கள் தைக்கப்பட்ட ஆடை அணிவது
- மணம் பூசுவது
- எண்ணெய் தேய்ப்பது (தலைமுடி, தாடி)
- முடிகளை களைவது, நகம் வெட்டுவது
- மணமுடிப்பது, முணமுடித்து வைப்பது
- உடலுறவில் ஈடுபடுவது அல்லது அது தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடுவது
- ஆண்கள் தலையை மறைப்பது
- பெண்கள் முகத்தை மறைப்பது
- வேட்டையாடுவது
- ஹரத்தின் எல்லைக்குள் மரம், செடிகளை வெட்டுவது

# வினா – 36

**ஹஜ்ஜின் ஆன்மீக, லௌகீக பயன்பாடுகளை விளக்குக.**

**1. ஆன்மீகப் பயன்பாடுகள்**

- தக்வா இறையச்சம் ஏற்படுதல்.
- அடிமைப்படல், அர்ப்பணிப்பு, தியான உணர்வு என்பன வளர்தல்.
- பாவமன்னிப்புக் கிடைத்தல்.
- அதிக நன்மையும், சுவர்க்கமும் கிடைத்தல்.
- முற்றிலும் அல்லாஹ்விடம் தன்னைப் பாரம் சாட்டும் நிலை தோன்றுதல்
- மறுமைச் சிந்தனையைத் தோற்றுவித்தல்.
- இறை சிந்தனையுடன் வாழ வழி செய்தல்.
- பிறருக்காகப் பிரார்த்திக்கவும், சிபாரிசு செய்யவும் வாய்ப்புக் கிடைத்தல்
- கட்டுப்பாடான வாழ்க்கைப் பயிற்சி

**2.லௌகீகப் பயன்பாடு**

- உலகளாவிய முஸ்லிம் உம்மத்தில் தானும் ஒருவன் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றது.
- சகோதரத்துவ உணர்வை வளர்க்கின்றது.
- முஸ்லிம்களது தனித்துவத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றது.
- கூட்டு வாழ்க்கைப் பயிற்சி, மனப்பக்குவத்தை வழங்குகின்றது.
- பிரயாண அனுபவம், வாழ்க்கையில் சிரமங்களை சகித்துக் கொள்ளும் மனப்பக்குவம் ஏற்படுகின்றது.
- மனித நேயம் வளர்க்கப்படுகின்றது.
- சர்வதேச சமாதானத்திற்கு வித்திடுகின்றது.

**பகுதி i**

**மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க**

**01** ஹஜ்ஜிலும் உம்ராவிலும் இடம் பெறும் ஒரு செயற்பாடு,

I தவாப் செய்தல்

II அறபாவில் தரித்தல்

III குறிப்பிட்ட காலத்தில் மட்டும் நிறைவேற்றுதல்

IV ஜம்ராக்களில் கல்லெறிதல்

V மினாவில் தங்குதல்

**02** உம்ராவில் இடம் பெறாத செயல்,

I இஹ்ராம் II ஸஈ III தவாப் IV ஹல்க் V அறபாவில் தரித்தல்

**03** உடலாலும் பொருளாலும் இடம் பெறும் இபாதத்,

I கலிமா II தொழுகை III நோன்பு IV ஸகாத் V ஹஜ்

**04** ‘‘ஹஜ்ஜை முறையாக நிறைவேற்றித் திரும்புபவர் எத்தகைய குற்றமுமற்றவர் போன்று திரும்பி வருவார்’’ என்ற கூற்று

I அல்குர்ஆனின் கூற்று
II நபியின் கூற்று
III இமாம் ஷாபியின் கூற்று
IV இமாம் கஸ்ஸாலியின் கூற்று
V இமாம் அஇம்மதுல் அர்பஆவின் கூற்று

**05** ஹஜ், உம்ரா பற்றிய கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஹஜ்ஜுடன் தொடர்பான கிரியைகளை விளக்கும் தொகுதி,

A எந்த மாத்திலும் நிறைவேற்றலாம்
B அறபாவில் தரிக்க வேண்டும்
C தவாப் செய்தல் வேண்டும்
D ஸஈ இடம் பெறுதல் வேண்டும்
E குறிப்பிட்ட மாதத்தில் நிறைவேற்ற வேண்டும்
F மினா, முஸ்தலிபா கிரியைகள் இல்லை
G இஹ்ராம் களையும் வரை துர்வார்த்தை பேசலாகாது

I BDFG II ABCD III CDEF IV BCDE V ADEF

**06** ஹஜ்ஜின் பர்ளுகளை உள்ளடக்கியத் தொகுதி,

I நிய்யத்து வைத்தல், அறபாவில் தரித்தல், ஜம்ராக்களில் கல்லெறிதல்
II அறபாவில் தரித்தல், தவாபுல் இபாழா, ஸஈ செய்தல்
III நிய்யத்து வைத்தல், அறபாவில் தரித்தல், முஸ்தலிபாவில் தரித்தல்
IV அறபாவில் தரித்தல், ஸஈ செய்தல், மினாவில் தரித்தல்
V நிய்யத்து வைத்தல், தவாபுல் இபாழா, முஸ்தலிபாவில் தரித்தல்

**07** உம்முடன் ஹஜ்ஜுக்குச் சென்ற ஒருவர் கிப்லா மாற்றப்பட்ட பள்ளியை தனக்குக் காண்பிக்குமாறு உம்மிடம் கேட்கிறார். உமது சரியான பதில்,

I மஸ்ஜிதுல் உமர்
II மஸ்ஜித் அபூதர் அல்கிப்பாரி
III மஸ்ஜிதுல் குபா
IV மஸ்ஜிதுல் கிப்லதைன்
V மஸ்ஜிதுன் நபவி

**08** மூன்று ஜம்ராக்களும் அமைந்திருப்பது,

I மதீனாவில் II மக்காவில் III மினாவில் IV முஸ்தலிபாவில் V தாயிபில்

**09** கஃபதுல்லாவின் புனர்நிர்மானப் பணிகளை முடித்து பின்னர் ஹஜ் வணக்கத்தை ஆரம்பித்து வைத்த நபி,

I இப்றாஹீம் (அலை)
II தாவூத் (அலை)
IV ஸுலைமான் (அலை)
V முஹம்மது நபி (ஸல்)

III இஸ்மாயீல் (அலை)

10 இறுதி ஹஜ்ஜின் போது நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்திய விடயங்களின் தொகுதி,

A அஜ்னபியை விட அறபி மேலானவன்
B பெண்கள் விடயத்தில் அல்லாஹ்வை அஞ்சுங்கள்
C பழிக்குப் பழி கிடையாது
D வட்டி தடுக்கப்பட்டுள்ளது
E முஹாஜிரை விட அன்ஸாரிக்கு விசேட உரிமை உண்டு
F அடிமைகள் விடயத்தில் நீதமாக நடந்து கொள்ளுங்கள்

I ABCD II BCDE III EDCB IV AEDF V BCDF

11 X, Y என்னும் நிரல்களின் கீழ் சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டவை X நிரலில் உள்ளவற்றுடன் ஏதேனும் ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் சரியான ஒழுங்கில் தரப்படவில்லை. X நிரலில் தரப்பட்டவை Y நிரலில் உள்ளவற்றுடன் சரியாக ஒழுங்குபடுத்தும் போது ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியாக அமையும். சுரியான சேர்மானத்தை தெரிவு செய்க.

| | X | | Y |
|---|---|---|---|
| i | துல்ஹஜ் பிறை 9 | A | ஆஷூரா |
| ii | முஹர்ரம் பிறை 10 | B | அய்யாமுஸ்ஸூத் |
| iii | துல் ஹஜ் பிறை 11, 12, 13 | C | அறபா |
| iv | பிரதி மாதம் 27, 28, 29 | D | அய்யாமுத்தஷ்ரீக் |
| v | முஹர்ரம் பிறை 9 | E | தாஸூஆ |

I CADBE II CDAEB III CAEDB IV DBECA V CAEBD

12 ஹஜ் செய்பவர் துல்ஹஜ் ஒன்பதாம் நாளன்று கட்டாயம் தரிக்க வேண்டிய இடம்,

I க.்.பதுல்லாஹ்
II அறபா
III மினா
IV முஸ்தலிபா
V ஸபா, மர்வா

13 ஹஜ் கிரியையின் போது அதிகம் நினைவு கூறப்படும் இறைதுதர்,

I ஆதம் (அலை)
II நூஹ் (அலை)
III இப்றாஹீம் (அலை)
IV மூஸா (அலை)
V ஹூத் (அலை)

14 ஹஜ் கடமையுடன் தொடர்புடைய 3 கடமைகள்,

I மினாவில் தங்குதல், அறபாவில் தரித்தல், முஸ்தலிபாவில் தங்குதல்
II அறபாவில் தரித்தல், மதீனாவுக்குச் செல்லல், முஸ்தலிபாவில் தங்குதல்
III ஹிராக்குகையை தரிசித்தல், அறபாவில் தரித்தல், முஸ்தலிபாவில் தங்குதல்
IV அறபாவில் தரித்தல், முஸ்தலிபாவில் தங்குதல், மதீனாவுக்கு ஸயாரத் செய்தல்
V அறபாவில் தரித்தல், முஸ்தலிபாவில் தங்குதல், ஹஜருல் அஸ்வத்தை முத்தமிடல்

15 ஸபா, மர்வா, க.்.பா, ஹல்கு என்பவற்றுடன் மட்டும் தொடர்புடைய ஓர் அமல்,

I உம்ரா
II ஹஜ்
III ஹஜ்ஜும் உம்ராவும்
IV தவாப்
V ஸஈ

16 அய்யாமுத்தஷ்ரீக் உடைய இரவுகளில் எங்கு தங்கியிருக்க வேண்டும்?
I அறபாவில்
II முஸ்தலிபாவில்
III ஹரம் ஷரீபில்
IV ஸபா – மர்வாவில்
V மினாவில்

17 உடலாலும் பொருளாலும் நிறைவேற்றப்படும் வணக்கம்,
I தொழுகை
II நோன்பு
III ஸகாத்
IV ஹஜ்
V ஜிஹாத்

18 ஹஜ்ஜுக்காக நிய்யத்து வைக்கும் இடம்,
I யலம்லம்
II துல்குலைபா
III அவ்காத்
IV மீக்காத்
V ஜம்ராத்

19 ஹஜ்ஜுக்கு வேறாகவும் உம்ராவுக்கு வேறாகவும் நிய்யத்து வைக்கும் முறை,
I அத்தமத்தஉ
II அல்கிரான்
III அல்இப்றாத்
IV அல்இத்லாக்
V நிய்யதுல் ஹஜ்

20 ஹஜ்ஜில் முஹர்ரமாத் என்பது எதனைக் குறிக்கின்றது,
I ஹஜ்ஜின் அர்கான்கள்
II ஹஜ்ஜின் வாஜிப்கள்
III ஹஜ்ஜின் சுன்னத்துக்கள்
IV ஹாஜிகள் தவிர்க்க வேண்டிய விடயங்கள்
V ஹஜ்ஜின் நிபந்தனைகள்

21 துல்ஹஜ் பிறை 10ல் நடுநிசிக்குப் பின்னர் ஹஜ்ஜின் போது மேற்கொள்ளப்படுகின்ற கிரியை,
I அறபாவில் தவிர்த்தல்
II மக்காவில் தங்குதல்
III யலம்லம்மில் தரித்தல்
IV முஸ்தலிபாவில் தரித்தல்
V மினாவில் தங்குதல்

22 ஹஜ் கடமையுடன் தொடர்புபடாத கிரியைகள்,
I அறபாவில் தரித்தல், முஸ்தலிபாவில் தங்குதல்
II மதீனாவுக்குச் செல்லல், தொங்கோட்டம் ஓடுதல்
III ஹிராக்குகையை தரிசித்தல், ஜன்னதுல் பகீயை தரிசித்தல்
IV முஸ்தலிபாவில் தங்குதல், மதீனாவுக்கு ஸியாரத் செல்லல்
V அறபாவில் தரித்தல், மதீனாவுக்கு ஸியாரத் செய்தல்

23 ஹஜ்ஜில் இறுதியாக நிறைவேற்றப்படும் தவாப்,
I தவாபுல் அகீரா
II தவாபுல் குதூம்
III தவாபுல் இபாழா
IV தவாபுல் விதா
V தவாபுல் அவ்வல்

24 ஹஜ்ஜில் ஆரம்பமாக நிறைவேற்றப்படும் தவாப்,
I தவாபுல் அகீரா
II தவாபுல் குதூம்
III தவாபுல் இபாழா
IV தவாபுல் விதா
V தவாபுல் அவ்வல்

25 ஹஜ்ஜில் "தம்" என்பது எதனைக் குறிக்கின்றது,

I குர்பான் கொடுத்தல்
II முடி சிரைத்தல்
III ஸபா, மர்வாவுக்கிடையில் தொங்கோட்டம் ஓடுதல்
IV மினாவில் கல்லெறிதல்
V நிய்யத்துடன் இஹ்ராம் உடை தரித்தல்

26 ஹஜ்ஜுப் பெருநாளில் உழ்ஹிய்யா கொடுப்பதற்கான கால எல்லை,

I துல்ஹஜ் மாதம் பிறை 1-13 வரை
II துல்ஹஜ் மாதம் பிறை 9-11 வரை
III துல்ஹஜ் மாதம் பிறை 10-13 வரை
IV துல்ஹஜ் மாதம் பிறை 11-13 வரை
V துல்ஹஜ் மாதம் பிறை 11-14 வரை

27 ஹஜ் கடமையுடன் தொடர்பான கிரியைகள்,

A அறபாவில் தரித்தல்
B நபி (ஸல்) அவர்களின் கப்ரை ஸியாரத் செய்தல்
C முஸ்தலிபாவில் தங்குதல்
D தவாபுல் இபாழாவை நிறைவேற்றல்
E ஸபா – மர்வா மலைகளுக்கிடையில் தொங்கொட்டம் ஓடுதல்

I ABCD  II BCDE  III ACDE  IV DEAB  V ABCE

28 ஹஜ்ஜின் ஆன்மீகப் பயன்களாவன,

A ஆன்மீகப் பரிசுத்தம் ஏற்படல்
B மறுமை பற்றிய சிந்தனை வளருதல்
C பாவமன்னிப்பு கிடைத்தல்
D தியாக உணர்வு ஏற்படுதல்
E கூட்டு வாழ்க்கைக்கான பயிற்சி

I ACDE  II ABCE  III ABCD  IV BCDE  V ABDE

1 ஹஜ்ஜில் மீக்காத் என்பது யாது?
2 ஹஜ்ஜில் நிறைவேற்றப்படுகின்ற உம்ராவில் விடப்படுகின்ற கடமை யாது?
3 ஹஜ்ஜில் ஸஃ என்றால் என்ன?
4 ஜம்ரா என்பது யாது?
5 தவாபுல் இபாழா என்றால் என்ன?
6 தல்பிய்யா என்றால் என்ன?
7 ஹஜ் என்பதன் மொழிக்கருத்து யாது?
8 ஸஃ என்பது எதனைக் குறிக்கும்?
9 மீக்காத் என்றால் என்ன?
10 இலங்கை ஹாஜிகளுக்கான மீக்காத் எல்லை யாது?
11 அத்தமத்து∴ என்பது யாது?
12 அல்கிரான் என்பது யாது?
13 அல்இப்ராத் என்பது யாது?
14 தவாபுல் குதூம் என்பது யாது?
15 தவாபுல் விதா என்பது யாது?
16 ஸபா, மர்வா, க∴பா, ஹல்கு என்பவற்றுடன் தொடர்பான அமல் எது?
17 துல்ஹஜ் பிறை எத்தனையில் அறபா நாள் அமைகின்றது?
18 கிரான் எனும் கடமை சம்பந்தப்படும் கடமை யாது?
19 ஹஜ்ஜின் ஆன்மீக, லௌகீக பயன்பாடுகள் எவை? (8)

# வினா – 37

**ஹுகூகுல்லாஹ் - ஹுகூகுல் இபாத் ஆகியவற்றை விளக்குக.**

- **கூகுல்லாஹ்** - மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் அவன் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகள்
- இஸ்லாத்தின் பார்வையில் ஹுகூகுல்லாஹ்வுக்கு வழங்கப்படும் அதே முக்கியத்துவம் ஹுகூகுல் இபாதத்துக்கும் வழங்கப்படுகிறது. எனினும் செயற்பாட்டைப் பொறுத்த வரை சில சந்தர்ப்பங்களில் ஹுகூகுல்லாஹ்வை இன்னும் சில சந்தர்ப்பங்களில் ஹுகூகுல் இபாதத்தை முதன்மைப்படுத்த வேண்டிய நிலைமைகளும் ஏற்படலாம்.
- **ஹுகூகுல் இபாதத்** - ஒரு மனிதன் தனக்குத் தானே செய்ய வேண்டிய கடமைகள் மற்றும் பிறருக்கும் பிற உயிரினங்களுக்கும் செய்ய வெண்டிய கடமைகள் என்பவற்றைக் குறிக்கும். இவற்றை அலட்சியப்படுத்த முடியாது. மனிதனது உடலும் உயிரும் அல்லாஹ்வினால் அவனுக்கு வழங்கப்பட்டுள்ள அமானிதங்களாகும். ஆவற்றைப் பேணுவது பாதுகாப்பது மனிதனது கடமையாகும்.
- மனிதன் தனது உயிருக்கோ உடலுக்கோ, பிறரது உடலுக்கோ தீங்கு விளைவிப்பதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை.
- இஸ்லாம் பொருத்தமான உணவை அளவோடு உண்ணுமாறு வேண்டுகிறது.
- உடலையும் மானத்தையும் உடையைக் கொண்டு மறைக்க வழிகாட்டுகின்றது.
- உள்ளத்திற்கும் உடலுக்கும் ஓய்வு வழங்குமாறு கூறுகின்றது. ‘‘மக்கள் மறந்திருக்கக் கூடிய இரண்டு அருள்கள் உள்ளன. அவை ஆரோக்கியமும் ஓய்வும் ஆகும்’’ (புகாரி, முஸ்லிம்) ‘‘அடிக்கடி உங்கள் உள்ளங்களுக்கு ஓய்வு கொடுங்கள். ஏனெனில் சோர்வுற்ற உள்ளம் இருளடைந்து விடும்’’ -அலி (ரழி)
- இஸ்லாம் சுத்தத்தை வலியுருத்தி சுகவாழ்விற்கு மனிதனை இடடுச் செல்கின்றது’’ ‘‘அல்லாஹ் பரிசுத்தமானவர்களை யெ நேசிக்கின்றான்’’ (9:108)
- ஆரோக்கியம் …. புலசாலியான ஒரு மு.ஃமின் பலவீனமான ஒரு மு.ஃமினை விட சிறந்தவனும் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமுடையவன்’’
- பொருத்தமான சிகிச்சை பெறுவதும்…. ‘‘ஒவ்வொரு நோய்க்கும் ஒரு மருந்து இருக்கின்றது’’ ஒரு நோய்க்காக ஒரு மருந்தைப் பயன்படுத்தினால் அல்லாஹ்வின் கருணையால் கிடைக்கின்றது’’
- பிற மனிதர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகைளையும் புறக்கணித்து வாழ முடியாது
- கணவனாக மனைவியாக, தந்தையாக, தாயாக, மகனாக, மகளாக, சகோதரானாக, சகோதரியாக, நிறைவேற்ற வேண்டிய கடமைகளை…..
- குடும்பத்தலைவனாக உணவு, உடை, வீடு பொருத்தமான கல்விக்காக செலவு, சுகவாழ்வு, பாதுகாப்பு, ஒழுக்கம், ஆன்மீகப் பயிற்சி போன்றவற்றை நிறைவேற்றக்கடமைப் பட்டுள்ளனான்.

- அதற்காக உழைப்பது செலவு செய்வது வழிகாட்டுவது குடும்பத்தலைவனுக்கு கடமையாகின்றது. அதே போன்று குடும்பத் தலைவி…..
- உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள்….
- ''அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொண்டவர் தமது அயலாருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளட்டும்'' (முஸ்லிம்)
- அநாதைகள், விதவைகள், நோயாளர்கள், அங்கவீனர்கள், கைவிடப்பட்ட வயோதிபர்கள….
- இவர்களுக்கு தனிப்பட்ட வகையிலும் கூட்டாகவும் சமூகம் உதவ வேண்டும். ஸகாத், ஸதகா, ஸதகதுல் பித்ர் எனவுள்ள பொதுக்கடமைகளை கூட்டாகவும் …..
- சமூக நலன் கருதி செய்ய வேண்டிய பொதுப்பணிகள் இவற்றுள் அடங்கும். பொதுப்பாதைகள், கிணறுகள், கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள். நூலகங்கள், பளிளிவாசல்கள், கழிவறைகள்…. ''நீங்கள் நல்ல விடயங்களில் ஒரு வருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்'' (5:2)
- வறட்சி, வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கை அனர்த்தங்களின் போதும் விபத்து, கலவரம், யுத்தம் போன்ற அசாதாரண சூழ்நிலைகளின் போதும் சமூக நலப்பணிகளில் ஈடுபடுவது…
- ஹுகூகுல் இபாதத்தில் பிற உயிரினங்கள், பௌதீக வளங்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளும் உள்ளடங்குகின்றன.
- உயிரினங்களையும் பௌதீக வளங்களையும் முறையாகப் பயன்படுத்தவது இபாதத்தாகும்.
- பிரபஞ்ச சமநிலையை பேண வேண்டும்
- உயிரினங்களை பளெதீக வளங்களை வீண்விரயம் செய்யக் கூடாது
- உயிரினங்களோடு நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும்
- ''அல்லாஹ்வின் பாதையில் அனைத்துப் படைப்புகளும் அவனது குடும்பங்களாகும். அவற்றில் சிறந்தது அவனது குடும்பத்திற்கு பயனுடையதாகும்'' (புகாரி)
- உயிரினங்களுக்கு தீங்கு செய்வதை, அநியாயமாக அவற்றை அழிப்பதை இஸ்லாம் தடுத்துள்ளது.
    - ''யாராவது ஒரு சிட்டுக் குருவியைக் கொன்றால் அது மறுமையில் இவன் என்னை வீணாகக் கொலை செய்தான்'' (புகாரி)
    - ''பூனையைத் துன்புறுத்திய ஒரு பெண் நரகம் சென்றாள்'' (புகாரி)
    - ''தாகித்த நாயொன்றுக்கு நீர் புகட்டிய ஒரு மனிதனின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டன'' (புகாரி)
- உயிரினங்களோடு இரக்கம் காட்டுதல், தீங்கிழைத்தல், ஓய்வளித்தல், பாதுகாப்புக் கொடுத்தல், உணவு, நீர் முறையாக வழங்குதல்
- மனிதனுக்கு தீங்கு செய்யும் பிராணிகளை சித்திரவதை செய்வதையோ, தீயினால் பொசுக்குவதையோ இஸ்லாம் அனுமதிப்பதில்லை

- அறுவைப் பிராணிகளையும் பண்பாக அறுக்க வேண்டுமென இஸ்லாம் கூறுகின்றது.
- பௌதீக சூழலுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள்

## வினா – 38

**இபாதத்துக்கும் அஹ்லாக்குக்கும் இடையிலான தொடரினை விளக்குக.**

- அஹ்லாக் இஸ்லாத்தின் எல்லாப் பகுதிகயொடும் தொடர்புபடும் ஓர் அடிப்படை அம்சமாகும்
- நபி (ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்பட்டதன் நோக்கம் ''நிச்சியமாக நற்பண்புகளை பூரணப்படுத்துவதற்காகவே நான் நபியாக அனுப்பப்பட்டுள்ளேன்''
- இபாதத்துக்கள் உயர் அஹ்லாக்குக்கு பின்னனியாக இருக்கின்றன.
- தொழுகை தக்வாவையும், இறை நெருக்கத்தையும், உள்ளம் பிரகாசம் அடைவதையும், ஏற்படுத்தவதால் அதன் மூலம் நல்லொழுக்கம் கட்டியெழுப்பப்படுகின்றது. தீய செயல்களில் இருந்து மனிதனை பாதுகாக்கின்றது. ''தொழுகை மானக்கேடான தீய காரியங்களில் இருந்து பாவங்களிலிருந்து மனிதனை விலக்கிவிடும்''
- பிரபஞ்ச வளங்கள் அனைத்தும் அல்லாஹ்விற்கு சொந்தமானவை. மனிதன் எவ்வாறு கையாள்கிறான் என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக விதியாக்கப்பட்டுள்ள கடமையே ஸகாத்.
- இக்கடமையினை நிறைவேற்றுவதனூடாக அன்பு, தயாள சிந்தனை, ஈகை, இரக்கம் எனும் பண்புகளைப் பெறுவதுடன் உலோபித்தனம், உலக ஆசை, அகந்தை எனும் தீய பண்புகள் நீங்கும். ''அவர்களுடைய பொருளைத் தானமான எடுத்துக் கொண்டு அவர்களைப் பரிசுத்தமாக்கி வைப்பீராக! (9:103)
- தக்வாவை இலக்காகக் கொண்டு கடமையாக்கப்பட்டுள்ள நோன்பின் மூலம் பொறுமை, ஈகை, தயாளம், அன்பு போன்ற நற்பண்புகளைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. உள்ளத்தில் தோன்றும் தீய ஆசைகள், உணர்வுகளைக் கட்டுப்படுத்தி அதன் விபரீதங்களில் இருந்து பாதுகாக்கின்றது. ''வெறுமனே உண்ணாமலும் பருகாமலும் இருப்பதல்ல நோன்பு அது தீமையானவற்றிலிருந்தும் மானக்கேடானவற்றிலிருந்தும் விலகி இருப்பதாகும். நீங்கள் நோன்பிருக்கும் போது யாராவது உங்களோடு தர்க்கித்தால் நான் நோன்பிருக்கிறேன்'' என்று சொல்லிவிடுங்கள்'' (இப்னு ஹுஸைமா)
- நபி இப்றாஹீம் (அலை) அவர்களது குடும்பத்தியாகப் பாடத்தைக் கற்றுக் கொடுக்கும் ஒரு கடமையாக ஹஜ் அமைந்துள்ளது. நம்பிக்கை, தியாகம், அர்ப்பணிப்பு, பொறுமை இறையன்பு, சகோதரத்துவம், ஒற்றுமை, ஐக்கியம், மனித நேயம் எனும் இலக்குகளையும் இது கொண்டுள்ளது. ஷைத்தனியத்திற்கெதிராகப் போராடுதல் மனோ இந்நைகளையும் கட்டுப்படுத்தல் எனும் போராட்டப் பயிற்சிக்கும் வழிவகுக்கின்றது. ''எவரேனும் (இஹ்ராம் அணிந்து) ஹஜ்ஜை தன் மீது கடமையாக்கிக் கொண்டால் ஹஜ் வரையில் வீடு கூடுதல், தீச் சொல் பேசுதல், சச்சரவு செய்து கொள்ளுதல் கூடாது'' (2:197)
- இவ்விபாதத்துக்களை நிறைவேற்றும் முறைகளில் வேறுபாடுகள் இருப்பினும் இவை கடமையாக்கப்பட்டதன் நோக்கில் ஒன்றுபடுக்கின்றன. முனிதனைத் தூய்மைப்படுத்தி நல்ல ஒழுக்கத்தில் உயர்த்துவனவாகவே அவை அமைந்துள்ளன.

**பகுதி i**

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1 நிழல்கள் அற்ற இறுதித் தீர்ப்பு நாளில் நிழல் பெறுவோர் என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒரு பிரிவினர்,

I நேரம் தவறாது தொழுகையை நிறைவேற்றுவோர்

II அல்குர்ஆனை மனனம் செய்த பிள்ளைகள்

III இபாதத்துடன் வாழும் இளைஞன்

IV பெற்றொருக்கு உதவி உபகாரம் செய்த பிள்ளை

V நலிவுற்ற மக்களைப் பராமரித்தோர்

**2** ஹக்குல்லாஹ், ஹக்குல் இபாதத், ஹுகூகுல் இன்ஸான், என்பவற்றைக் குறிக்கும் சரியான தொகுதி,

I அல்லாஹ்வுக்குரியது, படைப்பினங்களுக்குரியது, மனித உரிமைகள்

II மனித உரிமைகள், அல்லாஹ்வுக்குரியது, படைப்பினங்களுக்குரியது

III அல்லாஹ்வுக்குரியது, மனித உரிமைகள், படைப்பினங்களுக்குரியது

IV ஜீவராசிகளுக்குரியது, மரணித்தோருக்குரியது, அல்லாஹ்வுக்குரியது

V மரணித்தோருக்குரியது, அல்லாஹ்வுக்குரியது, படைப்பினங்களுக்குரியது

**3** நற்செயல்களில் ஹுகூகுல் இபாதத்துல் அடங்குவது,

I ஐவேளைத் தொழுகை

II அல்லாஹ்வை திக்ர் செய்வது

III அநாதைகளைப் பராமரிப்பது

IV நபி (ஸல்அவர்களைப் பின்பற்றுவது

V வீடுகளைக் கட்டிக் கொடுத்தல்

**4** உள்ளத்தால் நிறைவேற்றப்படும் வணக்கம்,

I திக்ர்

II நோன்பு

III ஸகாத்

IV ஹஜ்

V ஜிஹாத்

**5** ‘‘ஒரு சமூகத்தில் மருத்துவர் சிலராவது இருக்க வேண்டும்’’ என்பது,

I பர்ளு கிபாயா

II சுன்னத்

III முபாஹ்

IV பர்ளு ஐன்

V வாஜிப்

**6** பின்வருவனவற்றுள் ஹுகூகுல்லாஹ் ஆவது,

I அல்லாஹ்வை வணங்கி கட்டுப்படுவது

II சுற்றாடலை பாதுகாப்பது

III மரங்கள், செடிகளை பாதுகாப்பது

IV பாவங்களை களைவது

V மனிதர்களது கடன்களை தீர்ப்பது

## பகுதி ii

**எல்லா வினபக்களுக்கும் விடை எழுதுக.**

**(1)** **I** ஹுகூகுல்லாஹ், ஹுகூகுல் இபாதத் வரைவிலக்கணப்படுத்துக? (2)

**II** ஹுகூகுல் இபாதத்தில் அடங்கும் விடயங்கள் 4 தருக? (4)

## விடைகள்

### இஸ்லாம், பிரபஞ்சம், மனித, வாழ்வு வினாக்கள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | II | | **2** | IV | | **3** | III | | **4** | V | | **5** | IV |
| **6** | II | | **7** | III | | **8** | V | | **9** | II | | **10** | III |
| **11** | II | | **12** | V | | **13** | V | | **14** | I | | **15** | II |
| **16** | IV | | **17** | IV | | **18** | V | | **19** | II | | **20** | V |
| **தொழுகை** | | | | | | | | | | | | | | |
| **1** | IV | | **2** | III | | **3** | I | | **4** | IV | | **5** | V |
| **6** | I | | **7** | I | | **8** | III | | **9** | IV | | **10** | I |
| **11** | I | | **12** | V | | **13** | III | | **14** | IV | | **15** | IV |
| **16** | II | | **17** | V | | **18** | V | | **19** | III | | **20** | I |
| **ஸகாத்** | | | | | | | | | | | | | | |
| **1** | II | | **2** | I | | **3** | II | | **4** | II | | **5** | II |
| **6** | IV | | **7** | II | | **8** | IV | | **9** | II | | **10** | III |
| **11** | III | | **12** | II | | **13** | I | | **14** | I | | **15** | IV |
| **16** | V | | **17** | II | | **18** | IV | | **19** | V | | **20** | III |
| **நோன்பு** | | | | | | | | | | | | | | |
| **1** | II | | **2** | III | | **3** | III | | **4** | IV | | **5** | I |
| **6** | II | | **7** | IV | | **8** | III | | **9** | IV | | **10** | IV |
| **11** | V | | **12** | I | | **13** | II | | **14** | I | | **15** | I |
| **16** | II | | **17** | V | | **18** | I | | **19** | V | | **20** | III |
| **21** | I | | **22** | II | | **23** | III | | **24** | IV | | **25** | I |
| **26** | IV | | **27** | II | | **28** | II | | **29** | II | | **30** | III |
| **31** | IV | | **32** | II | | **33** | V | | **34** | V | | **35** | II |
| **ஹஜ்** | | | | | | | | | | | | | | |
| **1** | I | | **2** | V | | **3** | V | | **4** | II | | **5** | IV |
| **6** | IV | | **7** | IV | | **8** | III | | **9** | IV | | **10** | V |
| **11** | I | | **12** | II | | **13** | III | | **14** | I | | **15** | I |
| **16** | V | | **17** | IV | | **18** | IV | | **19** | I | | **20** | IV |
| **21** | IV | | **22** | III | | **23** | IV | | **24** | II | | **25** | I |
| **26** | III | | **27** | III | | **28** | III | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| **ஹுகூகுல் இபாதத்** | | | | | | | | | | | | | | |
| **1** | | | **2** | | | **3** | | | **4** | | | **5** | |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **6** | | | **7** | | | **8** | | | | | | | |
| **11** | | | **12** | | | **13** | | | | | | | |
| **16** | | | **17** | | | **18** | | | | | | | |

- அன்பும் கருணையும்
- நேரமுகாமைத்துவம் கட்டுப்பாடும்
- பாவமன்னிப்பு
- நன்றி செலுத்துதல்
- பிறர் நலன் பேணல்
- மனித நேயம்
- தக்வா
- மனக்கட்டுப்பாடு
- பொறுமை
- தாராளத்தன்மையும் ஈகையும்
- இஹ்லாஸ்

**II**

மேற்கூறப்பட்ட பண்புகள் எவ்வாறு ஆளமை விருத்தியில் செல்வாக்கு வெலுத்துகின்றுத என்பதை விளக்க வேண்டும் (உதாரணம்: நேரமுகாமைத்துவத்தை எடுத்துக் கொண்டால் நேர்திற்கு ஸகர் செய்தல், உரிய நேரத்திற்கு ஐங்காலத் தொழுகைகள் இரத சுன்னத்தான அமல்களில் ஈடுபடுதல், நோன்பை திறக்கும் செயற்பாட்டை உரிய நேரத்தில் மேந்கொள்ளல், இருவ நேர வணக்கங்களை திட்டமிட்டு தெர்ழுதல் என நோன்பானது நேரத்தை முகாமை செய்யவும் அதன்படி நடக்கவும் வழிப்படுத்ததுகிறது )

**III**

- நோன்புக்கான முன்னாயத்தம் - வீடுகளிலும் மஸ்ஜித்களிலும்
- நோன்பு தொடர்பான நிகழ்ச்சிகள் - இப்தார், பயான், மஜ்லிஸ்
- நோன்பு கால நன்கொடைகள் - அநாதை இல்லம், அங்கவீனர் இல்லம், மத்ரஸா
- ஸகாத்தை ரமழானில் வழக்கமாக்குதல்
- தராவீஹ், கியாமுல்லைல் ஏற்பாடு – விட, மஸ்ஜித்களில்
- புனித குர்அன் ஹிஸ்பு மஜ்லிஸ்கள் நடத்துல்
- 27ம் பிறை இரவை விசேட நிகழ்வுகளாளக கழித்தல்
- குுஞ்சி விசேடத்துவம் பெறல் - மஸ்ஜித்களில் ஏற்பாடு

**IV**

- நோன்பை ஆரம்பிப்பதிலும் முடிப்பதிலும் சமூக ரீதியாக முரண்படல் - பிறை
- இரந்து வாழ்வோர் நாலா பக்கங்களிலும் காட்சியளித்தல்
- இப்தார் இடைஞ்சல் ஏற்படத்தும் வகையில் விளையாடுதல்
- இப்தார் எனும் பெயரிவ் ஆடம்பரமும் வீண்விரயமும்
- ஸக்காத்தின் மூலம் விளம்பரம் செய்தல்
- இஸ்லாமிய நடைமுறைகள் தொடர்பில் வீண் சர்ச்சைகள் ஏற்படல்